தங்கச் சுருள்

அட்சதை என்று அழைக்கப்படும் மஞ்சள் அரிசி மழைபோல மேலே பொழியப்பட்ட போது கனகசபாபதி சிவகாமியின் கழுத்தில் தாலி கட்டினான்

நாதஸ்வரம் உச்சஸ்தாயில் வாசிக்கப்பட, தவில் முழங்க, தேவார திருவாசகங்கள் உரத்த குரலில் ஓதப்பட, கனகசபாபதியும், சிவகாமியும் ஒருவரையொருவர் பார்த்து மெல்லியதாய் சிரித்துக் கொண்டார்கள். மேடையின் விளிம்பில் நின்று சபையினரைப் பார்த்து கை கூப்பினார்கள்.

மொய் எழுதுதலுக்காக நாற்காலி போட்டு இரண்டு பேரும் அருகருகே உட்கார, ஒரு சிறுபையன் கீழே விழுந்த அரிசியை திரட்டிக் கொண்டு வேகமாய் கனகசபாபதியின் முகத்தில் எறிந்தான். அரிசி சுள்ளென்று கன்னத்தையும், காதையும் தாக்கிற்று.

அந்தப் பையனுக்கு அரிசி வீசுவது சந்தோஷமாக இருந்தது போலும். மறுபடியும் குனிந்து அரிசி திரட்ட... அந்தப் பையன் அரிசி வீசியதையும், வலி தாங்காமல் கனகசபாபதி முகம் சுளித்ததையும் கவனித்துவிட்ட சிவகாமி அந்தப் பையனை 'ஹூம்' என்று மெல்ல அதட்டினாள். ஆனால், பையன் அதட்டலுக்கு மசிகிறவனாகத் தெரியவில்லை. சட்டென்று அருகே இருக்கின்ற ஒரு உறவுக்காரப் பெண்மணியின் கையை வேகமாக இழுத்து அந்தப் பையனைச் சுட்டிக்காட்டி அவன் அரிசி வீசுவதைச் சொன்னாள். அதற்குள் அந்தப் பையன் திரட்டிய அரிசியை எடுத்து வேகமாக வீசப்போக இரண்டு

கைகளையும் கனகசபாபதிக்கு முன்பு வைத்து சிவகாமி அவன்மீது அடிபடாமல் தடுத்தாள்.

ஒரு மணப்பெண் உடம்பு வளைத்து எகிறி புருஷனுக்கு முன்பு கைகளை விரித்து மறைத்து நிற்பது சகலருக்கும் ஆச்சரியமாக இருந்தது. சிலபேர் வாய்விட்டுச் சிரித்தார்கள். சிலபேர் மெல்ல முறுவலித்தார்கள்.

சிவகாமி வெட்கப்பட்டு பின்னடைய, அந்தப் பையன் மறுபடியும் கை ஓங்க, சிவகாமியின் உறவுக்காரப் பெண்மணி அவன் முழங்கையை இறுக்கப்பிடித்து மெல்ல அணைத்து வேறுபக்கம் அந்தப் பையனை தள்ளிக் கொண்டு போனாள்.

கனகசபாபதிக்கு சிவகாமியின் அந்த செய்கை சந்தோஷம் கொடுத்தது.

அவன் வலப்பக்கம் திரும்பி அவளை உற்றுப்பார்த்து நன்றி என்று சொன்னான். மொத்தமும் கவனித்துக் கொண்டிருந்த ஒரு வயதான பெண்மணி, 'ஆங்... உன் புருஷன் மேல ஒண்ணும்பட்டுட கூடாதாக்கும் பாய்ஞ்சு காப்பாத்திடுவீங் களாக்கும்' என்று அடிக்குரலில் கேலியாய் சொல்ல, சிவ காமிக்கு சிரிப்பு வந்தது. வாய் பொத்திக் கொண்டாள். இடப் பக்கம் மெல்ல பார்த்து வெட்கப்பட்டாள்.

கனகசபாபதிக்கு உள்ளே ஒரு குதூகலம் பொங்கியது.

மொய் எழுத மிக நீண்ட ஒரு க்யூ தயாராயிற்று.

முதல்ல தாய்மாமன் சீர்... பொண்ணுக்கு. ஒன்று விட்ட தங்கச்சி சீர்... பிள்ளைக்கு என்று ஆரம்பித்து, உரத்த குரலில் பொண்ணுக்கு முதல் சீர்... பத்தாயிரத்து ஒரு ரூபாய் என்று அறிவிக்க, காத்திருந்தவர்கள் போல, மணமகனுக்கு அவள் ஒன்றுவிட்ட சகோதரியின் சீர் பத்தாயிரத்து ஒன்று என்று கொன்னார்கள்.

"யாரது. உங்க தங்கச்சியா... அக்காவா..."

ஆவலோடு சுற்றுமுற்றும் பார்த்தபடி சிவகாமி கனகசபா பதியிடம் கேட்டாள்.

"தெரியலை."

"தெரியலைன்னா."

"ஜாஸ்தி பழக்கமில்லை. இப்போ கல்யாணத்துக்கு கூப்ட்டு வந்திருக்காங்க." கனகசபாபதி பதில் சொன்னான்.

"பத்தாயிரத்து ஒரு ரூபா கொடுக்கறாங்களே."

"அது சும்மா. உங்க வீட்ல கொடுக்கறாங்களேன்னு எங்க வீட்ல கொடுக்கறது."

மறுபடியும் சிவகாமிக்கு சிரிப்பு வந்தது.

வாய் பொத்திக் கொண்டு சிரித்தாள். அவள் சிரிக்க கனகசபாபதி மீண்டும் குதூகலமடைந்தான்.

"ரெண்டு பேரும் ஒரே விதமான யோக்கியதை உடையவர்கள்" என்று அந்த சீர் விளம்பரப்படுத்தும் முயற்சிக்கு அடுத்து உண்மையான சீர் ஆரம்பித்தது. இரண்டு பக்கமும் மாறிமாறி நல்ல பொருட்களும், காசோலைகளும் வந்து கொண்டிருந்தன.

யாரோ ஒருவர் அட்டைப் பெட்டிக்குள் குழந்தை பொம்மையை வைத்துக் கொடுக்க அதற்கும் மிகப்பெரிதாய் சிரிப்பு எழுந்தது.

சிவகாமி கொஞ்சம் வெட்கப்பட்டாள். அலுப்பானாள்.

"என்னா பண்ணுவியோ, ஏது பண்ணுவியோ... தெரியாது. உடனே குழந்தை பெத்துக்கணும்."

முன்பு பேசிய அதே கிழவியே மறுபடி உரத்துப் பேசிற்று.

இது சிவகாமிக்கோ, கனகசபாபதிக்கோ சொல்லப்பட வேண்டிய விஷயமில்லை.

உரத்த குரலில் இப்படியெல்லாம் நான் பேசுவேன் என்று மற்றவருக்குச் சொல்லுகின்ற ஒரு அபத்தமாய் அவளிடமிருந்து வெளிப்பட்டது. அந்த அபத்தமான அலட்டலுக்கு மற்றவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

கனகசபாபதி இந்தக் கூட்டத்தோடு தனக்கு எதுவும் சம்பந்தமில்லை என்பதுபோல் உட்கார்ந்திருந்தான். தொடர்ந்து மொய் எழுதுதல் நடைபெற்றது.

அவர்கள் எழுந்து நின்றார்கள். யார் அந்த சபையில் வயசாளியோ அவரிடம் போய் நின்று நமஸ்கரித்தார்கள். தம்பதிகளாகி இருக்கின்ற பெரியவர்களின் கால்களில் விழுந்து வணங்கினார்கள்.

சபையிலிருந்து விலகி இருக்கின்ற வயதான விதவைப் பெண்களைத் தேடிப்பிடித்து அவர்களிடம் அட்சதை கொடுத்து காலில் விழுந்து நமஸ்கரித்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டார்கள். வயதான கிழவிகளை கைகோர்த்துக் கொண்டு போட்டோ எடுத்துக் கொண்டார்கள்.

"எங்க அம்மாவுக்கு ஒண்ணுவிட்ட சித்தி இந்த கல்யாணத்துக்குன்னு வந்திருக்காங்க. தொண்ணூத்தி நாலு வயசு ஆவுது. இன்னும் அவங்க துணியை அவங்களே தோய்ச்சுக்கறாங்க." என்று ஒரு கிழவியை சிவகாமி கனகசபாபதிக்கு அறிமுகப் படுத்தினாள்.

"அப்படியா." என்று வியப்போடு கனகசபாபதி அந்தக் கிழவியின் கைகளை பற்றிக் கொண்டான்.

"கும்பிடறேன் பாட்டி." என்றான்.

"என்னாத்துக்கு."

அந்தக்கிழவி பட்டென்று கேட்டது.

"ஆசிர்வாதம் வாங்கத்தான். நீங்க பெரியவங்க இல்லையா."

"சாப்பாடு போட்டாபோதும். அதெல்லாம் வேணாம்." என்று அந்தக்கிழவி ஏதோவொரு விதமாக பதில் சொல்ல கனகசபாபதி திகைத்தான்.

என்ன என்பதுபோல் சிவகாமியைப் பார்த்தான்.

தெரியாது என்று உதடு பிதுக்கினாள்.

"இங்க சாப்பிட்டீங்களா." என்று மெல்லிய குரலில் கனகசபாபதி கிழவியின் காதோரம் கேட்டான்.

"யாரும் கூப்பிடலையே."

"வாங்க. நான் அழைச்சுகிட்டு போறேன்."

அவன் கைப்பற்றி இழுக்க, "இல்லை. என் மருமக ஏதாவது சொன்னாலும் சொல்லிடுவா. வேணாம்." என்று அவன் கைகளை வேகமாக அந்தக்கிழவி விடுவித்துக் கொண்டாள்.

"விட்ருங்க. வேறு யாராவது பார்த்து சாப்பாடு போடுவாங்க."

"பாவமா இருக்கு. ஏன் இப்படி இந்தக் கிழவியை சாப்பாட்டுக்கு கூப்பிடாம இருக்காங்க. நான் அம்மாவை கூப்பிட்டு..." என்று அவன் நாலாபுறமும் திரும்பிப் பார்க்க, அவள் மறுபடியும் அவன் கையைத் தொட்டு வேண்டாம் என்று சொன்னாள்.

"சாப்பிடாம போயிடப்போறாங்க."

"இல்லை. அப்படி நடக்காது. உடனே முதல் பந்தியில உட்காரணும்னு ஆசைப்படுவாங்க. அப்படி விடமாட்டாங்க. ரெண்டாவது மூணாவது பந்தியில உட்கார வச்சுடுவாங்க. கவலைப்படாதீங்க."

"வயசானவங்களை முதல் பந்தியில உட்கார வைக்கலாமே. பாவம் இல்ல."

"இதை விட பெரிய பாவம் ஒண்ணு இருக்கு. சொன்னா ரொம்ப வருத்தப்படுவீங்க."

"என்னா."

"அந்தம்மாவுக்கு பதினாலு வயசுல கல்யாணம். பதினாறு வயசுல புருஷன் செத்துப் போயிட்டான். ஒரேயொரு புள்ள. அவன் வளர்ந்து அம்பது வயசு வரைக்கும் இருந்து அவனும் செத்துப் போயிட்டான். தொண்ணூத்தி மூணு வயசு வாழ்ந்ததே தவிர நிறைய துக்கப்பட்டிருக்கு அது."

அவன் திகைத்துப்போய் மறுபடியும் கிழவியைப் பார்க்க, அவள் மெல்ல அவனை இழுத்துக் கொண்டு வேறுபக்கம் வந்தாள். வேறுபக்கம் வந்தாலும் கனகசபாபதி கழுத்து திருப்பி அந்தக் கிழவியின் முகத்தை உற்றுப் பார்த்து மனதில் அந்த உருவத்தை தேக்கிக் கொண்டான்.

இப்பொழுது நண்பர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

"எங்களை யார் யாருன்னு அறிமுகப்படுத்தி வைடா. கல்யாணம் கட்டினவுடனே கட்சி மாறிடாத." என்று கேலி செய்தார்கள்.

அவன் அலுவலக நண்பர்களையும், அடுத்த தெரு நண்பர்களையும் அவளுக்கு அறிமுகப்படுத்தினான்.

"நான் யாருன்னு அவன் சொல்லிட்டான் இல்ல. இப்போ அவன் யாருன்னு நான் உங்ககிட்ட சொல்றேன். யூ ஆர் வெரி லக்கி. இப்படி ஒரு மனுஷன் புருஷனா வரதுக்கு நீங்க கொடுத்து வச்சிருக்கணும். கனகசபாபதி நல்லவன். ரொம்ப ரொம்ப நல்லவன். அவன் நல்ல குணத்தை புரிஞ்சுகிட்டு அவனைக் கொண்டாடி, அவனை நல்லபடியா நீங்க முன்னுக்கு கொண்டு வரணும் அப்படிங்கறது என்னுடைய வேண்டு கோள். என்னடா கிழவன் மாதிரி பேசறானேன்னு பார்க்காதீங்க. இன்னும் பத்து நாள்ல உங்களுக்கு கனகசபாபதி யாருன்னு தெரிஞ்சுடும். அப்போ நான் சொன்னது சரின்னு உங்களுக்குத் தோணும்.

கனகசபாபதி ரொம்ப நல்லா டிராயிங் போடுவாங்க. உங்களுக்குத் தெரியுமா, அவன் வரைஞ்சு கொடுத்த படம்தான் எங்க வீட்ல பூஜையில வச்சிருக்கோம். பலபேர் வீட்ல சபாபதி வரைஞ்ச படம்தான் பூஜையில இருக்கு. அவனை தொடர்ந்து டிராயிங் போடவைங்க. அது போறும்."

அவர்கள் சொல்லிவிட்டு சிரித்தார்கள். சிரித்துவிட்டு வேறு ஏதோ சொன்னார்கள்.

ஒரு சின்ன திகைப்போடு சிவகாமி புருஷனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அலுவலக பெண் நண்பர்கள் மெல்ல முன்னேறி வந்தார்கள்.

"தம்பி. ரொம்ப நல்ல தம்பி. நீ கொடுத்து வச்சிருக்க தாயி. ஒரு கவலையும் படாத. ரொம்ப ரொம்ப மரியாதையான ஒரு மனுஷன்."

சற்று வயது முதிர்ந்த ஒரு பெண்மணி சான்றிதழ் கொடுத்தாள்.

கனகசபாபதி இதனால் எந்தவித பாதிப்புக்கும் ஆட்படாமல் மௌனமாக, சாதாரணமாக நின்றிருந்தான்.

"இன்னொரு இடத்துல கல்யாணம். அதை முடிச்சுட்டு வரத்துக்கு லேட்டாகிப் போச்சி." என்று இன்னொரு உறவுக் காரப் பட்டாளம் உள்ளேவர அவர்களும் கைகொடுத்தார்கள்.

யாரோ சிவகாமியின் தோளைத் தொட்டு திருப்பினார்கள்.

கனகசபாபதி முன்னேறி ஒரு பெரியவரை அணைத்துக் கொண்டான். அந்தப் பெரியவர் அவன் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டார். தொடர்ந்து சிவகாமியின் தோளை அந்தப் பெண் நிமிண்டிக் கொண்டிருந்தாள்.

சிவகாமி என்ன என்று திரும்ப, "இவங்க சொல்றதெல்லாம் நம்பாத. இவனுக்கு எல்லா காண்ட்டாக்ட்டும் இருக்கு. நீ ஒண்ணும் முதல் பொம்பளை இல்ல. அதை மட்டும் ஞாபகம் வச்சுக்கோ. புருஷனை கெட்டியா புடிச்சிக்கலை மேயத்தான் மேய்வான். இது எல்லா ஆம்பளைக்கும் பொருந்தும். அவங்க சொல்றத வச்சு ஏமாந்துடாத. அவன் யார்கூடல்லாம் ஸ்நேகம் வச்சிருக்கான்னு எனக்குத் தெரியும். உனக்கும் கொஞ்ச நாள்ல தெரியும்."

சொல்லிவிட்டு அவள் நகர்ந்து போய்விட்டாள். நகர்ந்து போன பெண்ணையே திகைப்போடு சிவகாமி பார்த்தாள்.

அந்தப் பெண்ணை திருமணக்கூடத்தில் இரண்டு மூன்று முறை ஏறிட்டுப் பார்த்தது ஞாபகம் வந்தது. அந்தப் பெண்மணி அழகாக இருந்தாள். ஆனால் முகத்தில் ஒரு கடுமை இருந்தது. ஒரு அலட்டல் இருந்தது. உதடு சுழித்துப் பேசுவதும், உடம்பை ஆட்டிப் பேசுவதும், முற்றிலும் மறைக்காமல் லேசாக இடது பக்கம் தெரிய திறந்து விட்டுக் கொண்டிருப்பதும் கொஞ்சம் அவளை பார்க்க வைத்தன. அதிகம் பெண்களைப் பார்த்து சபலப்படுகின்ற ஆண்கள் அவளைச்சுற்றி நின்று கொண்டிருந்தார்கள்.

யாரது என்ற ஒரு கேள்வி அவளைப் பார்த்தபோது ஏற்பட்டது. அதே வேகத்தில் மறந்தும் போனது. இப்பொழுது அவள் சொல்லிவிட்டுப் போனதும், அவன் பின்னே போய் நின்று 'என்ன சொன்ன...' என்று அதட்ட வேண்டும் போல் இருந்தது.

ஆனால், கனகசபாபதி அவள் கைகளைப்பற்றி இழுத்து ஒரு பெரியவரை அறிமுகப்படுத்தி வைத்தான். முகம் மாறுதலாக இருக்கின்ற மனைவியை உற்றுப் பார்த்தான்.

"என்ன ஒரு மாதிரியா இருக்க."

"ஒன்றுமில்லை."

"சந்திரா ஏதாவது சொன்னாளா."

"யார் சந்திரா."

"கொஞ்ச நேரம் முன்னாடி நின்னு பேசிச்சே அந்தப் பொண்ணு."

"அவங்க ஏதாவது சொல்லுவாங்கன்னு உங்களுக்குத் தெரியுமா."

"சொல்லியிருக்கலாம். என்னைப்பத்தி தப்பா சொல்லியிருக்கலாம்."

"தப்பா ஏதாவது பண்ணியிருக்கீங்களா."

"இல்லை. நான் எதுவும் தப்பா பண்ணலை."

"அப்போ ஏன் அப்படி சொல்லியிருப்பாங்கன்னு நினைக்கறீங்க."

"அவங்க அப்படி சொல்றவங்க. உன் முகம் மாறிப்போச்சு. அதைப் பார்த்ததும் அவங்க தப்பா சொல்லியிருக்கலாம்னு நினைச்சேன். என்ன சொன்னாங்க..."

"அப்புறம் சொல்றேன். இவரு யாரு." என்று முகத்தை மறுபடியும் மலர்ச்சியாக்கிக் கொண்டாள். ஆனாலும் அந்தப் பெண்மணியின் வார்த்தை தாக்குதல் அவளை உள்ளுக்குள் இம்சித்து முகத்தை இருட்டாய் மாற்றிக் கொண்டுதான் இருந்தது.

இரண்டு பேரும் அருகருகே உட்கார்ந்து சாப்பிடும் போது மறுபடியும் அந்தப் பேச்சை கனகசபாபதி எடுத்தான்.

"அந்தப் பேச்சு ஒண்ணும் என்னைத் தொந்திரவு செய்யலை. அதைப்பற்றிக் கவலைப்படாதீங்க. உங்களைப்பத்தி பத்துபேர் நல்லவிதமாக சொல்லியிருக்காங்க. ஒருத்தர் தப்பா சொன்னா நான் ஆடிப்போய்டுவேனா. அப்படியே தப்பா இருந்தாலும் நான் என்ன பண்ணமுடியும். மெல்ல மெல்லதான் மாத்தணும். சந்தோஷமா இருக்கற நேரம் பார்த்து அந்தம்மா ஏன் காதோரம் வந்து அப்படி சொல்லுச்சு. அவ்ளோ என்ன கடுப்பு. இதை நாளைக்கு சொல்லக்கூடாதா. நாலுநாள் கழிச்சு சொல்லக் கூடாதா. மணமேடைலேர்ந்து இறங்கினவுடனே சொல்ல ணும்னு பரபரத்ததுன்னா அந்தம்மாவுக்கு என்ன மாதிரி புத்தி. தப்பு அந்தம்மா பேர்ல இல்லை. என் பேர்ல. நான் கொஞ்சம் கூடவே அலை பாய்ஞ்சுட்டேன். அந்த சின்னப்பையன் அட்சதை எடுத்து உங்க மூஞ்சியில வீசினபோது நான் நிஜமாவே பதறிட்டேன். கண்ல பட்டுடப்போகுது, மூஞ்சியில பட்டுடப்போகுதுன்னு கைய நீட்டி தடுத்தேன். நூறு பேருக்கு நடுவுல தாலி கட்டின மூணாவது நிமிஷம் புருஷனைக் காப்பாத்தப்போறியா... முடிஞ்சா காப்பாத்திக்கோன்னு, அவ ஒரு குத்துகுத்திட்டுப் போறா."

அலுப்போடும், கழிவிரக்கத்தோடும் தெளிவாகப் பேசுதல் போன்ற நடிப்போடும் சிவகாமி பேச கனகசபாபதி மௌனமாய் இருந்தான்.

அது பேசும் நேரம் அல்ல. அவளை பேசவிடும் நேரம் என்பது புரிந்துபோயிற்று.

ஆனால், சிவகாமி மூன்று நிமிடத்தில் சரியாகி விட்டாள். அந்தப் பேச்சு தொடராதது நல்லது என்பதும் கனகசபாபதி உணர்ந்து கொண்டான்.

அந்த இலையிலிருந்த லட்டை எடுத்து கனகசபாபதிக்கு அவள் ஊட்டிவிடவும், கனகசபாபதி லட்டு எடுத்து அவளுக்கு ஊட்டிவிடவும், அவள் கடித்த அப்பளத்தை இவனும், இவன் கடித்த அப்பளத்தை அவளுமாய் பரிமாறிக் கொள்ளவும்,

அப்போது யாரோ ஒரு பெரிய மனிதர் வர அவர்கள் கைஉதறி அவசரமாய் எழுந்து நின்றதும், சாப்பிடுங்க... சாப்பிடுங்க... என்று அவர் உட்கார்ந்ததும் சரியாகச் சாப்பிடமுடியாமல் தவித்ததும், 'அக்கா... பெரியவரை தள்ளி கூட்டிட்டு போனா தானே இவரு நல்லா சாப்பிடுவாரு. எல்லாரும் சூழ்ந்துகிட்டா நல்லாவா இருக்கும்."

ஒரு பெண்மணியை அழைத்து அவள் சொன்னதும் சந்தோஷமாக இருந்தன. ஆனாலும், நமநமவென்று ஒரு வயிற்றுப் பிடுங்கலாய் அந்த சந்திரா சொல்லிவிட்டுப் போனது உறுத்திக் கொண்டுதான் இருந்தது.

"மறுவீடு போகணும். யாரும் தயவுசெய்து அழுது அலம்பல் பண்ணாதீங்கம்மா."

கனகசபாபதியின் அம்மா உரத்த குரலில் பெண் வீட்டாரைப் பார்த்து வேண்டிக் கொண்டாள்.

"பொண்ண பெத்தவங்க கண்ணு கலங்கத்தான் செய்வாங்க." சிவகாமியின் பக்கத்திலிருந்து யாரோ முணுமுணுப்பாய் பேசுவது எல்லோருக்கும் கேட்டது.

"உண்மைதான். இல்லைன்னு சொல்லலை. அவ மறுவீடு தான் போறா. போய் திரும்பி சத்திரத்துக்கு வந்துடுவா. அதனால சந்தோஷமா வழி அனுப்பி வைங்க."

அம்மா மறுபடியும் அறிவிப்பதுபோல உரத்த குரலில் சொல்ல, எல்லோரும் முதுகுதடவி, கைகுலுக்கி, கன்னத்தில் முத்தமிட்டு சிவகாமியை வழியனுப்பி வைத்தார்கள்.

"இன்னிக்கே போட ஆரம்பிச்சுடுங்க."

ஒரு மத்திம வயதுப்பெண் உரத்த குரலில் கனக சபாபதியைப் பார்த்துச் சொன்னாள்.

கனகசபாபதி லேசாக திடுக்கிட்டான்.

ஏதோ வெகண்டையாய், ஆபாசமாய் இருக்கிறதே என்று புருவம் சுருக்கினான்.

"தோப்புக்கரணம் போடறத சொன்னேன். அதுக்குள்ளேயும் மூஞ்சி போற போக்கைப் பார். வீட்டுக்கு போனவுடனே இன்னிக்கே தோப்புக்கரணம் போட ஆரம்பிச்சிடுங்க. தொடர்ந்து வாழ்க்கை முழுக்க போட்டுத்தானே ஆகணும்."

பட்டென்று புத்தி சாதுர்யத்தால் ஒரு வார்த்தையைப் போட்டு, அதற்கு அர்த்தம் அதுவல்ல வேறொன்று என்று விளக்கி இப்படி நினைத்துக் கொண்டாயா என்று வம்பு செய்து ஒரு பெண்மணி கேலி செய்தது கொஞ்சம் சந்தோஷமாகவும் இருந்தது. ரஸக்குறைவாகவும் இருந்தது.

மகேந்திரா வேனில் நெருக்கியடித்து உட்கார்ந்து கொண்டார்கள். அம்மாவும் அப்பாவும் முன்னால் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அம்மாவுடன் தம்பியும், அண்ணனும் இருப்பது தெரிந்தது. பின்னால் யார் உட்கார்ந்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. திரும்ப முடியவில்லை. மிக நெருக்கமாய் மெத்மெத்தென்று கனகசபாபதிக்கு அருகே சிவகாமி உட்கார்ந்திருந்தாள்.

"யார் அந்த அம்மா."

மெல்ல காதோரம் மற்றவருக்குத் தெரியாமல் சிவகாமியிடம் அவளைப்பற்றி விசாரித்தான்.

"எந்தம்மா."

"இப்போ பேசினாங்களே."

"அதுவா... ஒண்ணுவிட்ட அத்தை. இப்படித்தான ஏதாவது கராபுரான்னு பேசும். ராத்திரிக்கு இருக்கு பெரிய கூத்து."

"என்னா நடக்கும்."

"ஏதேதோ பேசுவாங்க."

"எதனால."

"முதல் இரவுல்ல. அப்படி பேசறதுன்றது ஒரு சட்டம். அதுல ஒரு சந்தோஷம்."

"இதைவிட வெகண்டையா பேசுவாங்களா."

"காது புளிச்சுப் போயிடும். அவங்க பேசறத கேட்கறதுக்கே ஒரு லேடீஸ் கூட்டம் வரும்."

"ஏன் அப்படி."

"எல்லா நேரமுமா பேசமுடியும். இந்த மாதிரி கல்யாணத்துல முதலிரவுலதான் பேசுவாங்க."

"ஒண்ணுமே தெரியாதவங்களுக்கு ஒரு மாதிரி சொல்லித் தருவாங்களோ என்னவோ."

"அது சொல்லித்தர மாதிரி இருக்காது. எனக்கு எல்லாம் தெரியும்கற மாதிரி இருக்கும். இதுல பெரிய கூத்து என்ன தெரியுமா."

"என்ன."

"அந்தம்மாவினுடைய நாப்பது வயசுல, அந்தம்மா புருஷன் அவளை விட்டுவிட்டு ஓடிப்போயிட்டாரு."

"ஏன்."

"ஏதோ சண்டை. ஆனாலும், இந்தம்மா தொடர்ந்து பேசிக்கிட்டுதான் இருக்காங்க."

"ஒருவேளை அப்படி ஓடிப்போனதாலயே பேசறாங்களோ என்னவோ."

"வேணாம் விட்ருங்க. இன்னிக்கு என்னமோ எந்த பேச்சு எடுத்தாலும் தப்பாவே போகுது."

"இதோ பார் சிவகாமி. பேச்சுக்கு பயப்படாத. எங்கிட்ட என்ன வேணாலும் பேசலாம், எதுபத்தி வேணாலும் பேசலாம்."

தெருமுனையிலிருந்து இறங்கி நடந்து போக வேண்டும். தெருவிலுள்ளோர் அனைவரும் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டதாய் அம்மா சொன்னாள்.

"எதற்கம்மா இப்படியெல்லாம்." என்று அடிக்குரலில் அம்மாவைப் பார்த்து கனகசபாபதி அலுத்துக் கொண்டான்.

"ச்சு... வாங்க போகலாம். ஜாலிதானே."

சிவகாமி இன்னும் அடிக்குரலில் அவனிடம் பேசினாள்.

வேனில் இருந்த அத்தனைபேரும் கீழே இறங்கினார்கள். வலதுபுறம் நெருங்கியபடி சிவகாமி வர தெருவில் உள்ளோர் சூரைத்தேங்காய் உடைத்தார்கள். சில வீடுகளில் ஆரத்தி எடுத்தார்கள். சில வீடுகளில் கதம்ப சரத்தை மாலையாக்கி இருவரிடமும் கொடுத்து மாலை மாற்றிக் கொள்ளச் சொன்னார்கள். வீட்டு வாசலுக்கு வந்தவுடன் யாரோ ஒரு பையன் சரவெடி வைத்தான். ஐநூறு வாலா சரவெடி சீறி வெடித்து நாலாபக்கமும் பறந்தது. சிவகாமி பயந்து உதறி கனகசபாபதியின் பின்னே ஒடுங்கிக் கொண்டாள். மெத்தென்று சிவகாமி மேலேப்பட்டது அவனுக்கு சந்தோஷமாக இருந்தது.

"வேணாம்ப்பா... வேணாம். ப்ளீஸ் சாதாரணமா இருங்க. நான் என்ன சினிமா நடிகனா. அலம்பல் பண்றீங்களேப்பா." சற்றுக் குரலுயர்த்திப் பேசினான்.

"ஆங்... எங்க தெருக்கு நீதான் ஹீரோ. உன் கல்யாணம்னா நாங்க கொண்டாட மாட்டோமா."

பத்து நாட்களுக்கு முன்பு திருமணமான ஒரு பெண் உரத்த குரலில் சொல்ல, அங்குள்ள மற்ற பெண்களும் சிரித்தார்கள். லேசாய் வெட்கித் தலைகுனிந்து கனகசபாபதி வீட்டு வாசலுக்குப் போய் நின்றான். சிவகாமி அவனுக்கு அருகே இருக்க அங்கும் ஆரத்தி கரைத்தார்கள். கற்பூரத்தட்டு ஏந்தி சுற்றி வந்தார்கள். தெருவில் கொட்டினார்கள். வலதுகால் எடுத்து வைத்து உள்ளே வரச் சொன்னார்கள்.

வீடு சுத்தமாகப் பெருக்கி கழுவப்பட்டு, பெரிதாய் இழைக் கோலம் போடப்பட்டு, சாமி மாடத்தில் குத்து விளக்குகள் ஏற்றப்பட்டு, ஊதுவத்தி அங்கங்கே சொருகப்பட்டு, நல்ல மணமாய் சுத்தமாய் காட்சியளிக்கப்பட்டது.

யார்ம்மா என்று மறுபடியும் விசாரிக்க, "எதிர்வீட்டு பங்கஜம்தான், சாவி கொடுங்க மாமி அப்படின்னு வாங்கிட்டு போனா. இங்க சாப்பிட வேண்டிய பாலும் பழமும் கூட அவதான் ஏற்பாடு பண்ணி வச்சுருக்கா."

"பால் வேணாம்மா. காபி கொடு."

"அட... இன்னிக்கு காபி குடிக்கக்கூடாதுடா. இங்க வந்தவுடனே முதல்ல பால்தான் குடிக்கணும். உட்காருங்க ரெண்டு பேரும்."

அம்மா இரண்டு பேரையும் கிழக்குப் பார்த்து நிற்க வைத்து சுவாமி படத்திற்கு கற்பூரம் காட்டினாள். தாத்தாவின் படத்திற்கு அருகே போய் கை கூப்பினாள்.

"உங்க பேரனுக்கு கல்யாணம். பொண்ணோட இட்டாந் திருக்கேன். நின்னு ஆசிர்வாதம் பண்ணுங்கோ." என்று மெல்லத் தேம்பினாள்.

அப்பாவை கைப்பிடியாய் இழுத்துவந்து "கும்பிட்டுக் கோங்க. அங்கயே நின்னுகிட்டிருந்தா என்ன அர்த்தம்." என்று சொல்ல கனகசபாபதியின் அப்பாவிற்கு நிமிர்ந்து தன் அப்பாவின் படத்தை பார்க்கக்கூட முடியாதபடி ஒரு நெகிழ்ச்சி பரவிற்று. மெல்ல அவர் சிவகாமியை நோக்கித் திரும்பினார்.

"இது எங்கப்பா. சதாசிவம்னு பேர். ஒரு வேலையும் செய்யலை. ஆனா, எங்கேயிருந்தாவது காசு கொண்டு வந்து கொடுத்துகிட்டிருப்பாரு. தப்பா போய் ஒத்த பைசா சம்பாதிக்க மாட்டாரு. உனக்கு என்னப்பா தொழிலு, பள்ளிக்கூடத்துல கேட்கறாங்கன்னா, வியாபாரம்னு போட்டுக்கோங்க அப்படின்னுவாரு. என்ன வியாபாரம் அப்படின்னா ஏதாவது சொல்லுவாரு. பழைய நகை வாங்கி விப்பாரு. வீடு வாங்கி விப்பாரு. பழைய பர்னிச்சர் வாங்கி விப்பாரு. கார் வாங்கி விப்பாரு. இடதுபக்கம் வாங்கி வலதுபக்கம் விப்பாரு. நடுவுல இருவது முப்பது பர்சென்ட் காசு தேறும். அந்த மாசத்துக்கு உண்டான துட்டு தேறிடுச்சின்னா அதுக்கப்புறம் வேற வியாபாரம் செய்ய மாட்டார். அவரைப்பத்தி நான் உனக்கு அப்புறம் சொல்றேன். ரொம்ப நல்ல மனுஷன். பொண்டாட்டின்னா உசிரு. பொம்பளைங்கள மரியாதையா நடத்தணும்னு எங்களுக்கெல்லாம் சொல்லிக் கொடுத்தவரு. அவருக்கு கனகசபாபதியை ரொம்ப பிடிக்கும். அவரு மடியில வளர்ந்தவன் தான் உன் புருஷன். அவரு ஆசிர்வாதம் பண்ணணும்னு நின்னு

தொட்டு வேண்டிக்கோ. நீ ரொம்ப நல்லாயிருப்பே. இது நான் சத்தியமா சொல்ற வார்த்தை."

குரல் உடைந்து கிட்டத்தட்ட அழும் நிலையில் அவர் பேச, சிவகாமி முன்னேறி அவருக்கு அருகே நின்று கொண்டாள்.

இருமுகிற மாமாவை உற்றுப் பார்த்து அவர் நெஞ்சை தடவிக் கொடுத்தாள். இன்னும் நகர்ந்து புகைப்படத்திற்கு அருகே போய், அங்கே தன் நெற்றியை வைத்து கண்மூடி நின்றாள்.

பூ உதிர்ந்து அவள் தலையில் விழுந்தது.

எல்லோரும் உணர்ச்சி வசப்பட்டு 'ஹா...' என்று கத்தினார்கள். அதிசயத்தோடு கனகசபாபதியும் பார்த்துக் கொண்டிருந்தான். தன் மீது பூ விழுந்ததே தெரியாது சிவகாமி கனகசபாபதி அருகே வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"பூ விழுந்துச்சே தெரியுமா உனக்கு." என்று ஆச்சரியம் கலந்த குரலில் சிவகாமியிடம் கனகசபாபதி கேட்டான்.

"அப்படியா. நான் கொஞ்சம் வேகமா முட்டிட்டேன் போலிருக்கு. அதான் மேல வைச்சிருந்த பூ நழுவி என் தலையில விழுந்திருக்கும்."

சிவகாமி சாதாரணமாய்ச் சொன்னாள்.

அப்படியிருக்கவும் வாய்ப்பிருக்கிறது என்பதால் மேற் கொண்டு பேசாமல் கனகசபாபதி அமைதியானான்.

'இல்லை. அது அதிசயம்தான். தாத்தா கொடுத்த ஆசிர்வாதம் தான்; என்று அழுத்தி திரும்பத் திரும்பச் சொல்ல ஆசை ஏற்பட்டாலும் அடக்கிக் கொண்டான்.

அவர்களை கிழக்குப் பார்த்து உட்காரவைத்து மலைவாழைப் பழமும், சர்க்கரை போட்ட பாலும் கொடுத்தார்கள். காபி குடித்தால் சுகமாக இருக்கும் என்று தோன்றியது.

"காபி சாப்பிடறியா." என்று சிவகாமியின் காதருகே கனகசபாபதி கேட்டான்.

"வேணாம். பால் சாப்பிட்டோமில்ல. உங்களுக்கு வேணுமா."

சட்டென்று சிவகாமி அவனைக் கூர்மையாகப் பார்த்துக் கேட்டாள்.

"ஆமாம். கிளம்பறபோது ஒரு காபி சாப்பிடலாம்னு இருக்கேன்."

வந்தவர்கள் எல்லோருக்கும் பாலோ, காபியோ வழங்கப் பட்டது.

மெல்லியதாய் ஒரு காபி மணம் மூக்கை நிமிண்டியது. அம்மாவும், எதிர்வீட்டுப் பெண்ணும் ஓடியாக பரிமாறினார்கள். மறுபடியும் சத்திரத்திற்குப் போக வேண்டும் என்று அம்மா சொன்னாள். பலர் கிளம்பினார்கள்.

"நாங்க இப்படியே ஊருக்கு போறோம்மா." அம்மாவிடம் போய் கைப்பற்றிக் கொண்டு சொன்னார்கள்.

அம்மா அவர்களுக்கு பட்சணங்கள் கொடுத்தாள்.

"நீங்க ரெண்டு பேரும் ரூம்ல உட்கார்ந்துக்கங்களேண்டா. உனக்கு சாஞ்சுக்கணும் போல இருக்கு."

அப்பா கைகாட்ட அவர்கள் இரண்டு பேரும் மெல்ல அறைக் குள் போனார்கள். கட்டிலுக்குப்போய் அவன் உட்கார்ந்து கொண்டான். அவனுக்கு அருகே சிவகாமி உட்கார்ந்து கொண்டாள். மெல்ல அவன் தலையைக் கோதி விட்டாள். கன்னத்தை வருடிவிட்டாள்.

"என்ன திடீர்னு."

"திடீர்னு இல்லை. இங்க வாய்ப்பு கிடைச்சுது செய்யறேன். ஹால்ல பண்ணா நல்லாயிருக்குமா."

மறுபடியும் இரண்டு கைகளாலும் அவன் தலையை வருடிவிட்டாள். அவன் மெல்ல அவள் இடுப்பைத் தடவினான். உதட்டில் முத்தமிட்டான்

"வேணாம். ஜாஸ்தி வேணாம்."

அவள் கூச்சத்தில் நெளிந்தாள்.

எல்லோரும் விடை பெற்றுப் போவது வார்த்தைகளாய் அறைக்குள் கேட்டது. சட்டென்று வீட்டிற்குள் ஒரு நிசப்தம் படர்ந்தது.

இப்பொழுது என்ன செய்வது என்பது போல் இரண்டு பேரும் உட்கார்ந்தார்கள்.

"கண்ணு உள்ள வரட்டுமா."

அம்மா தயங்கியபடியே கேட்டாள்.

"வாம்மா. ஏன் கேட்கற."

அம்மா மெல்ல ஒருக்களித்த கதவைத் திறந்து உள்ளுக்குள் வந்தாள்.

கட்டிலில் சிவகாமிக்கு அருகே உட்கார்ந்து கொண்டாள்.

"கல்யாணம் கல்யாணம்னு மூணுமாசமா பேசி கல்யாணம் முடிஞ்சுபோச்சு. புள்ள பெத்த எனக்கே அப்பாடான்னு இருக்கே... இவங்க வீட்ல எப்படியிருக்கும்." என்று ஒரு குதூகலத்தோடு சொன்னாள்.

"பொண்ண பெத்தவங்க ஏதோ பேசணும்னு சொல்றாங்க."

ஹாலில் இருந்த அப்பா குரல் கொடுத்தார்.

"உள்ள வாங்களேன்."

அம்மா அழைக்க, அப்பா உள்ளே வந்தார். பிறகு கனகசபா பதியின் மாமனாரும், மாமியாரும் உள்ளே வந்தார்கள்.

"வாசல் கதவை தாழ்ப்பாள் போட்டீங்களா."

அம்மா வேகமாய் எழுந்தாள்.

"தாழ்ப்பாள் போட்டேன். உட்காரு."

"என்ன வேணும்."

லேசான கலவரத்தோடு கனகசபாபதி மாமனாரைப் பார்த்தான்.

"எனக்கு ஒண்ணும் தெரியலைங்க. அவ ஏதோ பேசணுங்கறா."

"என்ன சிவகாமி"

அவன் மிருதுவாய் மனைவியிடம் விசாரித்தான்.

"நடந்தது என்னான்னு அம்மாகிட்ட சொன்னேன். அம்மா கேட்டுடறேன்டி அப்படின்னாங்க. அதான்."

"யாரு... சந்திரா பேசினதய்யா."

"ஆமாம்."

"என்னாடா. என்னா சந்திரா... என்னா பேசிச்சு."

"நமக்கு தெரிஞ்ச சந்திராதான்ப்பா புரசவாக்கம் பொம்பளை. அவ நேர என் எதிர்க்க வந்து என்னை நமஸ்காரம் பண்ணலையா அப்படின்னு கேட்டா. நான் கையெடுத்து கும்பிட்டேன். கால்ல விழுவேன்னு நினைச்சா போல... நான் அப்படியே நகர்ந்துட்டேன். இவ தோளை தொட்டு நிறுத்தி, இவனுக்கு எத்தினாவது பொண்டாட்டி நீன்னு உனக்குத் தெரியுமா. இவனுக்கு நிறைய பொம்பளை சமாச்சாரம் இருக்கு. இவனை இறுக்கி பிடிச்சுக்கோ இல்லைன்னா குடும்பம் கெட்டுடும் அப்படின்ற மாதிரி பயமுறுத்தியிருக்கா. இவளுக்கு முகம் மாறிப்போச்சு. உடம்பெல்லாம் வேர்த்துருச்சு. ஒண்ணும் பயப்படாதன்னு நான்தான் சொன்னேன். அப்புறம் சரியா யிட்டா. இதை உங்கம்மாகிட்ட ஏன் சொல்லணும் சிவகாமி. நானே அழகா சொல்லியிருப்பேன் இல்ல."

"அம்மா கவனிச்சிட்டாங்க. என்ன என்னான்னு கேட்டாங்க."

"என்ன கவனிச்சாங்க அம்மா."

"அந்தப் பொண்ணு பேசினதையும், நான் மூஞ்சி மாறியதையும்."

"அது மட்டுமில்லீங்க. எங்கிட்ட வந்தும் ரெண்டு வார்த்தை பேசிச்சு. அந்தப் பேச்சும் நல்லாயில்ல."

"அப்படியா... என்ன பேசிச்சு."

கனகசபாபதி ஆவலோடு கேட்டான்.

"மாப்பிள்ளை ஜாலியான ஆள். நீ என்னா கேட்டாலும் வாங்கித் தருவாரு. அவரும் எதுனா கேட்பாரு அப்படின்னு சொல்லிச்சு."

"ச்சேய்..."

கனகசபாபதியின் அம்மா வெறுப்போடு முகம் சுளித்தாள். இப்போது சிவகாமியின் அப்பா முகம் இருண்டு முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

"நான் என் பொண்ண ரொம்ப நல்லா வளர்த்தேங்க."

"கொஞ்சம் அமைதியா இருங்க."

கனகசபாபதி அவரை நோக்கி கைகூப்பினான்.

"சிவகாமி உனக்கு, உங்கப்பாவுக்கு, உங்கம்மாவுக்கு எல்லாருக்கும் சேர்த்தே சொல்றேன். இதுவரையில எனக்கு எந்தப் பொண்ணோடயும் எந்த சம்பந்தமும் இல்லை. இது வரைக்கும் நான் ஒரு பொண்ணகூட தப்பா தொட்டதில்லை. அவ்ளோவா பழகினதும் இல்லை. பழக வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. அது தவிர எங்கப்பா எனக்கு சொல்லிக் கொடுத்தபடி ஒரேயொரு பெண்ணை மனைவியாக வரிந்து, அவளோடு கடைசிவரை சந்தோஷமாக வாழ்ந்து, அவளைத் தவிர வேறு எவரையும் நினைக்காது, ஒரு நல்ல வாழ்க்கை வாழ வேண்டும் அப்படிங்கறதுதான் என்னுடைய லட்சியம். இன்னும் சுருக்கமா சொல்லப்போனால் ராமர் மாதிரி ஏகபத்தினி விரதனா இருக்கணும்கறதுதான் ஆசை. அதுதான் என் புத்தி. அப்படி இருக்கணும்னுதான் நான் விரும்பறேன். சந்திரா சொன்னது பொய். அவ ஒரு மோசமான பொம்பளை. என் மனசுல ஒரு கள்ளமும் இல்லை. நான் ஒரு தப்பும் இதுவரைக் கும் செய்ததேயில்லை. எந்தப் பொம்பளையோடும் எந்தவித மான சங்காத்தமும் எனக்கு இல்லை. இந்த பூமி சத்தியமா, நான் சாப்பிடற சாப்பாடு சத்தியமா, எங்க தாய் தந்தையர் காலடி சத்தியமா, இதோ போட்டோல இருக்காரே தாத்தா அவர் மேல சத்தியமா, இதை நான் உங்களுக்குச் சொல்றேன். என்னை நம்பறதும், நம்பாததும் உங்க இஷ்டம்."

ஒரு மாதிரி உணர்ச்சி வசப்பட்டு கொஞ்சம் கூச்சலாய் அவன் பேசியபோது அவன் நெஞ்சில் கைவைத்து சிவகாமி அவனை அமைதிப்படுத்தினாள்.

"அவன் சொல்றது இருக்கட்டும்மா. அவனுக்கு அப்பன் நான். ஏதாவது புகார் வந்தா, என்னடா சங்காத்தம் இருக்கான்னுதான் வழக்கமா ஒரு பிள்ளையப்பத்தி அவன் அப்பன் கேட்பான். நான் அப்படி கேட்கமாட்டேன். எனக்கு கனகசபாபதி பத்தி தெரியும். அவன் ரொம்ப நல்லவன். ரொம்ப ரொம்ப நல்லவன். அவனுக்கு கோபம் வராது. ஆத்திரம் ஆசை அதெல்லாம் கிடையாது. எவ்ளோ அமைதியா இருக்கணுமோ அவ்ளோ அமைதியா இருக்கறதுக்குத்தான் அவன், அவன் தாத்தாகிட்ட கத்துகிட்டான். அவன் ஜாதகப்பிரகாரமும் அவன் ரொம்ப நல்ல பையன். நான் உங்களுக்கு சத்தியம் பண்ணி தரேன். என் பையன் இந்த க்ஷணம்வரை உத்தமன். ஒரு தப்புப் பண்ணாதவன். இந்த பூமி சத்தியமா, எங்க குடும்ப விளக்கு சத்தியமா, எங்க குலதெய்வம் சத்தியமா இதை நான் உங்களுக்கு சொல்ல முடியும்."

"ஐயோ, என்னா இது சத்தியம், சத்தியம்னு எல்லாரும்..."

சிவகாமியின் அம்மா உரக்கக் கத்தினாள்.

"பெரிய சந்தேகம் வந்துடுச்சு இல்லையா. கல்யாணமாகி தாலிகட்டி இருவத்தஞ்சாவது நிமிஷத்துல தடுக்குனு இப்படி ஒரு பேச்சு வந்ததுன்னா எவ்ளோ கவலைப்படுவீங்க."

"கொஞ்சம் கலவரம்தான். இல்லைன்னு பொய் சொல்ல விரும்பலை. சுருண்டு விழுந்துடுவேனோன்னு ஆகிப்போச்சு. சிவகாமியைப் பார்த்தேன். அவ நம்பலை, பயப்படலைன்னு தெரிஞ்சுது. திரும்பிப் போய் அந்தப் பொம்பளை மூஞ்சியப் பார்த்தேன். அது பஜாரின்னு தெரிஞ்சது. இவ ஏதோ சில்மிஷம் பண்றா அப்படின்னு சமாதானப்படுத்திகிட்டேன். இருந்தாலும் அடிமனசுல ஒரு வலி."

"ஏன் அவ அப்படி சொல்றான்னு நான் சொல்றேன்."

கனகசபாபதியின் அம்மா ஆரம்பித்தாள்.

"அந்தச் சந்திராவுக்கு ரெண்டு பொண்ணு. ஆனா, அவ புருஷன்காரனோட இல்லை. அவரு வேலை விஷயமா வேற ஊருக்கு மாற்றலாயிடுச்சுன்னு எல்லார்கிட்டயும் சொல்றா.

இவகூட வாழப்பிடிக்காம நகர்ந்து போயிட்டார்னு மத்தவங்க சொல்றாங்க. மூத்தப்பொண்ணு தஞ்சாவூர் பெயிண்டிங் கத்துக்கறேன்னு கனகசபாபதிகிட்ட வந்து ரெண்டு மாசம் கத்துக்கிச்சு.

தண்ணி கொடுங்கம்மா, ஜுஸ் கொடுங்கம்மான்னு அந்தப் பொண்ணு சமையல் ரூம் வரைக்கும் வரும். வெளிப்படையா எனக்கு வீட்டுக்குள்ள மத்த மனுஷாள் புகுந்து புறப்படறது பிடிக்காது. குறிப்பா சமையல் ரூமுக்குள்ள எல்லாரையும் விடமாட்டேன். அத்துமீறி உள்ள நுழைஞ்சு மாமி மாமின்னு சொல்லும். சரி ஏதோ சின்னப்பொண்ணு தின்றதுக்கு அலையறதுன்னு நானும் விட்டுட்டேன்.

ஒருநாள் தடுக்குனு அவங்கம்மா வந்து என் பொண்ண உங்க பிள்ளைக்கு கட்டிக்கறீங்களான்னு சொன்னா. அப்படி ஒண்ணும் எண்ணமில்லையேம்மா. என்னா திடீர்னு வந்து கேட்கற, பிள்ளைய பெத்தவன்தானே வந்து பொண்ணு இருக்கான்னு கேட்பான். நீ கேட்கறது ஒரு மாதிரியா இருக்கே அப்படின்னேன். ஐயருங்க எல்லாம் பொண்ண பெத்து வச்சி புள்ள இருக்கான்னு கேட்கறதில்லையா. இப்போ நாம எல்லாருமே ஐயருங்க என்னா செய்யறாங்களோ அந்த மாதிரி தானே செய்யறோம். இதுக்கு முன்னாடி நாம சீர்செனத்தி யெல்லாம் பேசறது இல்லை. வரதட்சிணை கொடுக்கற தில்லை. இப்போ எல்லாம் வக்கனையா ஐயருங்களை பார்த்து வரதட்சணை, சீர் செனத்தி, கார், மோட்டார் சைக்கிள்னு கேட்கறதில்லையா. அப்படின்னு பேசிச்சு.

இது என்னத்துக்கு விதண்டாவாதம் அப்படின்னு நான் வாயை மூடிகிட்டேன். நீங்க யோசனை பண்ணி சொல்லுங்க அப்படின்னு எங்கிட்ட சொல்லிச்சு. ஒரு யோசனையும் இல்லை. அவன் கல்யாணத்தைப்பத்தி நாங்க இப்போதைக்கு ஒண்ணும் யோசனை பண்ணலை. யோசனை பண்றபோது பார்த்துக்கலாம்னேன். நீங்க சொல்றவரைக்கும் காத்துகிட்டிருக் கேன்னு சொல்லிச்சு.

எனக்கு ஒண்ணும் புரியலை. நீ ஒண்ணும் காத்துண்டிருக்க வேணாம்மா. உங்க வீட்டுப் பொண்ண கட்டிக்கறா மாதிரியான எண்ணம் எங்களுக்கு இல்லை அப்படின்னேன்.

ஒருவேளை கனகசபாபதி ஆசைப்பட்டா கட்டி வைப்பீங்களான்னுச்சு. எனக்கு பயம். கைகாலெல்லாம் உதற ஆரம்பிச்சுடுச்சு. கனகசபாபதி அப்படி ஆசைப்படறவன் இல்லைம்மா. தேவையில்லாத பேசாத அப்படின்னு சொன்னேன்.

நல்லவேளையா அரைநாள் லீவு போட்டுட்டு கனகசபாபதி வந்துட்டான். ஏண்டா வந்தேன்னு அப்புறம் கேட்டேன். தெரியலைம்மா வரணும்னு தோணிச்சு வந்துட்டேன்னான். அவன் உள்ள வந்தவுடனே என்னாடா இவங்க பொண்ண இஷ்டப்படறியான்னு கேட்டேன். அதெல்லாம் ஒண்ணும் இல்லையே... யார் சொன்னா... ஏன் அப்படி சொல்றாங்க அப்படின்னு படபடன்னான்.

அம்மாவும், பொண்ணும் டப்புனு வெளியே போயிட்டாங்க. பத்துநாள் பொறுத்து யாரோ ரெண்டுபேர் வந்து இந்த மாதிரி எங்க வீட்டு பொண்ணு இருக்கு. உங்க பையன் ஜாதகம் கொடுங்கன்னாங்க. நான் வேற யாரோன்னு நினைச்சுகிட்டு என்னா பண்றாங்க, ஏது பண்றாங்கன்னு கேட்டேன். இல்லை. அவங்கப்பா பாம்பேல இருக்காரு. அம்மா, பொண்ணெல்லாம் இங்க இருக்கு. அப்பா அப்பப்போ வந்துட்டு போறாரு. இவங்கதான் அவங்கன்னு சொல்லாதயே பேசிக்கிட்டிருந்தாரு. நான் கொடுங்கன்னவுடனே அவங்க ஜாதகத்தை கொடுத்தாங்க. நான் வாங்கி அவங்க அப்பாகிட்ட கொடுக்கணும்னு பீரோல வச்சிட்டேன்.

சாயந்தரமே வந்துட்டாங்க ஜாதகம் பொருந்தியிருக்குன்னு. என்னா ஜாதகம், என்ன பொருந்தியிருக்குன்னு கேட்டேன்.

காலையில ஜாதகம் கொடுத்து அனுப்பினேனே. நீங்க வாங்கனீங்களாமே. அது பொருந்தியிருக்காம். அது உன் பொண்ணா எனக்கு தெரியாது. தெரிஞ்சிருந்தா நான் வாங்கியிருக்க மாட்டேன் அப்படின்னேன். ஏன் என்னைப்பார்த்து அப்படி சொல்றீங்க. நாங்க என்ன குறை வச்சுருக்கோம்.

எதுக்காக எங்களை இழிவா நடத்தறீங்கன்னு கேட்டா. இதோ பாரும்மா பொண்ண பெத்தாலும் சரி, புள்ள பெத்தாலும் சரி கூப்பிடறபோது போனாதான் சரியா இருக்குமே தவிர கூவி கூவி வித்தா நல்லாயிருக்காது. வந்து பரபரன்னு பேசறதப்பார்த்தா எனக்கு ஒண்ணும் சரியாப்படலை அப்படின்னேன்.

உங்க பையன் ரொம்ப நல்லவரு. உங்க ஃபேமிலி நல்ல ஃபேமிலி. அதனாலதான் சம்மந்தம் வச்சுக்கலாம்னு நான் துடியா துடிக்கறேன். நான் ஒண்ணும் இல்லாதப்பட்டவ இல்லை. இப்போகூட நாப்பது சவரன் போடத் தயாரா இருக்கேன். நீங்க கேட்டீங்கன்னா கூட பத்து பதினைஞ்சு சவரன் போட்டுடறேன் அப்படின்னாங்க.

எங்களுக்கு சவரன் முக்கியமில்லை. பொண்ணு முக்கியம். பொண்ணு குணம் முக்கியம். இவங்கப்பா எங்க இருக்காரு அப்படின்னு கேட்டேன். அவரு எங்க கூட இல்லை. பாம்பேல இருக்காரு. எப்போதாவது வருவாரு குழந்தைகளை பார்க்கறதுக்கு. ஏன் என்னாச்சுன்னு கேட்டேன். ஒரு மாதிரி மனஸ்தாபம். அவரு வேற பொண்ணுங்களோட சகவாசம் வச்சுகிட்டிருந்தாரு. எனக்கு பிடிக்கலை கண்டிச்சேன். வெளியேறிட்டாரு அப்படின்னாங்க.

அவரு வெளியேறிட்டா உன் பொண்ணுக்கு எப்படி கல்யாணமாகும். சபையில அப்பனும் ஆத்தாளும் இருக்க வேணாமா. இல்லை, அவரு வருவாரு நின்னு கல்யாணம் பண்ணிக் கொடுப்பாரு. கல்யாணத்துக்கு வேண்டிய காசு நகையெல்லாம் செய்யறேன்னு இருக்காரு. இதுக்காக என் பொண்ண தள்ளிடாதீங்கன்னு சொன்னா.

அம்மா, நான் தேவையில்லாத யாரையும் குறையா சொல்ற தில்லை. எங்களுக்கு உங்களை பிடிக்கணும். உங்களுக்கு எங்களை பிடிக்கணும். ரெண்டு பக்கமும் சரியா இருந்தாதான் நல்லாயிருக்கும். அதெல்லாம் விட முக்கியம் என் பையனுக்கு உன் பொண்ண பிடிக்கணும். 'இல்லை, என் பொண்ணு பிடிச்சுருக்கு. கனகசபாபதி அதை வெளியே சொல்லமாட்டேங்கறாரு அப்படின்னா...' எனக்கு லேசா கோபம் வந்துடுச்சு.

அப்படி பிடிச்சுருந்துதுன்னா அவன் ஓடியாந்து எங்கிட்ட தான் சொல்லுவான். அவன் சொல்லலேன்ற போதே அவனுக்கு எதுவும் எண்ணமில்லைங்கறதே அர்த்தம். நீங்களா ஏதாவது நினைச்சுக்காதீங்க அப்படின்னேன். நானா ஒண்ணும் நினைச் சுக்கலை. என் பொண்ணுகிட்ட உங்க புள்ளை விளையாடி யிருக்காரு. சிரிச்சு பேசியிருக்காரு அப்படின்னு சொன்னா. நான் கோபமாயிட்டேன்.

என்னாடி நினைச்சுகிட்டிருக்கேன்னு கத்து கத்துன்னு கத்திட்டேன். அவங்க அப்பா வந்தவுடனே சொன்னேன். அவங்கப்பா உடனே அவங்க ஸ்நேகிதாளுக்கு போன் பண்ணி அவளைப்பத்தி விசாரிச்சா சாக்கடை நாத்தம்."

"அப்படின்னா."

சிவகாமி ஆவலோடு கேட்டாள்.

"நீ நானும் உட்கார்ந்து முதன் முதல்ல இதைப் பேசவேண்டாம். அவ்ளோ ஆபாசம். அக்காவப்பத்தி தப்பா சொல்றாங்க. தங்கச்சி பத்தி தப்பா சொல்றாங்க. அம்மாவைப் பத்தி தப்பா சொல்றாங்க. ஐயோ... பஜாரி உன் வீட்டுக்கு எப்படி வந்தான்னுதான் என் சொந்தக்காரி ஒன்னு கத்தினா.

இதுதான் சமாச்சாரம்னு சொன்னா. ரொம்ப ஜாக்கிரதையா நகர்ந்துக்கோ. எதுக்கு வேணா துணிஞ்சவோ, எப்படி வேணாலும் பேசுவோ. முள்ளுல துணியை போட்டுட்ட, கிழியாத இரு அப்படின்னா, மறுபடி வந்தபோது நாங்க இப்போதைக்கு கனகசபாபதிக்கு கல்யாணம் பண்றா மாதிரி இல்லை. அவன் உன் பொண்ண விரும்பவும் இல்லை. வெறுமனே தஞ்சாவூர் பெயிண்ட்டிங் சொல்லிக்கொடுத்த தோட சரி. தேவையில்லாத எதுவும் பேசவேணாம் அப்படின்னேன். அதுக்குள்ளேயும் யார் யார்கிட்டயோ, நாங்க அவங்கக்கூட சம்மந்தம் வச்சுக்கப்போறோம். பேசி முடிச்சுட் டோம். இன்னும் ஒரு ரவுண்ட் பேச்சு பாக்கி, அப்படின் னெல்லாம் சொல்லியிருக்கறா.

எங்க சொந்தக்காரங்க அதை நம்பி அவ தங்கச்சி ஜாதகத்தை வாங்கிட்டுப் போயிட்டாங்க. அங்கேயிருந்து இங்க வந்து என்

ரெண்டாவது பொண்ணு ஜாதகத்தை உன் சொந்தக்காரனுக்கு கொடுத்துட்டேன். எல்லாம் பேசி முடிச்சிட்டோம்றா. இவ உள்ள நுழைஞ்சாலே எனக்கு பதறும். வேத்து விட்டுடும். எப்போடா வெளிய போவான்னு இருக்கும்.

நான் அவங்களுக்கு போன் போட்டு இதைப்பத்தி உண்மையான்னு விசாரிச்சு, அந்த சம்மந்தம் வேண்டாம்னு சொல்லிட்டேன். ஆனா அந்த வீட்டுப்பையன் முட்டாள். கொஞ்சம் ரெண்டாங்கெட்டான். நான் பேசறதுக்குள்ள ரெண்டு தடவை அவ மகளோட சினிமாவுக்கு போயிட்டான். வீட்டுக்குத் தெரியாம போயிருக்கான். அவங்க வீட்ல வேணாம் கல்யாணம்னு சொன்னபோது, இல்லைம்மா நான் அதோட சினிமாவுக்கு போயிட்டேன் அப்படின்னான். சினிமா தானடா, ஒழிஞ்சுபோவுது அப்படின்னா வேற ஏதோ சொல்றான். அவங்க பயந்து போய் ஓடிவந்தாங்க, ஏன் வேணான்னு சொல்றேன்னு. அப்புறம் நான் எனக்கு தெரிஞ்சதை கேள்விபட்டுச் சொன்னேன். அவங்க முகம் இருண்டு போச்சு.

எப்படியாவது இந்தக் கல்யாணத்தை நிறுத்திடணும்னு சொல்லி உனக்கு என்ன காசு வேணுமோ சொல்லு கொடுத்துடறேன் அப்படின்னு போய் பேச ஆரம்பிச்சுருக்காங்க. இங்க வந்து ஒரு கத்துகத்தினா பாரு. எனக்கு அவ்வளவு அவமானமாப் போயிடுச்சு. இந்த இடத்துக்கு வீடு வாங்கி நாங்க வந்த நாள்லேர்ந்து ஒரு சின்ன விஷயம்கூட அதிர்ந்து நாங்க பேசினது இல்லை. எல்லார் வீட்ல இருந்தும் ஓடி வந்துட்டாங்க.

உங்க ரெண்டாவது பொண்ணோட யாரோ சினிமா போனாங்கறதுக்காக, இவங்க வீட்ல வந்து ஏன் கத்தறீங்க. ஆங்... என்னைப்பத்தி தப்பாப் பேசியிருக்காங்க அப்படின்னு சொல்லிச்சு. உன்னைப்பத்தி என்ன கேள்விப்பட்டோமோ, அதுதான் சொல்லியிருக்காங்க. உன் சாமர்த்தியம் அங்கேபோய் கல்யாணம் பண்ணிக்கறது. என்னை அபிப்ராயம் கேட்டா என் அபிப்ராயம் என்னமோ அதுதான் சொல்வேன். நானா போய் சொல்லலை அப்படின்னு நானும் சொல்ல, மத்தவங்களும் சொல்ல அவ இதுல தலையிட்டா ஒழிச்சுக் கட்டிடுவேன்

அப்படின்னு கத்திட்டுப் போயிட்டா. ஏம்மா, சேத்துல போய் கல்லெறியாதீங்க. உடம்பு முழுக்க சேறாயிடுமே அப்படின் னாங்க தெரிஞ்சவங்க.

அடுத்த பதினஞ்சு நாள்ல இரண்டாவது பொண்ணுக்கும், அந்தப் பையனுக்கும் கல்யாணம் ஆயிடுச்சு. கத்தி கூச்சல் போட்டு கல்யாணத்தை நடத்திட்டா. இங்க வந்து நாம சொந்தக்காரங்களாயிட்டோம், ஒண்ணுக்குள்ள ஒண்ணா போயிட்டோம். மறுபடியும் கனகசபாபதிய பொண்ணு கேட்டு வரேன் அப்படின்னா.

கனகசபாபதி எதிர்க்க நின்னு, கிட்டக்கயே வராதீங்க, உங்களுக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. அவங்க கொடுக்க வேண்டிய ஃபீஸ் கூட கொடுக்க வேண்டாம். இத்தோட எங்க வீட்டுக்கு வரதை நிறுத்திக்கோங்கன்னு சொல்லிட்டான். அவ வாயைப் பொத்திட்டு போயிட்டாள். மறுபடியும் வரலை. அவளுக்கு நான் பத்திரிகை அனுப்பலை. பத்திரிகை அனுப்பி வந்தாளான்னு தெரியாது. ஆனா, நாங்க அவளை மதிக்கலைன்னதனால எப்போ வேணா, எதுவே ணாலும் பண்ணுவான்னுதான் காத்துகிட்டிருந்தோம். ஆனா இப்படி பண்ணுவான்னு தெரியலை.

அவ உள்ள வந்த போதே எனக்கு பகேர்னுச்சு. என்னா, என்ன இந்தப்பக்கம் திடீர்னு அப்படின்னுதான் கேட்டேன். அவ காதுலயே வாங்கிக்கலை. ரொம்ப சந்தோஷம், ரொம்ப சந் தோஷம் கனகசபாபதிக்கு ஏத்த ஜோடி அப்படின்னு சொல்லிட்டுப் போனா. கனகசபாபதிகிட்டயும் நல்லபடியா குடித்தனம் பண்ணுப்பா அப்படின்னெல்லாம் சொன்னா. ஆனா, உங்ககிட்ட அப்படி சொல்லியிருக்கா. அவ திருடி. மோசமான பொம்பளை. அவளை நீ நம்ப வேணாம். இந்த விஷயத்துக்கு எந்த முக்கியத்துவமும் கொடுக்க வேண்டாம். இதுதான் நடந்தது."

அம்மா சொல்ல, அந்த இடத்தில் ஒரு அமைதி நிலவியது.

"சரி இருக்கட்டும்."

சிவகாமியின் அப்பா எழுந்திருந்தார்.

"கல்யாணம் பிரமாதமா நடக்குது. ஒரு குறையும் இல்லேன்னு நினைச்சேன். திருஷ்டி கழிய வேண்டாமா. ஒரு சின்ன சலசலப்பு. நமக்குள்ளேயே ஒரு கலக்கம். முழங்கால்ல இடிச்சுக்கிட்டா மாதிரி, நெத்தியில முட்டிக்கிட்டா மாதிரி ஏதோ ஒரு வலி. நல்லவேளையா திருஷ்டி இதோட போச்சு. பாருங்க அவங்க பண்ணது நல்லதுக்குத்தான். உட்கார்ந்து மனசை விட்டுப் பேசிட்டோமே. எந்த அப்பாவாவது பிள்ளையைப் பத்தி இத்தனை உசத்தியா, இத்தனை சத்தியமா பேசுவாங்களா. அப்படி பேசறார்னாக்க அந்தப்புள்ள எவ்ளோ நல்லவனா இருக்கணும். எனக்குப் புரிஞ்சு போச்சு. தப்பான ஆளுங்க, நமக்கு விருப்பம் இருக்கோ இல்லையோ நம்மள சுத்தி சுத்தி வருவாங்க. நம்ம மூஞ்சியில துப்புவாங்க. துடைச்சுகிட்டு போகத்தான் போகணும். நம்முடைய மோசமான நேரம் சில சமயம் இப்படி நடந்துடும்."

"கிளம்புங்கய்யா... மண்டபத்துல காத்துகிட்டிருப்பாங்க."

கனகசபாபதியின் அப்பா துள்ளி எழுந்திருக்க சிவகாமி இரண்டு வினாடி தயங்கினாள்.

அவள் தயக்கத்தை புரிந்து கொண்ட கனகசபாபதியின் அப்பா மனைவிக்கு சைகை செய்து விட்டு வெளியேறினார்.

அவர்கள் இரண்டுபேரும் வெளியேறுகின்ற வேகம் பார்த்து விட்டு சிவகாமியின் அப்பாவும், அம்மாவும் வெளியேறி னார்கள். தனித்து விடப்பட்ட சிவகாமி அவன் காலில் விழுந்து வணங்கினாள்.

"என்ன."

லேசாய் கனகசபாபதி பதறினான்.

"நான் வந்தவுடனே செய்திருக்கணும். செய்யலை இப்போ செய்யறது மட்டுமில்லை, மன்னிப்பும் கேட்டுக்கறேன்."

"என்னாத்துக்கு."

"உங்க வீட்டுக்குள்ள நுழைஞ்சும் நுழையாததுமா ஒரு வம்பு பண்ணதுக்கு."

"நல்லவேளை பண்ணே, சகலமும் சரியா தீர்ந்தது. உள்ளேயே வச்சு பொருமிகிட்டிருந்தீன்னா பெரிய வேதனையா போயிருக்கும்."

"அப்போ என்ன மனசுல பட்டாலும் கேட்டுடட்டுமா."

"தாராளமா. நீ கேட்கணும்கறதுதான் என் ஆசை."

"உங்க மனசுல என்ன பட்டாலும் டப்புனு சொல்லிடு வீங்களா."

"கொஞ்சம்கூட தயங்காம இங்க வா சிவகாமி. இது என்ன சமாச்சாரம்னு கேட்டுடுவேன்."

"கை கொடுங்க. தேங்க்யூ."

அவள் மெல்ல முன்னேறி அவனை அணைத்துக் கொண்டாள். அவன் முகம் நிமிர்த்தி அவள் உதடுகளில் மெல்லியதாய் முத்தமிட்டான்.

மூன்று வினாடிகளுக்கு காமம் போல ஒரு உணர்வு கிளறி அடங்கியது. வெளியே வந்தபோது இரண்டுபேர் முகமும் மலர்ந்திருப்பதைப் பார்த்து சிவகாமியின் அம்மா சிரித்தாள்.

"அப்பா... இப்பதாண்டி உன் மூஞ்சி மூஞ்சியாவே இருக்கு. கொஞ்ச நேரத்துல வயித்தைக் கலக்கிட்டபோ." என்று சொன்னாள்.

அவள் முகமும் மலர்ந்திருந்தது.

இப்பொழுது மகேந்திரா வேனில் சிவகாமியின் தூரத்து உறவினர் மட்டுமே அமர்ந்திருந்தனர். வேன் எல்லோரையும் சுமந்து கொண்டு திருமண மண்டபம் நோக்கிப் போயிற்று.

மூன்று மணிக்கு சத்திரத்தை காலி செய்து கொடுக்க வேண்டுமென்பதால் அந்த மண்டபத்தின் பின் பக்கத்திலேயே பெரிய பாத்திரத்தில் பாலிகைக்கரைத்து விட்டு அந்த நீரை எடுத்துக் கொண்டுபோய் கிணற்றில் கவிழ்த்தார்கள். எடுத்து வந்த பொருட்கள், கொடுக்கப்பட்ட பரிசுகள் எல்லாமும் வண்டியில் அடுக்கி வைக்கப்பட்டன.

சிவகாமியின் வீட்டு மனிதர்கள் எல்லாரும் சத்திரத்தின் வாசலில் நிற்க, சிவகாமியின் அப்பாவையும் அம்மாவையும் அவர்கள் நமஸ்கரித்துவிட்டு நிமிர்ந்தார்கள்.

சிவகாமி மெல்ல விசும்பத் துவங்கினாள்.

அவள் அம்மா அவளை அணைத்துக் கொண்டு தேற்றினாள்.

"எதுக்கு அழணும். ரொம்ப நல்ல குடும்பம். தங்கமான மாமனார், மாமியார். நல்ல புருஷன். உன் ஜாதகம் பார்த்துட்டு எட்டு வயசுலயே சொன்னாங்க. ரொம்ப நல்ல இடத்துலயே வாழ்க்கைப்படுவேன்னு. அதே மாதிரியே அமைஞ்சுது. ரொம்ப சந்தோஷம். நீ என்ன கல்யாணம் கட்டி வேற ஊரா போற. இல்லையேடா தங்கம். இங்கதானே. பஸ் ஏறினா இருவது நிமிஷம் உன் வீட்டு வாசல்ல நிப்பேன். எப்போவேணா போன் பண்ணலாம்னு உங்க வீட்ல சொல்லியிருக்காங்க. என்னாத்துக்கு அழுகை. அழாதே போ. நீ ரொம்ப அழுதீன்னா அவங்களுக்கு வருத்தமா இருக்கலாம்."

அம்மா மிருதுவாக சிவகாமிக்கும், கனகசபாபதிக்கும் கேட்கும்படியாய் சொல்ல, அவள் அழுகையை நிறுத்திக் கொண்டாள்.

எல்லோரையும் தொட்டுத் தொட்டு சிவகாமியின் அம்மா வழியனுப்பி வைக்க, வண்டி மெல்ல நகர்ந்தது.

சிவகாமிக்கு மறுபடியும் கண்களில் நீர் கோர்த்தது.

மீண்டும் சிவகாமியின் அம்மா அதட்டினாள். வண்டி மெல்ல நகர்ந்தது.

சிவகாமி முற்றிலும் உடம்பு திருப்பி அம்மாவையே பார்த்துக்கொண்டு வந்தாள்.

"என்ன இவ்வளவு ஆவலாக பார்க்கிறாளே." என்று கனகசபாபதியும் திரும்பிப் பார்த்தான்.

சட்டென்று சிவகாமியின் அம்மா முகம் பொத்திக் கொண்டு உடம்பு குலுங்கி அழுவதையும் அவளை மெல்ல சிவகாமியின்

தகப்பனார் அணைத்துக் கொள்வதையும் பார்த்து ஒரு கணம் ஆடிப்போனான்.

"அம்மா அழுவறாங்க... அம்மா அழுவறாங்க... என்னை சொல்லிவிட்டு அம்மா அழுவறாங்க..."

உடைந்த குரலில் சிவகாமி கைநீட்டி சுட்டிக்காட்டி கூவினாள்.

மெல்ல கனகசபாபதியின் அம்மா அவள் முதுகைத்தொட திரும்பினாள். அவள் கலங்கிய கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

"வா... என் பக்கம் வந்து உட்கார்."

கனகசபாபதியின் அம்மா அவளை இறுக்கிக் கொண்டாள்.

அம்மாவின் தோளில் முகம் புதைத்து மெல்ல அழும் மனைவியை கனகசபாபதி விசித்திரமாகப் பார்த்தான். ஆனால், அவன் மனைவி சிவகாமி மூன்றே நிமிடத்தில் சரியாகி விட்டாள்.

விடிகாலையிலேயே எழுந்ததாலோ என்னவோ மாலை நேரம் கண்களை இழுத்துக் கொண்டு வந்தது. ஆனாலும், யாராவது வந்து போய்க் கொண்டிருந்தார்கள். திருமணத்திற்கு வரமுடியவில்லையென்று வயதான தம்பதிகள் பரிசுப் பொருட்களுடன் வந்து வாழ்த்துச் சொன்னார்கள். உறவுக்காரப் பையன்கள் அப்பாவிடம் ஏதோ கணக்கு சொல்லி காசு ஒப்படைத்தார்கள். சமையல் அறையில் சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்த சிவகாமி, கண்களை மூடிக்கொண்டு தூங்க ஆரம்பித்துவிட்டாள் என்பதை அம்மா பார்த்து மெல்ல தட்டி, "இன்னும் ஒரு ரெண்டு மூணு மணிநேரம் தாக்குபிடி. யாரோ வந்துகிட்டிருக்காங்க. மருமக தூங்குதுன்னு சொல்ல முடியாது."

சிவகாமி முகம் கழுவி பொட்டிட்டு வந்து தான் சமையல் அறையிலேயே தூங்கிப்போனதை சிரித்தபடி தெரிவித்தாள்.

"இன்னிக்கு எட்டு எட்டரை மணிக்கே தூங்கப் போயிடலாம். போனவுடனே ஏதாவது பால் குடிச்சுட்டு தூங்கிடலாம்." என்று

அன்போடு பேசினான். அவனுக்கு அருகே வந்து அவன் தலையை கலைத்து, முகத்தை கையில் ஏந்திக் கொண்டு கண்களில் சிவகாமி முத்தமிட்டாள்.

"அம்மா வராங்களாம் ஏழு மணிக்கு... இங்க வந்து நம்ம வீட்ல படுக்கை அறைய ஜோடனை பண்றாங்களாம்."

மாடியிலுள்ள அவன் அறையை போனமாதமே வெள்ளை அடித்து சுத்தம் செய்து அப்பா தயாராக வைத்திருந்தார்.

ஒரு வராண்டா. ஒரு பெரிய அறை. நடுநாயகமாய் ஒரு கட்டில். இரண்டு இரும்பு பீரோ. ஒரு பெரிய நிலைக் கண்ணாடியுடன் கூடிய ட்ரெஸ்ஸிங் டேபிள். புத்தக அலமாரி. எழுதும் மேஜை நாற்காலி. இரண்டு ஜன்னல் என்று அழகாக அந்த அறை அமைந்திருந்தது. அந்த அறையைத் தாண்டி ஒரு தாழ்வாரம் இருந்தது. தாழ்வாரம் தாண்டி ஒரு திறந்தவெளி முற்றம் இருந்தது. அந்தத் தாழ்வாரத்தில் மரபீரோவில் கனக சபாபதியின் ஓவிய சாமான்கள் இருந்தன. அவன் தஞ்சாவூர் பெயிண்டிங் அங்கு செய்து, மற்றவருக்கும் கற்றுக் கொடுத்து வந்தான். விதவிதமான கத்திரிகோல்கள். ஒட்டும் பொருட்கள். படம் நிறுத்தி எழுதுகிற மரஸ்டாண்டுகள். நீண்ட மரபெஞ்சு. எதிரே உட்கார்ந்து கொள்ள மரஸ்டூல். வண்ணம் குழைக்கும் பாத்திரம். கையலம்பும் தொட்டி என்று பலதும் இருந்தன.

"பெட்ரூம் வழியாத்தான் இந்த வராண்டாவுக்கு வர முடியுமா." என்று கேட்ட சிவகாமியை ஆவலோடு கனகசபாபதி திரும்பிப் பார்த்தான்.

"ஆமாம்."

"தப்பு."

"என்ன தப்பு."

"ஒரு பெட்ரூமை எல்லாரும் பார்க்கக்கூடாது. அது நல்லதில்லை."

"ஏன், என்ன ஆகும்."

"ஏதாவது ஒண்ணு தோணும். இந்த பெட்ல நாம படுத்தா எப்படி இருக்கும். உட்கார்ந்தா எப்படியிருக்கும் அப்படின்னு

உள்ளுக்குள்ள அந்த இடத்தை பார்த்தவுடனே ரகசியமா எதுனா வரும். ஒரு பெட்ரூமுக்குள்ள எல்லாரும் நுழையக்கூடாது."

"ஆனா, வீட்ல வேற இடம் இல்லையே. இந்த மாதிரி வெளிச்சமா காத்தோட்டமா இருந்தாதானே நல்லாயிருக்கும். இது ரொம்ப நல்ல இடம். இந்த வராண்டா. இந்த திறந்தவெளி ரொம்ப நல்லாயிருக்கு. ஆனா வேற வழி வச்சுடணும்."

"நீங்க இதுக்கப்புறம் க்ளாஸெல்லாம் நடத்தப் போறீங்க இல்ல."

"ஆமாம்..."

"அப்போ அந்தப்பக்கமா ஒரு மாடிப்படி கட்டிடலாம்."

"ஒரே வீட்டுக்கு ரெண்டு மாடிப்படியா."

"இருக்கட்டும். தப்பில்லை."

"இந்த வாசப்படிலேர்ந்து அந்த வாசப்படிக்கு நாலு எட்டு. இதுக்குப்போய் மாடிப்படி கட்டுவாங்களா."

"நாலு எட்டோ, அஞ்சு எட்டோ.. பெட்ரூம்குள்ள வேற ஆள் வரவே கூடாது. வீட்டுக்கு சம்மந்தமில்லாத மூணாவது மனுஷா அட... இங்கதான் படுத்துப்பீங்களா அப்படின்னு வரவே கூடாது. இதுவரைக்கும் வந்ததுகூட பரவாயில்லை. இனிமே உங்களுக்கு கல்யாணம் ஆயிடுச்சு. கல்யாணம் ஆனவங்க பெட்ரூமை எட்டிப்பார்க்கறது அத்தனை சிலாக்கியம் இல்லை."

"மாடிப்படி கட்டணும்னா அப்பாவைத்தானே கேட்கணும்."

"நான் கேட்டுடறேன்."

சிவகாமி அறையை சுற்றிப் பார்த்தாள்.

"கட்டிலை சுத்தி வராத சுவர் ஒட்டி போட்டுடலாம்."

"பீரோ."

"அது ஈசான்ய மூலையில இருக்கு. இவ்ளோ கனம் அங்க வேணாம். அதை வேற இடத்துல வச்சிடலாம்."

"இதெல்லாம் தெரியுமா உனக்கு."

"எங்க வீட்ல கொஞ்சம் பார்த்து பார்த்து செய்வாங்க. அதனால தெரியும். அப்பா வந்தார்னா இன்னும் அழகா சொல்லிடுவார்."

அவள் அறைதாண்டி அடுத்த வராண்டாவிற்குப் போனாள். அங்கு பெரிய கிருஷ்ணர் படம் இருந்தது. சிம்மாசனத்தில் கையில் வெண்ணையோடு கிருஷ்ணர் இருக்க இரண்டு பக்கமும் இரண்டு பெண்கள் உண்பதற்குண்டான பண்டங்கள் வைத்திருக்க, படம் முற்றிலும் முடிந்த நிலையில் இருந்தது. கிருஷ்ணர் கண்ணில் குறும்பு தெரிந்தது.

"முகம் ரொம்ப அழகா இருக்கு. நீங்க வரைஞ்சதா."

"ஆமாம்."

"ஒண்ணு கேட்கறேன் தப்பா எடுத்துக்காதீங்க."

"கேளு."

"ஏன் தஞ்சாவூர் பெயிண்ட்டிங் அழகா வரைய வருதே, நல்லபடியா படம் போட்டா என்ன."

"காலண்டர் படம் மாதிரியா."

அவள் யோசித்துவிட்டு 'ஆமாம்' என்று தலையாட்டினாள்.

"அதாவது கிருஷ்ணர் தவழறமாதிரி படம்போட்டு மரம், செடி, கொடி போட்டு... வாத்து, கிளி, மைனா, வேடன், மயில், வானம், வயல்வெளி அப்படின்னு போட்டுகிட்டே போறதுதானே."

"ஆமாம். நல்லாதானே இருக்கும்."

அவள் மறுபடியும் யோசித்துவிட்டுச் சொன்னாள்.

"அது யார் வேணா செய்துடலாம். கொஞ்சம் ஓவியப் பயிற்சி இருந்தா வரைஞ்சுடலாம். தஞ்சாவூர் பெயிண்டிங் அப்படி அல்ல. அது தனிக்கலை. பட்டியை குழைச்சு குழைச்சு ட்ராயிங்ல போட்டு அதுமேல நகைகள் ஒட்டணும். ஒரு புடைப்பு ஓவியமா இது இருக்கும். இன்ன விதமாத்தான் உடுத்திப்பாங்க. இன்ன விதமாத்தான் அது இருக்கணும்னு

தீர்மானம் ஆகியிருக்கு. இதுவொரு எழுதாத விதி. இந்த ஓவியங்களுக்கு தட்டை ஓவியங்கள்னு பேர்.

சரபோஜி காலத்துல ராஜாக்களை வரையறபோது இந்த மாதிரி பட்டு ஜரிகைபோட்ட கவுனோட, நிறைய நகையோட தங்க பின்புலத்தோட வரைஞ்சிருக்காங்க. ராணிகளையும் அப்படித்தான். கொசகொசன்னு புடவையும், இருக்கற நகை எல்லாத்தையும் அவ கழுத்துல மாட்டி ராணின்னு அவளை தூக்கி நிறுத்த ட்ரை பண்ணியிருக்காங்க. அதே பாணியை கடவுளை வரையும்போதும் பண்ணியிருக்காங்க.

குழந்தை கிருஷ்ணனா இருந்தாலும் ரெண்டரை கிலோ நகை போட்டுத்தான் வரையணும். பின்புலன்கள் தட்டையாத் தான் இருக்கணும். முகத்துல, கைல, கால்ல ஒரு குழைவு, ஒரு மேடு பள்ளம் காண்பிக்கலாம். நான் கொஞ்சம் கூடுதலா காண்பிப்பேன். இந்த மாதிரி ஓவியங்கள் நான் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவில்லகூட பார்த்தேன். ஓவியங்கள் தட்டையா இருந்தாலும் கண், மூக்கு, உதடு, உதடுக்கு கீழுள்ள பாகம், காது, மார்பு, பிருஷ்டம், தொடை இதுல எல்லாம் ஒரு உருளை காண்பிச்சுருப்பான். நான் போர் அடிக்கறேனா."

"இல்லையே. எங்க வீட்டுக்காரர் வேலை எனக்கு எப்படி போர் அடிக்கும். இதைவிடவும் காலண்டர் படம், சீனரி எல்லாம் நல்லாயிருக்குமேன்னுதான் நினைச்சேன். அது வரைய முடியுமில்ல உங்களால."

"நல்லா வரையலாம். சைன் போர்டுன்னு சொல்லுவாங்க. அதுதான் ஆரம்பிச்சேன். ஒரு ஒயின்ஷாப்புக்கு போர்டு எழுதச் சொன்னாங்க.

அருவிக் கரையில நிக்கற ஈரப்புடவை கட்டிகிட்ட பொம்பளை படம் வரைஞ்சேன். மெல்லிய புடவை. கிட்டத்தட்ட உடம்பு முழுக்க பிடுங்கிட்டு தெரியும். இழுத்தா இடுப்புப்புடவை நழுவிகிட்டு விழுந்துடும். கண்ணுல திமிர். உதட்டுல சிரிப்பு அப்படின்னு ரொம்ப அழகா இருவத்தஞ்சு வயசு பொண்ணா வரைஞ்சேன். எல்லாரும் படம் பார்த்தவுடனே ஆஹா ஓஹோன்னு சொன்னாங்க.

அந்தத் தெரு முழுக்க ஒவ்வொரு கடையிலயும் எனக்கு ஒரு படம். எனக்கு ஒரு படம்னு கேட்டு வந்தாங்க. இதுலயே மாட்டிகிட்டு செத்துப்போயிடுவோமோன்னு எனக்கு பயமா இருந்தது. இல்லை, நான் சைன் போர்டு வரையலைன்னு ஒதுங்கிட்டேன்.

வெறுமே மகாத்மா காந்தி வரைஞ்சு தரேன்னா யாரும் ஒத்துக்கலை. மங்களகரமா ஒரு பொண்ணு வரைஞ்சு தரேன்னாலும் யாரும் ஒத்துக்கலை. திரும்பத் திரும்ப கவர்ச்சி நடிகையையே வரைஞ்சுகிட்டிருந்தோம்னா நான் ஓவியம் கத்துகிட்டதுக்கே அர்த்தம் இல்லாத போயிடும். வாலிப பசங்கள கெடுக்கறதுக்கே இந்த ஓவியம் காரணமாயிடும். அப்படி இருக்க நான் விரும்பலை. என் படம் ஒரு ரம்மியமான புத்தியை, மனசை, சூழலை கொடுக்கணும்.

நீ சொல்றா மாதிரி காலண்டர் படம் வரையலாம். எனக்கு அதுலயும் திருப்தி இல்லை. சரசரன்னு ரெண்டு நாள்ல ஒரு காலண்டர் படம் வரைஞ்சு முடிச்சுடுவேன். தஞ்சாவூர் பெயிண்டிங் பண்றபோது இன்ச் இன்ச்சா ஒவ்வொரு இடமா பார்த்துப் பார்த்து செய்ய வேண்டியிருக்கு. வெட்டி ஒட்டி ஒவ்வொரு இடத்தையும் அழகுபடுத்த வேண்டியிருக்கு. அதைத்தவிர காலண்டர் பெயிண்ட்டிங்கைவிட தஞ்சாவூர் பெயிண்டிங் காசு ஜாஸ்தி."

"காசுக்காகத்தான் வரைஞ்சீங்களா."

"நான் ஒரு சதர்ன் ரெயில்வே ஊழியன். ட்ராப்ட்ஸ் மேன். எனக்கு ஆறாயிரம் ரூபா சம்பளம். ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுவத்தாறுல இந்த சம்பளம் போறும். ஆனா, இன்னும் சௌகர்யமா இருக்கணும்னா, வேற, ஏதாவது செய்யலாமில்லையா. அதுவும் ஆபீஸ்ல வெட்டி முறிக்கற வேலை எதுவும் இல்லை. அதே நேரத்துல ஆபீஸ்ல போய் இந்த வேலையெல்லாம் செய்யவும் கூடாது. வீட்டுக்கு வந்தவுடனே ப்ரஷ்ஷும் பெயிண்ட்டுமா உட்கார்ந்துப்பேன். பட்டி பிரைஞ்சு மெல்ல மெல்ல அழுத்தி அதன்மேல தங்கரேக்கு ஒட்ட அனுப்பிடுவேன்."

"உங்களுக்கு இந்த வேலை பிடிச்சுருக்கா."

"ரொம்ப பிடிச்சுருக்கு சிவகாமி."

"உங்களுக்கு என்ன பிடிக்குமோ அது எனக்கும் பிடிக்கும். இந்த இடம் ரொம்ப திறந்த வெளியா இருக்கே தூசு படியாது."

"பட்டிமேல தூசு படிஞ்சா ஒண்ணும் தப்பில்லை. தங்கரேக்கு ஒட்டறபோது ட்யூப்லைட் போட்டு இந்தப் பக்கம் ஈரத்துணி போட்டுப்பேன். ஈரத்துணி இருந்தா தாண்டி தூசுவராது. ஏன்னா ஏ.சி.ரூமா இருந்தா செய்ய முடியாது. பட்டி ஊறாது. பிய்ஞ்சு வந்துடும். ஒரு வெப்பமான சூழ்நிலைதான் வேணும்."

"என்னாங்கடா மாடிக்கு போனீங்க ரெண்டுபேரும் ஆளைக் காணோம். என்ன பண்றீங்க."

கீழிருந்து அப்பாவின் குரல் கேட்டது.

அவள் திடுக்கிட்டாள். தலையில் அடித்துக் கொண்டாள்.

"மறந்தே போச்சு உங்களோட பேசினதுல."

"என்ன."

"மாடி ஏறும்போதே நினைச்சேன். அஞ்சு நிமிஷத்துல கீழே இறங்கிடணும்னு. பேசிகிட்டே போனோமா சட்டுனு மறந்துபோச்சு."

"ஏன்... அஞ்சு நிமிஷம்."

"ரொம்ப நேரம் நின்னோம்னா நீங்களும், நானும் வேற எதுவோ பண்ணிகிட்டிருப்போம்னு நினைப்பாங்க."

"ஓ... நாம டிராயிங் பத்திதானே பேசிகிட்டிருந்தோம்."

"அவங்களுக்குத் தெரியுமா. சொன்னா நம்புவாங்களா."

"எங்கப்பா சொன்னா நம்புவாரு."

"அதெப்படி."

"நான் பொய்யே சொல்லமாட்டேன்னு எங்கப்பாவுக்குத் தெரியும்."

அவள் திரும்பினாள். புருஷனைப் பார்த்துச் சிரித்தாள்.

ஊரிலுள்ள மனிதர்கள் விதம்விதமாய் பொய் சொல்லிக் கொண்டிருக்க, பொய் சொல்லமாட்டேன் என்கிற புருஷனைப் பார்க்க அவளுக்கு சந்தோஷமாக இருந்தது.

அந்த உண்மைக்கு பதில் மரியாதையாய் இவனுக்கு உவப்பாய் நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பலப்பட்டது. மெல்ல அருகில் போய் இழைந்தாள். புருஷனின் கையைப் பற்றிக் கொண்டு கீழிறங்கினாள்.

"மாடிப்படியா கட்டிடலாமே. இவன்தான் வேணாம்னு குறுக்க நின்னான். இவங்கம்மா வந்து சொன்னா. படுக்கை ரூம்ல பொண்ணுங்களெல்லாம் உட்கார்ந்திருக்காங்கன்னு.

வெளிய வெக்கைப்பா... கோடை நாளில்ல. அதனால ஃபேனைப் போட்டு ரூமுக்குள்ள உட்கார்ந்திருக்காங்கன்னு இவன் சொன்னான். அவங்கம்மா உடனே எதிர்ப்பு தெரிவிச்சா. உட்கார்ந்துக்கணும்னு தோணும். அப்புறம் படுத்துக்கணும்னு தோணும். அப்புறம் இரண்டு காலையும் விரிச்சு கிட்டு சாய்ஞ்சுகிட்டு கிடப்பா. நீ குறுக்க நெடுக்க போயிட்டு வருவ. அது பார்க்கறதுக்கு நல்லாயிருக்காது அப்படியே தூங்கிடுவா. அது இன்னும் மோசமா இருக்கும். இது தப்பு. இது வேணாம்னா, அவன் கேட்கலை. அவனுக்கு அது ஒண்ணும் உறைக்கலை."

"அவர் ரொம்ப நல்லவரா இருக்காரு. நான் பொய்யே பேசமாட்டேன். நான் பொய் பேசமாட்டேன்னு எங்கப்பாவுக்கு தெரியும்னு சொல்றாரு. எனக்கு ஆச்சரியமா இருக்கு."

"இதுல ஒரு ஆச்சரியமும் இல்லைம்மா. அவங்க தாத்தா வினுடைய ஆசீர்வாதம். அவன் நல்ல பையன்னு அவன் ஆறு வயசுல எனக்கு தெரிஞ்சுபோச்சு."

"எப்படி."

அவன் அப்பாவின் பேச்சுக்கு ஆச்சரியமாய், சிவகாமி கேள்வி எழுப்பினாள்.

"இந்த வீட்ல அப்போ முற்றம் இருந்தது. இப்போ இடிச்சு கட்டிட்டோம். முற்றத்துல அங்கங்கே சின்னச்சின்னதா பள்ளம் இருக்கும். அந்தப் பள்ளத்துல கைகால் கழுவின தண்ணி

தேங்கும். காக்கா வந்து அந்தப் பள்ளத்துல இருக்கற தண்ணிய குடிக்கும். அதுல ஒரு பள்ளம் கொஞ்சம் பெரிய பள்ளம். ரெண்டு மூணு காக்கா என்ன பண்ணும் தெரியுமா. அதுல தண்ணி சேர்ந்ததுன்னா வந்து உடம்ப உட்காரவச்சு வேகமா குளிக்கும். என்னப்பா பண்ணுது காக்கான்னு கேட்டான். குளிக்குதுப்பா அப்படின்னு சொன்னேன். பையன் பார்த்து கிட்டே இருந்தவன் விபூதி ஒரு கைல எடுத்துகிட்டுப்போய் அந்தப் பள்ளத்துகு பக்கத்துல வச்சான். எனக்கு ஒண்ணும் புரியலை. என்னாடா பண்றே அப்படின்னு கேட்டேன். காக்கா குளிக்குதுப்பா அடுத்தது விபூதி இட்டுக்க வேணாமா. அதான் விபூதி வச்சேன் அப்படின்னான். எனக்கு ஒரே சிரிப்பு. காக்கா எப்படிடா விபூதி இட்டுக்கும் அப்படின்னு கேட்டேன். கறுப்பா இருக்குப்பா அது விபூதி இட்டுக்கிட்டா நல்லாயிருக்காது அப்படின்னு கேட்கறான். என்ன பண்றது அவன் ஓவியனா, நல்லவனா எனக்கு ஒண்ணும் புரியலை. கருப்புல வெளுப்பு நல்லா இருக்கும்னு ஓவியனாகவும் காக்கா குளிச்சுடுச்சு அடுத்தபடி விபூதி இட்டுக்கணும்கற நம்பற நல்லவனாகவும் இருக்கான். இவனை குளிச்சபிறகு விபூதி இடு விபூதி இடுன்னு சொல்லிகிட்டிருக்கோமில்ல அதனால காக்காக்கு இவன் கொண்டு போய் விபூதி வச்சுட்டான்."

அப்பா சொல்ல சிவகாமி இடி இடி என்று சிரித்தாள். புருஷனை காதலுடன் பார்த்தாள்.

கனகசபாபதி எந்த சலனமுமில்லாமல் அவளையே பார்த்து மெல்லியதாய் புன்முறுவல் செய்தான்.

"மாடிப்படி கட்டிடலாம். அதுக்கு முன்னாடி ஒரு வார்த்தை. ஏண்டா தொடர்ந்து இந்தப் பள்ளிக்கூடத்தையெல்லாம் நடத்தப்போறியா"

"எதுப்பா."

"இந்த தஞ்சாவூர் பெயிண்டிங். லேடீஸுக்கு கத்துக் கொடுக்கறது செய்யப்போறியா."

"ஆமாப்பா... யாராவது வந்து போய்கிட்டுதான் இருப்பாங்க."

"அதான் கேட்டேன். மேல்மாடியில திறந்த வெளியில கூரை போட்டு ஷெட் ஆக்கிடட்டுமா."

"அப்புறம் துணி உலத்தறதுக்கு இடம். இங்க வரமிளகாய். வடாம்னு உலத்தறீங்களே."

அப்பா திரும்பி அம்மாவைப் பார்த்துக் கேட்டார்.

"ஆமாம். முக்கியமில்லையா. வடாம், வரமிளகாய் விட்ருங்க. துணியை எங்க உலத்தறது."

"அப்போ டெரஸ் போட்டுடறேன்." அப்பா தொடை தட்டினார்.

"இது முன்னவே செய்திருக்கணும்."

"இதை ரெண்டு வருஷம் முன்னாடி சொன்ன போது ஆங்... எவங்கிட்ட இருக்கு துட்டுன்னு கத்தனீங்க. இதுக்கு கூடுதலா தான் துட்டு ஆகும். இந்த ரெண்டு குழந்தைங்களையும் மேல வச்சுகிட்டு இடிச்சு புடைச்சு தூசாக்கிட்டு நிப்பீங்களா. அவங்களுக்கு கஷ்டமில்லை."

"என்னம்மா இருபதடிக்கு இருபதடி பத்துநாள்ல முடிச்சுடுவோம். அஸ்திவாரமா தோண்டப்போறோம். பில்லர் மேலயே தூக்கிட்டு வந்துடப்போறோம். செங்கல் எடுக்க ஒருநாள். சுவர்பூச ஒருநாள். தூக்குக்கட்டை அடியில கொடுத்து தளம் போடறதுக்கு ஒருநாள். காயறதுக்கு ஏழுநாள். பத்தா நாள் பெயிண்ட் அடிச்சுடலாம். ரெண்டாவது மாடியில ஆடுங்க, பாடுங்க, வரமிளகாய் உலர்த்துங்க. யாரும் கேட்பார் இல்லை."

மாமனார் கை ஆட்டிக் கொண்டு பேச அதற்கும் வாய் பொத்தி சிவகாமி சிரித்தாள். வேறு வீட்டிற்கு வந்திருக்கிற நினைப்பே அவளுக்கு இல்லை. பட்சணக்கூடையை பிரித்து மாமனாருக்கு முதலில் கொடுத்துவிட்டு, மாமியாருக்கு ஒரு தட்டில் வைத்துவிட்டு புருஷனுக்கு எடுத்துக் கொண்டு போனாள்.

"உனக்கு" என்று மாமனார் கேட்க, திரும்பிப் பார்த்துச் சிரித்தாள்.

"நாங்க ரெண்டுபேரும் ஒரே தட்டுல சாப்பிடுவோம்." என்று பதில் சொன்னாள்.

மாமனார் சிரிக்க, வெட்கப்பட்டுக்கொண்டே அறைக்குள் ஓடிப்போய் டேபிளில் தட்டை வைத்து தண்ணீரும் வைத்தாள்.

பட்சணம் சாப்பிட்டு வயிற்றில் சற்று பாரம் சேர்ந்தவுடன் தூக்கம் வந்தது. புருஷன் மல்லாந்து படுத்துக் கொண்டு தூங்க, அருகே உட்கார்ந்து தலையைத் தடவி விட்டாள். உதட்டில் முத்தமிட்டாள்.

எழுந்திருந்து ஹாலுக்கு போனாள். சமையல் அறையைச் சுற்றி வந்தாள். கொல்லைப்புறம் பார்த்தாள். இன்னும் மர ஷெல்புகள் வைக்க முடியும் என்று நினைத்துக் கொண்டாள்.

மாமனாரும், மாமியாரும் உறங்குகின்ற அறையைப் பார்த்தாள். கொல்லைப்புறத்தில் போய் வாஷிங் மிஷினையும், துணி உலர்த்துகின்ற இடங்களையும் பாத்ரூமையும் பார்வை யிட்டாள். வீட்டிற்கு வெளியே வந்து காம்ப்பௌண்டை சுற்றி வந்தாள்.

"இங்க மாடிப்படி வந்தா காம்ப்பௌண்ட் சின்ன தாயிடுமோ."

"ஆமாம். ஒரு ஆள் நுழையறமாதிரிதான் இருக்கும்." மாமியார் கவலையோடு சொன்னார்.

"வேணாம்னு சொல்லிடலாமா."

மாமியார் முகத்தைப் பார்த்துக் கொண்டே மறுபடியும் கேட்க, மாமியார் "இல்லை. நீ சொல்றதுதான் கரெக்ட். எனக்கு வேற ஒரு எண்ணம் தோணிச்சு."

"என்ன மாமி."

"புதுசா கட்டற இடத்தை நீங்கபோய் படுக்கையா உபயோகப்படுத்திகிட்டு, இப்போ இருக்கற இடத்தை பெயிண்டிங் பண்ற இடமா வச்சுகிட்டா என்ன."

அதாவது மாடிப்படியே புதுசா கட்ட வேணாம் அப்படின்றீங்களா."

"ஆமாம். பெயிண்டிங் இடம் தாண்டி நீ உள்ள போகலாம்."

"தெரியலையே. யார் வருவாங்க. அந்த இடத்தைத் தாண்டி நம்ம ரூம்ல எட்டிப்பார்ப்பாங்களா. எதுவும் புரியலையே"

"இது கிழக்க பார்த்த வீடு. மேல்மாடி வராண்டா மேற்கு பார்த்து இருக்கு. அடுத்தது ரூம் இருக்கு. அதுக்கு அடுத்து இருக்கறது திறந்தவெளி. திறந்தவெளி வெப்பம் ரூமுக்குள்ள வரும். என்னதான் அங்க ஒரு வராண்டாவும் தடுப்பும் போட்டிருந்தாலும் அந்த இடத்துலபோய் ரூம் கட்டினா மேற்கத்து வெய்யில் அந்த ரூமுக்குள்ள வந்துடும். அந்த இடத்துலபோய் ரூம் கட்டணும். அது வேலை செய்யற இடமாயும் இருக்கணும்.

முன் பக்கத்துக்கு ரூம் கட்டறதுக்கு ஒரு தடுப்பா அமைஞ்சுடும். தெற்கத்திப்பக்கம் ஜன்னல் இருக்கறதுனால ஜன்னல் லேர்ந்து காத்து வரும். ஆனாலும், ஜன்னலை திறக்காத அங்க ஒரு ஏ.சி. போடணும். டிராயிங் போட வரவங்க வீட்டுக்குள்ள நுழையாத காம்ப்பௌண்ட் வழியா சுத்தி மாடி ஏறி வெட்டவெளிய ரூமா மாத்தினமே, அந்த ஹாலுக்குப் போகணும். வராண்டாவையும் சேர்த்துட்டோம்னா இருவத் தஞ்சு அடிக்கு முப்பதடி ஹாலாப் போயிடும்.

அந்த வராண்டா இருக்கற இடத்துல நிறைய மரபீரோ செய்து படங்களை சுருட்டி வைக்கறதுக்குண்டான இடத்தை ஏற்பாடு பண்ணி, தங்கரேக்கு வைக்கறதுக்கான பொட்டி வைக்கறதுக்கு ஏற்பாடு பண்ணலாம். ஹால்ல நாலஞ்சு ஸ்டாண்ட் போட்டு நின்னோ, உட்கார்ந்தோ தஞ்சாவூர் பெயிண்ட்டிங் பண்றாமாதிரி பண்ணிடுவேனே தவிர, பெயிண்ட்டிங் பண்ற இடத்தை தாண்டி ரூமுக்கு போறது. ரூமைத்தாண்டி பெயிண்டிங் வரதுன்னு கிடையவே கிடையாது." என்று கனகசபாபதியின் அப்பா பேசினார்.

"பெரிய இடத்து பொண்ணுங்க வராங்கப்பா. அவங்கள வந்து வீட்டுக்கு கூப்பிடாம எங்கயோ வாசல் வழியா மாடிக்கு கூட்டிகிட்டுபோனா நல்லாயிருக்குமான்னு பார்க்கறேன்."

"முக்கியமானவங்களை வீட்டுக்கு கூட்டிகிட்டு வந்து காபியைக் கொடுத்துட்டு அப்புறம் மாடிக்கு கூட்டிக்கிட்டு போ. வேலை செய்யற இடத்தையும், வீட்டையும் வச்சு குழப்பாத. உனக்கு சௌகரியமா இருக்கணும்கறதுக்காகத் தான் வீட்டு மாடியோட வேலை இடம் இருக்கே தவிர, நியாயத்துக்கு இது நாலு தெரு தள்ளி இருந்தாகூட நல்லது."

"ஐயோ... மாமா அதெல்லாம் வேணாம். இவர் ஆபீஸ் போயிட்டு வரதே பெரிய விஷயம். அப்புறம் இந்த வேலைக்கு வேற தள்ளிப் போகணும்னா நான் தனியா உட்கார்ந்து அவஸ்தைப்படுவேன்."

சிவகாமி சொல்ல எல்லோரும் சிரித்தார்கள்.

"என் புள்ளைய இப்பவே முடிஞ்சு முந்தானையில வச்சுக் கணும்னு பார்க்கறியா. அதெல்லாம் நான் விடமாட்டேன்."

வேண்டுமென்ற புடவைத் தலைப்பை உதறி நாடக பாணியில் கனகசபாபதியின் அம்மா புடவையைச் சொருகிக் கொண்டாள்.

வீடு அதற்கும் வாய்விட்டுச் சிரித்தது.

சிவகாமியின் அம்மா அம்பாஸிடர் காரில் பிரிக்கப்படாத பரிசுப்பொருட்களுடன் வந்து இறங்கினாள்.

"படுக்கை எல்லாம் பின்னாடி டெம்ப்போல வருது. பெட்ரூம் எதுன்னு சொன்னீங்கன்னா நான் அதை ரெடி பண்ணிடுவேன்."

சிவகாமியின் பின்னால் நின்று மிருதுவாய் பேசினாள்.

"நல்லா செய்யுங்க."

கனகசபாபதியின் அம்மா கூட்டிக்கொண்டு போக, அங்கிருந்த படுக்கையை உருவி சுருட்டி பின்னால் போட்டு விட்டு புதுப்படுக்கை விரிக்கப்பட்டது. விதம்விதமான குழந்தைகள் படம் ஒட்டப்பட்டன. ஆர்ட்டின் ஒட்டி ஐ லவ் யூ என்ற எழுத்து ஒட்டி, பரபரவென்று தனி மனுஷியாய் சிவகாமியின் அம்மா இயங்கினாள். மல்லிகைச் சரம் கண்ணால் அளவு பார்த்து நறுக்கி கட்டில்மீது தொங்க விட்டாள். கதம்பத்தில் ஜன்னலோரம் திரைச்சீலை மாதிரி ஏற்பாடு செய்தாள். காற்றில்

பூ வாசனை அள்ளிக்கொண்டு அறையெங்கும் தெளித்தது. பரபரவென்று அவள் செய்யும் வேலையை வியப்போடு கனகசபாபதியும், அவன் அம்மாவும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"என்ன வேகமா வேலை செய்யறீங்க. என்னால இந்த வேகம் நினைச்சு கூட பார்க்க முடியாது."

"இதைவிட வேகமா வேலை செய்வேங்க. இப்போ வயசாயிடுச்சு. அதனால நிதானமாயிட்டேன்."

"இதான் நிதானமா. சரியாப் போச்சு. அப்ப நான் எதுல சேத்தி."

"என்னால நிதானமா இருக்க முடியாதுங்க. ரொம்ப வேகமா இருப்பேங்க. இதனாலேயே எனக்கும் அவருக்கும் மனஸ்தாபம் வரும். அஞ்சு மணிக்கு எழுந்திருக்கணும் விடியற்காலையில அப்படின்னா அஞ்சுமணிக்கு நான் தானா எழுந்துடுவேன். ஆறுமணிக்குள்ள இந்த வேலையை முடிக்கணும்னா முடிச்சிடணும். முடிச்சாதான் எனக்கு நிம்மதியா இருக்கும்."

"அதே சமயத்துல சுத்தமாகவும், நறுவிசாவும் பண்றீங்க. கரெக்டா கண்ணுல பார்த்தீங்க. பூ கட் பண்ணீங்க. அவ்வளவு அழகா துல்லியமா இருக்கு."

"அது எங்கம்மா சொல்லிக் கொடுத்தது. அவங்க நிறைய கைவேலை செய்வாங்க. எங்க தெருவுல எல்லா வீட்டுக்கும் கண்ணாடி தோரணம், பாசி மணித் தோரணமெல்லாம் அவங்க பண்ணிக் கொடுத்ததாத்தான் இருக்கும்."

"நீங்களும் அதெல்லாம் பண்ணுவீங்களா."

"பண்ணுவேன். அவ்வளவு நேர்த்தியா வராது."

"எனக்கு எப்படி பண்றதுன்னு சொல்லிக் கொடுங்களேன்."

கனகசபாபதி ஆவலாகக் கேட்டான்.

"ஆச்சு... அது ஒண்ணுதான் பாக்கி. இன்னும் கண்ணாடி தோரணம், பாசிமணித் தோரணம் கத்துகிட்டான்னா மணிக் கணக்கா அதோடயே உட்கார்ந்துகிட்டிருப்பான்."

கனகசபாபதியின் அம்மா மெல்ல முகவாய் இடித்தது போல் நடித்துப் பேசினாள்.

"பார்வதியம்மா அவங்ககிட்டதான் தஞ்சாவூர் பெயிண்டிங் கத்துக்கணும்னு ஆசைப்படறேன். அதை மெல்ல சொல்ல ணும்னு நினைச்சேன். நீங்க ஏதோ கேள்வி கேட்டு என்னை இப்போ சொல்ல வச்சிட்டீங்க." என்று வெட்கம் கலந்த சிரிப் போடு சிவகாமியின் அம்மா கேட்க, அவளை அதிசயத்துடன் கனகசபாபதியின் அம்மா பார்த்தாள்.

"நான் சொல்லித்தரேன் மாமி. இதென்ன பெரிய கஷ்டம். உங்களுக்கெல்லாம் ரெண்டு சிட்டிங் உட்கார்ந்தா மொத்தமா கத்துப்பீங்க."

"ஆனா, உங்க மாதிரி முகம் போட கத்துக்கணுமே. நீங்க வரையறாமாதிரி முகம் எனக்குத் தெரிஞ்சு எந்த தஞ்சாவூர் பெயிண்டிங்லேயும் பார்த்ததில்லை."

இப்பொழுது கனகசபாபதி வெட்கப்பட்டான்.

"என்னவோ தெரியலை சாரதா."

கனகசபாபதியின் அம்மா பார்வதி, சிவகாமியின் அம்மாவை அருகே போய் உற்றுப்பார்த்து பேசத் துவங்கினாள்.

"நானும் ஒண்ணும் நறுவிசா காரியம் பண்றவ இல்லை. எங்க வீட்டுக்காரரும் ஒண்ணும் பிரமாதமா இந்த மாதிரி வரையற விஷயங்கள்ளயோ, பேசற விஷயங்கள்ளயோ, பாடற விஷயங்கள்ளயோ கெட்டிக்காரர் இல்லை. நல்லா சமைச்சு, நல்லா சாப்பிடணும். நல்லா சம்பாதிக்கணும். வசதியா வாழணும் அப்படின்ற எண்ணம்தான் எங்களுக்கு. எல்லா வசதி யும் எங்க மாமனார், கனகசபாபதியோட தாத்தா ஏற்பாடு செய்துட்டு போயிருந்தாரு. அவரு உட்கார்ந்து தேவாரம், திருவாசகம் பேசுவாரு. நல்லா பாடுவாரு. கோயிலுக்கெல்லாம் நிறைய செய்வாரு. அன்னதானம் செய்யறதுன்னா அவ்வளவு இஷ்டம். அவரு செய்த புண்ணியம்தான் இந்த பிள்ளைக்கு இப்படி டிராயிங் வரதும், ஒரு ரெயில்வே வேலை கிடைச்சதும். இத்தனைக்கும் அவர் ஒண்ணும் பெருசா தொழில் பண்ணது

கிடையாது. ஆனா, சொந்தமா வீடு வாங்கி, பலருக்கு கல்யாணம் பண்ணி, நல்லா செலவழிச்சாரு. நான் இதுவரை கல்யாணம் கட்டியபோது அவங்களைப்பத்திதான் அதிகமா பேசினாங்க. ரொம்ப நல்ல குடும்பம். பேட்டைக்கே காவல் தெய்வம் அப்படி இப்படின்னு சொன்னாங்க. யாருமே பேர் சொல்லலை. பெரியவரு... பெரியவருன்னுதான் சொன்னாங்க. அதுவும் சந்தோஷமா இருந்தது. என் கல்யாணமே ஆச்சரியம் தான் சாரதா."

பார்வதியம்மாள் வியப்போடு பேசினாள்.

"அஞ்சு மாசம் முன்னாடி நீ யாருன்னு எனக்கு தெரியுமா. நான் யாருன்னு உனக்குத் தெரியுமா. நீ வந்து படியேறி நின்னவுடனே எனக்குள்ள இந்த இடம் முடிஞ்சுடும்னு தெரிஞ்சு போச்சு."

"இதுக்கு முன்னால பல இடங்கள் பார்த்தீங்களாம்மா."

"பல இடங்கள் பார்க்கலை. ரெண்டு இடம் பார்த்தோம்."

"போய் பொண்ணு பார்த்துட்டு வந்தீங்களா."

"நாங்கதான் போனோம். அவன் வரலை."

"சிவகாமிய பார்க்க மட்டும் வந்திருந்தாரே."

"அப்படி நேர்ந்துபோச்சு. இவர் தம்பி வண்டியை எடுத்து கிட்டு வரதா இருந்தோம். தம்பி வீட்ல வண்டி அனுப்பறதுக்கு சொல்லியிருந்தோம். சரின்னு சொன்னாங்க. கடைசி நேரத்துல டிரைவர் வரலை உடம்பு சரியில்லை அப்படின்னாங்க. வேணாம் பி.டி.வண்டி வச்சுகிட்டு போங்க. அப்படின்னு இவன் சொன்னான். ஆனா, இவர் தம்பி ஒத்துக்கலை. கொண்டாந்து வண்டியை விட்டுட்டு பி.டி.வண்டியில எல்லாம் போகாத. சொந்த வண்டியில போனாதான் மரியாதை. நீ வண்டி ஓட்டி கிட்டு போ அப்படின்னு கனகசபாபதிய வண்டி ஓட்டிகிட்டு போகச் சொல்லிட்டாங்க. கனகசபாபதி, இவங்கப்பா, நான், என் தங்கச்சி, இவர் தம்பி பொண்டாட்டியும் பொண்ணு பார்க் கறதுக்கு வந்தோம்."

"தம்பி பொண்டாட்டி கல்யாணத்துக்கு வரலையே."

கனகசபாபதியின் அம்மா மெல்ல முகவாய் இடித்தது போல் நடித்துப் பேசினாள்.

"பார்வதியம்மா அவங்ககிட்டதான் தஞ்சாவூர் பெயிண்டிங் கத்துக்கணும்னு ஆசைப்படறேன். அதை மெல்ல சொல்ல ணும்னு நினைச்சேன். நீங்க ஏதோ கேள்வி கேட்டு என்னை இப்போ சொல்ல வச்சிட்டீங்க." என்று வெட்கம் கலந்த சிரிப் போடு சிவகாமியின் அம்மா கேட்க, அவளை அதிசயத்துடன் கனகசபாபதியின் அம்மா பார்த்தாள்.

"நான் சொல்லித்தரேன் மாமி. இதென்ன பெரிய கஷ்டம். உங்களுக்கெல்லாம் ரெண்டு சிட்டிங் உட்கார்ந்தா மொத்தமா கத்துப்பீங்க."

"ஆனா, உங்க மாதிரி முகம் போட கத்துக்கணுமே. நீங்க வரையறாமாதிரி முகம் எனக்குத் தெரிஞ்சு எந்த தஞ்சாவூர் பெயிண்டிங்லேயும் பார்த்ததில்லை."

இப்பொழுது கனகசபாபதி வெட்கப்பட்டான்.

"என்னவோ தெரியலை சாரதா."

கனகசபாபதியின் அம்மா பார்வதி, சிவகாமியின் அம்மாவை அருகே போய் உற்றுப்பார்த்து பேசத் துவங்கினாள்.

"நானும் ஒண்ணும் நறுவிசா காரியம் பண்றவ இல்லை. எங்க வீட்டுக்காரரும் ஒண்ணும் பிரமாதமா இந்த மாதிரி வரையற விஷயங்கள்ளயோ, பேசற விஷயங்கள்ளயோ, பாடற விஷயங்கள்ளயோ கெட்டிக்காரர் இல்லை. நல்லா சமைச்சு, நல்லா சாப்பிடணும். நல்லா சம்பாதிக்கணும். வசதியா வாழணும் அப்படின்ற எண்ணம்தான் எங்களுக்கு. எல்லா வசதி யும் எங்க மாமனார், கனகசபாபதியோட தாத்தா ஏற்பாடு செய்துட்டு போயிருந்தாரு. அவரு உட்கார்ந்து தேவாரம், திருவாசகம் பேசுவாரு. நல்லா பாடுவாரு. கோயிலுக்கெல்லாம் நிறைய செய்வாரு. அன்னதானம் செய்யறதுன்னா அவ்வளவு இஷ்டம். அவரு செய்த புண்ணியம்தான் இந்த பிள்ளைக்கு இப்படி டிராயிங் வரதும், ஒரு ரெயில்வே வேலை கிடைச்சதும். இத்தனைக்கும் அவர் ஒண்ணும் பெருசா தொழில் பண்ணது

கிடையாது. ஆனா, சொந்தமா வீடு வாங்கி, பலருக்கு கல்யாணம் பண்ணி, நல்லா செலவழிச்சாரு. நான் இதுவரை கல்யாணம் கட்டியபோது அவங்களைப்பத்திதான் அதிகமா பேசினாங்க. ரொம்ப நல்ல குடும்பம். பேட்டைக்கே காவல் தெய்வம் அப்படி இப்படின்னு சொன்னாங்க. யாருமே பேர் சொல்லலை. பெரியவரு... பெரியவருன்னுதான் சொன்னாங்க. அதுவும் சந்தோஷமா இருந்தது. என் கல்யாணமே ஆச்சரியம் தான் சாரதா."

பார்வதியம்மாள் வியப்போடு பேசினாள்.

"அஞ்சு மாசம் முன்னாடி நீ யாருன்னு எனக்கு தெரியுமா. நான் யாருன்னு உனக்குத் தெரியுமா. நீ வந்து படியேறி நின்னவுடனே எனக்குள்ள இந்த இடம் முடிஞ்சுடும்னு தெரிஞ்சு போச்சு."

"இதுக்கு முன்னால பல இடங்கள் பார்த்தீங்களாம்மா."

"பல இடங்கள் பார்க்கலை. ரெண்டு இடம் பார்த்தோம்."

"போய் பொண்ணு பார்த்துட்டு வந்தீங்களா."

"நாங்கதான் போனோம். அவன் வரலை."

"சிவகாமிய பார்க்க மட்டும் வந்திருந்தாரே."

"அப்படி நேர்ந்துபோச்சு. இவர் தம்பி வண்டியை எடுத்து கிட்டு வரதா இருந்தோம். தம்பி வீட்ல வண்டி அனுப்பறதுக்கு சொல்லியிருந்தோம். சரின்னு சொன்னாங்க. கடைசி நேரத்துல டிரைவர் வரலை உடம்பு சரியில்லை அப்படின்னாங்க. வேணாம் பி.டி.வண்டி வச்சுகிட்டு போங்க. அப்படின்னு இவன் சொன்னான். ஆனா, இவர் தம்பி ஒத்துக்கலை. கொண்டாந்து வண்டியை விட்டுட்டு பி.டி.வண்டியில எல்லாம் போகாத. சொந்த வண்டியில போனாதான் மரியாதை. நீ வண்டி ஓட்டி கிட்டு போ அப்படின்னு கனகசபாபதிய வண்டி ஓட்டிகிட்டு போகச் சொல்லிட்டாங்க. கனகசபாபதி, இவங்கப்பா, நான், என் தங்கச்சி, இவர் தம்பி பொண்டாட்டியும் பொண்ணு பார்க் கறதுக்கு வந்தோம்."

"தம்பி பொண்டாட்டி கல்யாணத்துக்கு வரலையே."

"சிங்கப்பூர் போயிட்டா. பொண்ணுக்கு ரெண்டாவது பிரசவம். வரமுடியலையே. வரமுடியலையேன்னு போன்ல சொல்லிகிட்டுதான் இருந்தா."

"நாங்க கொஞ்சம் பயந்தோம்."

சாரதா மெல்ல சிரித்தபடி சொன்னாள்.

"எதுக்கு." பார்வதி வியந்தாள்.

"எல்லாம் பெரிய இடமா இருக்கு. கார் இருக்கு. பங்களா இருக்கு. நாம ப்ளாட்ல இருக்கோம். நம்மளவிட பெரிய இடத்துல பொண்ணு கொடுத்துட்டு முழிக்கப்போறோமோ அப்படின்னு பயந்தோம்."

"என்னா பெரிய இடம். அவங்கவங்க தட்டுத்தடுமாறி மேல வந்திருக்கோம். ரூம் அலங்காரம் முடிச்சிட்டீன்னா போய் பொண்ணுக்கு தலைவாரி, வேற புதுப்புடவை கட்டி அனுப்பு. நீ வேணா குளிச்சுட்டு வாடா."

பார்வதி அம்மாள் திசை திருப்பினாள்.

"நான் யாரும் சின்னப் பொண்ணுங்கள கூப்பிட்டு வரலைம்மா. எதுக்கு கூச்சலும் குழப்பமுமா."

"அதெல்லாம் வேணாம். சொல்லிக் கொடுத்திருக்க இல்ல."

"ஏதோ எனக்கு தெரிஞ்சவரைக்கும் சொல்லிக் கொடுத் திருக்கேன்."

சாரதா வெட்கப்பட்டுச் சொல்ல, "அவளுக்குத் தெரியலைன்னா நான் சொல்லித்தரேன்."

சிவகாமியை பார்வதி அம்மாள் அணைத்துக் கொண்டாள்.

இரவு எட்டுமணிக்கு எல்லோரும் வட்டமாய் உட்கார்ந்து டிபன் சாப்பிட்டார்கள். சாப்பிட்டு சிவகாமி முகம் கழுவிக் கொண்டு பட்டுப்புடவை உடுத்தி தலை நிறைய மல்லிகைப்பூ வைத்து மாமனார் மாமியாரை நமஸ்கரித்தாள். பிறகு தாய் தந்தையரை வணங்கினாள்.

அம்மா காதோரம் சில விஷயங்களைச் சொல்ல கேட்டுக் கொண்டாள்.

"அம்மா உங்க பிள்ளைய மாடிக்கு அனுப்புங்க."

மிருதுவாய் சாரதா சொல்ல பார்வதியம்மாள் பிள்ளையை கைப்பிடித்துக் கொண்டு மாடிப்படி வரை வந்து, "இதமா நடந்துக்கோடா. நிறைய பேசு. புரிஞ்சுக்கோ. எதையும் கட்டாயப்படுத்தாத."

கனகசபாபதி மாடிப்படி ஏறி அறைக்குள்போய் கதவு திறந்து கட்டிலில் உட்கார்ந்து கொண்டான். மாடியிலுள்ள டி.வி.யைப் போட்டான். பத்து நிமிடத்தில் சிவகாமி மேலே வந்தாள்.

பின்னாலேயே வந்த அம்மாவும், மாமியாரும் மெல்ல அவள் தலையைத் தடவி உள்ளே அனுப்பினார்கள். கதவு சார்த்திக் கொள்ளச் சொன்னார்கள். கதவு சார்த்தியதும் அவர்கள் பேசிக் கொண்டே படியிறங்கிப் போனார்கள். மாடிப்படி கதவையும் சார்த்துவது தெரிந்தது.

"வறாண்டால நாற்காலி போட்டுகிட்டு உட்கார்ந்துக் கலாமா."

அவர்கள் இரண்டுபேரும் அறையை விட்டு வராண்டா விற்கு வந்து பார்த்தார்கள்.

"நாற்காலி வேணாம்."

சிணுங்கலாக சிவகாமி கூறினாள்.

"ஏன்."

"கீழ உட்கார்ந்துக்கலாம். அப்போதானே பக்கத்துல பக்கத்துல உட்கார்ந்துக்க முடியும்."

மெல்ல புருஷன் அருகே போய் உரசினாள்.

"ஏன், கீழே உட்கார்ந்துக்கறது. என் பழைய படுக்கை இருக்கு. அதை கொண்டு வந்து போட்ருவோம்."

அவன் வேகமாக பின்பக்கம் போய். பின் பக்க வராண்டாவிலிருந்து பழைய படுக்கையை வாரி எடுத்துக் கொண்டு முன்பக்க வராண்டாவில் போட்டான்.

சிவகாமி படுக்கை விரிப்பை உதறி அதன் மீது போட்டு படுக்கையைத் தூக்கி அடியில் சொருகினாள்.

இரண்டு பேரும் அந்தப் படுக்கையில் உரசியபடி உட் கார்ந்து கொண்டார்கள்.

"நான் எப்படி நடந்துக்கணும். என்ன. இதெல்லாம் சொல்லுங்களேன்." இன்னும் நெருக்கமாகி சிவகாமி கேட்டாள்.

அவள் உடம்பு சூடாக இருந்தது.

"அப்படியெல்லாம் ஒரு கர்வம் எங்கிட்ட இல்லை."

"இதுல என்ன கர்வம்."

"ஆம்படையான் சொல்றபடி பொண்டாட்டி நடக்கணும்கற கர்வம் எனக்கு இல்லை. உனக்கு உங்க வீட்ல சொல்லித் தந்திருப்பாங்க இல்ல. உங்க வீட்ல நீ எப்படி நடந்திப்பியோ அப்படியே எங்க வீட்லயும் நடந்துக்கோ."

"எங்க வீட்ல நான் குஷாலா நடந்துப்பேன்."

"அப்படி இங்க நடந்துப்பியா. ப்ளீஸ். தயவு செய்து இந்த இடத்துலயும் குஷாலா நடந்துக்கோ. இது ஒண்ணும் ஜெயில் இல்லை."

"அடடே... அது தெரியும். ஆனாலும் மாமனார், மாமியார், புருஷன் இருக்கிற இடத்துல கொஞ்சம் அடக்கமா நடந்துக்கறது நல்லதில்லையா."

"அப்படியொன்னும் அவசியமில்லை சிவகாமி. எங்க வீடு ஜாலியான வீடு. ஒருத்தரை ஒருத்தர் கேலி செய்துக்குவோம். நல்லா சிரிச்சு பேசிக்குவோம். கொஞ்சம் ஆழமாவும் பேசுவோம்."

"எங்க வீட்ல ஆழமா பேசறதெல்லாம் இல்லை. ஒரே கூத்துதான். ரொம்ப சந்தோஷம் வந்ததுன்னா நான் டப்பாங் கூத்துகூட ஆடுவேன். கூட எங்கம்மாவும் சேர்ந்துக்கும். எங்கப்பாதான் மிரளுவாரு. அடியே கதவை சாத்திட்டு ஆடுங்கடி அப்படின்னு கத்துவாரு." என்று அவள் சொல்ல அவன் வாய்விட்டுச் சிரித்தான்."

"என்ன இவ்ளோ பெரிசா சிரிக்கறீங்க." என்று அவளும் சிரித்தாள்.

"இல்லை உங்கம்மா டப்பாங்கூத்து ஆடறது பார்க்கணும்."

"ஆங்... அஸ்குபுஸ்கு. எங்க அம்மாவை டாவடிக்கறியா. கொன்னுடுவேன்."

"அப்படியெல்லாம் இல்லை. எனக்கு பரபரன்னு வேலை செய்யறவங்களை பிடிக்கும். கதம்ப பூவால ஸ்கரீன் கட்டறாங்க. எங்களோட பேசிகிட்டே கட்டறாங்க. ஆனா, அந்த ஸ்க்ரீன் ஒரு டிசைனா பண்றாங்க. அது என்ன அழகா வந்து நிக்குது. இத்தனைக்கும் இஞ்ச் டேப் கிடையாது. வேற இன்ஸ்ட்ரூமென்ட் கிடையாது. தடுக்தடுக்குனு வேலை செய்யறாங்க."

"அது மட்டுமில்லை. எங்கம்மா ரொம்ப நல்ல குணம். எங்கம்மா ப்ரைம் மினிஸ்டரா வந்தாங்கன்னு வச்சுக்கோங்க... கோர்ட்டே இருக்காது."

"ஏன்."

"யாருக்கும் தண்டனை தரமாட்டாங்க. சரி, சரி போ. இனிமே அப்படி பண்ணாத அப்படின்னு திருப்பி அனுப்பிடுவாங்க. ஏம்மா நறுக்குனு தலையில ஒரு குட்டு வையேன் அப்படின்னு சொல்வேன். மனுஷாளை தண்டிக்கறதுக்கு மனுஷாளுக்கு அதிகாரம் இல்லைடி. கடவுளுக்குத்தான் அதிகாரம் இருக்கு. நாம ஒரு தப்பு பண்ணோம்னா தண்டனை இல்லாத போகவே போகாது. அது ஒரு நோயா, இல்ல உபத்திரவமா, வேற விதமான தோல்வியா நம்ம முன்னாடி வந்து நிக்கத்தான் செய்யும். இது புரியாத, பண்ணத்தான் பண்ணுவேன்னும், தப்பு பண்ணா தண்டிக்கறதுக்கு கோர்ட்டுன்னும் மனுஷன் முட்டாள்தனமா அலையறான்."

"நல்லாயிருக்கே இந்தப் பேச்சு."

"பார்க்க சாதாரணமா இருக்கும். ஆனா நல்லா பேசும். இப்போ நான் சொன்ன விஷயம் எங்க வீட்ல பெரிய வாக்குவாதமா வந்தது. எங்க உறவுக்காரங்க ரெண்டு பேர் வந்து

இப்படியிருந்தா ஒரு ஊர்ல ரவுடியும், கொலைகாரனும்தான் இருப்பான் அப்படின்னு சத்தம் போட்டாங்க. நீ சொல்றது தப்பு அப்படின்னாங்க. திருடினா கைய வெட்டணும். கற்பழிச்சா உறுப்பை வெட்டணும் அப்படின்னெல்லாம் சொன்னாங்க. அப்போ அந்தக் குத்தத்துக்கு யார் தண்டனை கொடுக்கறது அப்படின்னு எங்கம்மா கேட்டாங்க. எந்த கர்வத்துல நாம கைய வெட்டற உரிமையை எடுத்துக்கறோம் அப்படினாங்க. அவங்களுக்கு பதில் சொல்லத் தெரியலை. மரணத்தைவிட பெரிய தண்டனை ஒருத்தருக்கு வேணுமா. ஐயோ சாகறமே... ஐயோ சாகறமே அப்படின்னு பயந்து சாகறவன் சாகற நேரத்துல மிகப்பெரிய தண்டனையை அனுபவிச்சுடறான். தப்பு பண்ணாதவனுக்கு மரணம் சந்தோஷமா இருக்கும். பூ மாதிரி செத்துடுவான் அப்படின்னு அம்மா சொல்லுவாங்க."

கனகசபாபதி விடப்போடு எதிரே பால்கனி வழியாகத் தெரிந்த வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"இதுவும் நல்லாயிருக்கு. பாவத்தின் சம்பளம் மரணம்கறது இதுதான். கஷ்டப்படற மரணம் பாவத்தின் சம்பளம் இல்ல."

"வேணாம். இப்போ போய் இதை பேச வேணாம். நான் என்னவோ தப்பா இறங்கிட்டேன். அதை மறந்துடுங்க. வேற ஏதாவது பேசுங்க."

சிவகாமி பேச்சு மாற்ற முயற்சித்தாள்.

"உங்கப்பா உங்கம்மாவை கொண்டாடுவாரா."

"ரொம்ப. நுழையறபோதே சாரதான்னுதான் நுழைவாரு. வெளிய என்ன நடந்தது. ஏது நடந்தது அத்தனையும் பள்ளிக்கூடத்துப் பையன் மாதிரி ஒப்பிப்பாரு. எங்கம்மாவுக்கு புருஷன்தான் உலகம். உலகத்து விஷயங்கள் அத்தனையும் எங்கப்பா மூலமாகத்தான் தெரிஞ்சுப்பாங்க. எங்கப்பா பி.பி.சி. நியூஸ் கேட்டுட்டு எங்கம்மாகிட்ட சொல்லுவாங்க. எங்கம்மா எந்த ஊர்ல, என்ன நடக்குது, ஏன் நடக்குது அப்படின்னு கேட்டு தெரிஞ்சுப்பாங்க. சிங்கப்பூர், மலேசியா, சிலோன், இந்தோனேஷியா அப்படின்னு பல ஊர்களுக்கு அப்பாவும் அம்மாவும் போயிட்டு வந்திருக்காங்க. நான் ஒரேயொரு தடவை

பள்ளிக்கூடத்தோட சிலோன் போயிட்டு வந்தேன். நீங்க எந்த ஊரும் போனதில்லையா."

"இல்லை. வடக்கே போகணும்னு ஆசை. வட இந்தியாவே போகலை. அப்புறம்தானே ஃபாரின் போறது."

"நாம ஹனிமூன் போகலாமா."

கண் சிமிட்டியபடி இன்னும் நெருக்கமாய் அவனை உரசியபடி சிவகாமி கேட்டாள்.

உள்ளுக்குள் லேசாய் ஒரு திக்திக்கென்று உணர்வு இருந்தது.

அதிகமாகப் பேசுகிறோமோ. வெகு சீக்கிரம் உரிமை எடுத்துக் கொண்டு புருஷனைக் கொஞ்சுகிறோமோ. சட்டென்று போலியாய் போட்டிருந்த மரியாதை குணங்களையெல்லாம் கழட்டி வைத்துவிட்டு டேய் வாடா... கோலி ஆடலாம் என்பதுபோல பேசுகிறோமோ என்று ஒரு எண்ணம் தோன்றியது. இன்னும் அடக்கமாக இருக்க வேண்டுமோ என்ற பயம் ஒருமுறை வந்துவிட்டு போயிற்று.

கனகசபாபதியின் முகத்தைப் பார்த்தான். அது சாந்தமாக இருந்தது. நீ இருக்கும்படி இரேன் என்ற சம்மதம் காணப்பட்டது.

இவன் நல்லவன். அமைதியானவன். இவன் வீடும் அமைதியானது. ஆனால், நாம் அத்துமீறி விடக்கூடாது என்று தன்னை மெல்ல சுதாரித்துக் கொண்டாள். "நான் சும்மா உங்களுக்கு ஃபாரின் போகணுமேன்னு ஆசை இருக்கு மோன்னு கேட்கறேன். மத்தபடி தடுக்குனு ஒண்ணும் ஏற்பாடெல்லாம் பண்ண வேணாம்."

"ஒரு ஏற்பாடும் பண்ணப் போறதில்லை. துட்டு எங்க இருக்கு. நீயும் நானும் சேர்ந்து சிங்கப்பூர் போயிட்டு வரணும்னா கூட ஒரு லட்சரூபா வேண்டாமா. அது என்னத்துக்கு செலவு. வேற இடங்கள் பார்க்கலாமே."

"எந்த இடங்கள்."

அவள் மறுபடியும் ஆவலாகக் கேட்டாள்.

"ஒண்ணுமில்லை. சோழதேசமே நாம நிறைய பார்த்த தில்லை தஞ்சாவூர் கோயிலுக்கு நாலு தடவை போயிருக்கேன். அஞ்சாம் தடவை, ஆறாம் தடவை, ஏழாம் தடவை போய்கிட்டே இருக்கணும்னு போல தோணுது."

"டிராயிங் பார்க்கவா."

"கரெக்ட்... எப்படி கண்டுபிடிச்ச."

"நீங்கதானே தஞ்சாவூர் கோயில், சரபோஜின்னு என்னென்னவோ சொன்னீங்க. அங்க ஏதாவது இருக்கும். நீங்க அதைப்போய் பார்க்க ஆசைப்படுவீங்கன்னு எனக்குத் தெரியும்."

"உனக்கு பார்க்க ஆசையில்லையா."

"உங்களுக்கு பார்க்க ஆசைன்னா, எனக்கும் பார்க்க ஆசை."

"நீ இந்தப் பெயிண்டிங் கத்துக்கக்கூடாதா."

"எது. தஞ்சாவூர் பெயிண்டிங்கா."

"ஆமாம்."

"எங்க அம்மாவுக்கு கத்துக் கொடுங்க."

"உனக்கு, நீ கத்துக்கக்கூடாதா."

"வேணாம்."

"ஏன்."

"நாம ரெண்டு பேரும் பெயிண்டிங்ல உட்கார்ந் துட்டோம்னா யார் சமைக்கறது. யார் வீட்டைப் பார்த்துக்கறது. நீங்க நல்லா பண்ணுங்க. உங்களுக்கு ஒரு குறையும் வராத நான் பார்த்துக்கறேன். பார்த்துட்டு நல்லாயிருக்கு, நல்லா யில்லைன்னு சொல்லக்கூடாதா."

"தாராளமா சொல்லலாம். அதை வாங்கறவங்க சொல்லு வாங்க. அதுக்குன்னு இருக்கற ஆளுங்க சொல்லுவாங்க."

"நான் அப்படி செய்யாத விக்கறதுக்கு ஒரு ஷோரும் ஏற்பாடு பண்ணனும்னு பார்ப்பேன்."

"அடிசக்கை. இந்த புத்தி எப்போ வந்தது."

"எப்போ நீங்க கல்யாணத்துக்கு சரின்னுட்டீங்களோ... அப்போவே நானும், அம்மா, ரெண்டு பேரும் தஞ்சாவூர் பெயிண்டிங்கன்னா என்னன்னு பார்க்க ஆரம்பிச்சோமே."

"எங்க பார்த்தீங்க."

"எஸ்.ஐ.டி.காலேஜ்கிட்ட ஒரு தஞ்சாவூர் ஆர்ட் கேலரி ஒண்ணு இருக்கு. அவரு எங்க சொந்தக்காரருதான். அவர்கிட்ட போய் கேட்டோமே."

"அவருக்கு என்னைப்பத்தி தெரிஞ்சுருக்கா."

"ரொம்ப நல்லா தெரிஞ்சுருக்கு. முகம் வரைஞ்சா அந்தப் புள்ளதான் வரையணும்னாரு. எங்களுக்கு ஒரே சந்தோஷம். அவரு வரைஞ்ச முகம் இங்க ஏதாவது இருக்கா அப்படின்னு கேட்டேன். இல்லைன்னு சொன்னாரு. ஏங்க இவ்ளோ பாராட்டிட்டு இல்லைன்னு சொல்றீங்களேன்னு கேட்டேன். நானும் நல்லா முகம் வரைவேன்னாரு. அட போடான்னு வந்துட்டோம்."

விதம் விதமாக மாறுகின்ற அவள் முகபாவத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த கனகசபாபதி மனம் விட்டுச் சிரித்தான்.

"அவர் என்னுடைய ஸ்நேகிதர். நல்ல மனுஷன். அவங்க வீட்ல எல்லாரையும் எனக்குத் தெரியும். அவங்க வீட்ல எல்லாரும் சித்திரம் வரையறதுல ஆர்வமா இருப்பாங்க."

"இப்போ என்ன சொல்றீங்க. நானும் வரையணும்கறீங்களா. கத்துக்கறேன்."

"வேணாம். நான் போட்டது போட்டபடி என்இடத்தை ரொம்ப குப்பையா வச்சுப்பேன். அம்மா வாரத்துக்கு ஒரு தடவை திட்டிகிட்டே பெருக்குவாங்க... அப்படின்னு இல்லாத தினந்தோறும் சுத்தம் பண்ணாக்க நல்லாதான் இருக்கும்."

"ஆமா, உங்ககிட்ட நிறைய லேடீஸ் கத்துப்பாங்களா "

"அதானே பார்த்தேன். எங்கடா இத்தனை நேரம் இந்தக் கேள்வி வரலையேன்னு. நிறைய பேர் கத்துப்பாங்க. ஏங்க கேட்கறீங்க."

கிண்டலாய் கனகசபாபதி கேட்க சிவகாமி முகம் சிவந்தாள்.

"கேட்டது தப்பா."

"நல்லா கேளுங்க. எதுவேணா கேட்கலாம். கேளுங்க"

"இதை லேடீஸ் மட்டும்தான் கத்துக்கணுமா."

"ஏன் ஜென்ஸும் கத்துக்கலாமே."

"உங்ககிட்ட ஜென்ஸும் கத்துக்கறாங்களா."

"கேள்வி தப்பாவே வருதே. ஒண்ணு புரியலை. ஜென்ஸும் கத்துக்கறாங்க. ஓவியக் கல்லூரியில படிக்கிற பையன். இருவத்தஞ்சு வயது. அவன் கத்துக்கறான். எதுக்குடா கத்துக்க றேன்னு கேட்டேன். அவன் இங்க கத்துகிட்டு பாம்பேக்கு போறானாம். அங்க போய் ரவிவர்மா படம் பார்த்து அப்படியே ஆறரை அடிக்கு நாலரை அடியில ராமர், சீதை, லட்சுமணர், ஹனுமார் படம் வரைஞ்சு அதுக்கு தங்கரேக்கு ஓட்டி, ஒரு லட்ச ரூபாய்க்கு வித்திருக்கான்."

"யப்பா... ஒரு லட்ச ரூபா கொடுத்து வாங்குவாங்களா."

"ஒரு கம்பெனி வாங்கியிருக்கு. ஒரு குஜராத்தி கம்பெனி. இதுல என்ன தெரியுமா. அந்த ராமர் வந்ததுலேர்ந்து அந்தக் கம்பெனி பல்வேறு பிரச்சினைகளைத் தாண்டி நல்லா போயி கிட்டிருக்காம். தஞ்சாவூர் பெயிண்டிங்குக்கு அப்படியொரு குணம் உண்டாம்."

அவள் நம்பிக்கை இல்லாமல் அவனைப் பார்த்தாள்.

"என்னா அப்படிப் பார்க்கற."

"எங்கப்பா ஒண்ணு அடிக்கடி சொல்லுவாரு."

"என்னது."

மனைவியை நெருக்கிக் கொண்டு அவன் கேட்டான்.

"கடவுள் இருக்காரா, இல்லையான்னு எனக்குத் தெரியாது. ஆனா, நான் இருக்கேன். நான் நல்லது பண்ணா எனக்கு நல்லது நடக்குது. நான் கெடுதல் பண்ணா எனக்கு கெடுதல் நடக்குது. அதனால முடிஞ்சவரைக்கும் நல்லது பண்றதுக்கே ட்ரை பண்றேன் அப்படின்னாரு."

"நல்லது பண்றவங்களுக்கு கெடுதல் நடக்குதே அப்போ."

கனகசபாபதி விழிகள் உயர்த்திக் கேட்டான்.

"நல்லது பண்றவங்களுக்கு தனக்கு கெடுதல் நடக்குதுன்னே தெரியாது. அவங்க தொடர்ந்து அடுத்த நல்லது பண்றதுக்கு போயிடுவாங்களே தவிர, தான் கெடுதல்ல மாட்டிகிட்டிருக்கோம்னே தெரியாது."

"கேட்கறதுக்கு நல்லாயிருக்கு. ஆனா, உண்மை அப்படி இருக்குமா. கெடுதல் தெரியாத எந்த மனுஷாள் இருப்பாங்க."

"கெடுதல் தெரியும்ப்பா. ஆனா அது தாக்காது. வருந்த மாட்டாங்க. உடம்புக்கு வந்துடுச்சா. கேன்சரா பரவாயில்லை. கடவுள் சரி பண்ணிடுவாரு. அமைதியா இருப்பாங்க. சரி ஆயிடும்."

அவள் அழுத்தம் திருத்தமாகப் பேசினாள்.

அவன் வினோதமாக அவளைப் பார்த்தான்.

"ஃபர்ஸ்ட் நைட்ல யார் யாரோ என்னென்னவோ பேசுவாங்க. நாம என்ன பேசிக்கிட்டிருக்கோம். பார்த்தியா."

"எனக்கு இந்த மாதிரிதான் பேசணும். நிறைய பேசணும். நிறைய அரட்டை அடிக்கணும். உங்ககிட்டயிருந்து நூறு விஷயம் தெரிஞ்சுக்கணும். எங்கிட்டயிருந்து நூறு விஷயம் சொல்லணும். இது தப்பா. ஒரு ஓரமா நின்னு வெட்கப்படறா மாதிரி நடிக்கணுமா. எனக்கு அதெல்லாம் தெரியாது."

உடம்பை ஆட்டிக் கொண்டு பேசினாள். உடை லேசாய் நெகிழ்ந்தது.

அவன் குனிந்து அவள் கீழ் கழுத்தில் முத்தமிட்டான். இழுத்து அணைத்துக் கொண்டாள்.

கீழே கதவு அசைக்கும் ஓசை கேட்டது.

அவள் சட்டென்று நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். இரு வரும் கூர்மையானார்கள். மறுபடியும் யாரோ கதவு தொடுவது தெரிந்தது. இந்த முறை வேண்டுமென்றே கதவு அசைப்பது சத்தமாக இருந்தது.

அவள் விலகிக்கொண்டாள்.

சட்டென்று உடைகளை சரிசெய்து கொண்டாள்.

"டேய்... தூங்கிட்டியா."

கீழிருந்து கனகசபாபதியின் அம்மாவின் குரல் கேட்டது.

அவள் துணுக்குற்று எழுந்து நின்றாள்.

"அம்மா இதோ வந்துட்டேன்."

பரபரத்தான்.

"இல்லை, நிதானமா வா. ஒண்ணும் அவசரமில்லை."

"என்னம்மா வேணும்."

இப்பொழுது கனகசபாபதி பதட்டமானான்.

"ஒண்ணுமில்லைப்பா. ரெண்டு மூணு சாமான் நான் வைக்க மறந்துட்டேன். உங்கப்பா கோச்சுக்கறாரு."

"என்னதும்மா."

அவன் கீழிறங்கினான்.

அவனைத் தொடர்ந்து அவளும் போனாள். போய் கம்பிக்கதவு திறந்தான். அம்மா காத்திருந்தாள். அம்மாவைத் தாண்டி சற்று ஒளிவாக சிவகாமியின் அம்மா நின்றிருந்தாள்.

"உங்களுக்கு கொடுக்கணும்னே பாதாம் அல்வாவும் திரட்டுப்பாலும் செய்யச் சொல்லியிருந்தோம். ரெண்டுத்தையும் கொடுக்கவே இல்லை. யாரோ கொடுத்த ஜாங்கிரியையும், மைசூர்பாக்கையும் வச்சுட்டு வந்துட்டேன். இப்படி செய்திருக்காங்கன்னே எனக்குத் தெரியாது. இப்போதான் சாரதாம்மா சொல்றாங்க."

"அடடே... நாளைக்கு சாப்பிட்டா போகுது."

"நானும் அதைத்தான் சொன்னேன். உங்கப்பா அவங்க செய்து வச்சுருக்காங்க அதை கேட்டு செய்ய மாட்டீங்களா அப்படின்னு என்னை கத்தினாரு. இப்போதானே படியிறங்கினோம். கூப்பிட்டிடுவோம்னு கூப்பிட்டேன். கோச்சுக்காத கண்ணு."

மருமகளைப் பார்த்து மெல்ல முறுவலித்தாள்.

"அட... என்னங்க அது. சும்மா உட்கார்ந்து பேசிகிட்டிருந்தோம்."

"அந்த கொசுவத்தியை அனுப்பு."

அறையிலிருந்து அப்பாவின் குரல் கேட்டது.

"ஆமா, அதுவும் மறந்துட்டேன். மேல கொஞ்சம் கொசு கடிக்குமே அப்படின்னும் சொன்னேன். அவங்க நான் வாங்கிட்டு வந்திருக்கேன். உங்ககிட்ட கொடுக்க மறந்துட்டேனாங்க. அவங்க வந்து அலங்காரம் பண்றத பார்த்துகிட்டிருந்தோமா... எல்லாத்தையும் விட்டுட்டேன் போயேன்."

"உங்கம்மாவ வீண் அரட்டை அடிக்கச் சொல்லு... நல்லா அடிப்பா."

அறைக்குள்ளிலிருந்து அப்பாவின் குரல் கேட்டது.

"அட... சும்மா கத்தாதப்பா. நான் வாங்கிக்கறேன்."

"மாமி, இன்னொரு தடவை நமஸ்காரம் பண்ணிக்கறேன்."

இறங்கி வந்து அவள் மாமியாரின் கால்களில் பணிந்தாள். அம்மாவைப் பார்த்து கண் சிமிட்டினாள்.

"என்னடி கிழவி உனக்கும் ஃபர்ஸ்ட் நைட்தானே." என்று காதோரம் சொல்லிவிட்டு வந்தாள்.

அவள் மெல்லிய குரலில் சொல்லியது கனகசபாபதியின் அம்மாவிற்கு கேட்டது. அவள் இடிமுழக்கமாய் சிரித்தாள்.

மாப்பிள்ளையும், மருமகளும் மாடி ஏறிப்போவதை கண்குளிரப் பார்த்தார்கள்.

"புருஷன் நல்லவனா கிடைச்சுட்டா பொம்பளை மூஞ்சியில சந்தோஷம் ஒட்டிக்கும். என்ன கஷ்டம் வந்தாலும் அந்த சந்தோஷத்தை பிய்ச்சு எடுக்க முடியாது."

சாரதா வாய்விட்டுச் சொல்ல 'ஆமாம்' என்று பார்வதியம்மாள் தலையசைத்தாள்.

"என் புள்ள ரொம்ப நல்லவன் சாரதா. என்னைய விடவும், என் புருஷனை விடவும் ரொம்ப நல்லவன்.சிலசமயம் அவனை நினைக்கும்போது எங்களுக்கே ஆச்சரியமா இருக்கும். எங்க உறவுக்காரங்கள்ள நிறைய ஆம்பளைங்க முரட்டுத்தனமான ஆம்பளைங்கதான். தண்ணி போடறவன், சூதாடறவன், பொம்பளை பொறுக்கி இப்படித்தான் இருக்கான். ஆனா, இது ஒண்ணுதான் உட்கார்ந்து ஓவியம் வரைஞ்சுது. எங்க வீட்டு பூஜையில இருக்கற சிவபெருமான் படம் காண்பிக்கலையே. ரிஷிபாரூடரா வரைஞ்சுருக்கான். லைட்டை அணைச்சுட்டு, ஒரேயொரு குத்து விளக்கை மட்டும் ஏத்தி, அதைப் பார்க்கணும். அந்த முகம் என்னமோ பேசும். வெள்ளை வெளேர்னு தனியா வெளிய தெரியும். இருட்டுல மின்னும். இவங்கப்பா ரொம்ப நேரம் அதைப் பார்த்துட்டு இவன் சாதாரண புள்ள இல்லைடி அப்படின்னு சொல்லிட்டார்."

"இனிமே எது இருந்தாலும். இல்லாட்டாலும் தொந்தரவ பண்ண வேண்டாம். நீங்க போய் படுத்துக்கோங்க. நாங்க ஹால்லயே படுத்துக்கறோம்."

"நல்லாயிருக்கு கதை. விருந்தாளிங்கள ஹால்லயே படுக்க வைக்கறதா. அதுவும் ஆம்படையான், பொண்டாட்டியா வந்திருக்கீங்க. எப்படி ஹால்ல படுங்கன்னு சொல்றது வருவீங்கன்னே தெரியும். அதனாலதான் தனியா ரூம் போட்டிருக்கேன். இது எங்க ரூம். அதுல நீங்க படுத்துக்கோங்க நாங்க அங்க படுத்துக்கறோம்."

"என்னாத்துக்கு. இந்த ரூம் பெருசா இருக்கு. நீங்க படுங்க உங்க ரூம்ல. நாங்க அந்த ரூம்ல படுத்துக்கறோம். அத வேணாம்மா."

"சொல்றத கேளு சாரதா. பொண்ணு ஹனிமூனான்னு உன்னை கண் சிமிட்டிட்டு போயிருக்கு. இல்லைன்னு சொன்னா என்னை இல்ல கோச்சுக்கும்." என்று சொல்லிவிட்டு மறுபடியும் பார்வதியம்மாள் உரக்கச் சிரித்தாள்.

மெல்ல நகர்ந்து சாரதாவைக் கட்டிக் கொண்டாள் அவளைப்பிடித்து அந்த அறைக்குள் தள்ளினாள்.

"ஐய்யா வாங்க..." என்று சற்று அதிகாரமாய் சிவகாமியின் அப்பாவைக் கூப்பிட்டாள்.

அவர் எழுந்து வந்ததும் அந்த அறையின் கதவு திறந்து அவரை உள்ளே போகச் சொன்னாள். அவர் உள்ளே போனதும் மெல்ல கதவைச் சார்த்தினாள்.

"உள்ள தாழ்ப்பாள் போட்டுக்கோங்க." என்று மறுபடியும் கட்டளையிட்டாள். எழுந்து புருஷனுக்கருகே போய் உட் கார்ந்து கொண்டாள்.

"நல்ல குடும்பமா இருக்கு இல்ல." என்று புருஷனைப் பார்த்துக் கேட்டாள்.

"ரொம்ப நல்ல குடும்பம். நீ கொஞ்சம் இன்னும் மரியாதையா பேசறது நல்லது. ஒரே அதட்டலா இருக்கற."

"அப்படியா. என் குரல் அப்படி."

"அது தெரியுமா. என்னமோ மிரட்டறா மாதிரிதான் தெரியும். அந்த மாதிரி தப்பா அபிப்ராயத்தை ஏற்படுத்திடாதா. காலையில ஆறு மணிக்கு எழுந்தா போறும்னு சொல்லு."

"சாரதா கார்த்தால ஏழு மணிக்கு எழுந்தா போறும்மா."

அவள் அறையைப் பார்த்துக் கத்திவிட்டு மெல்ல நடந்து இன்னொரு அறைக்குப் போக, அவள் புருஷன் பின்னே வந்து கதவு சார்த்திக் கொண்டார்.

காமம் என்பது உடம்புத் திமிரின் வடிகால் அல்ல. அது பரஸ்பரம். மதிக்கறோம் என்பதை வெளிப்படுத்துவதான செயல். காமம் என்பது விரைந்து செயலாற்றுவதோ அல்லது வெறியோடு இயங்குவதோ அல்ல. அதுவொரு கதனகுதூ கலம். இரண்டு பேர் வாய்விட்டு, மனம் விட்டுப் பாடுகின்ற ராகம். அற்புதமான மனோ நிலைக்கு கொண்டு போகும் சங்கீதம்.

சரியாய் ஆறுமணிக்கு சாரதா கதவு திறந்து வெளியே வந்தாள். பின்னே அவள் புருஷனும் வந்து ஹாலில் அமர்ந்து கொண்டார். அவள் எழுந்து ஐந்து நிமிடத்திற்குப் பிறகு பார்வதியம்மாள் எழுந்து வந்தாள்.

"அட... ரொம்ப முன்னாடியே எழுந்து வந்துட்டீங்களா."

"இல்லீங்க இப்போதான் வந்தோம்."

"உங்களுக்கு முன்னாடி எழுந்துக்கணும்னு நினைச்சேன். தூங்கிட்டேன். என்ன வேணும். பாத்ரூம் பக்கம் போகலீங்களா."

"பல் தேய்க்கறதுக்கு ஏதாவது வேணும்."

"பொடி இருக்கு. பேஸ்ட் இருக்கு. புது பிரஷ் இருக்கு."

"வேணாங்க. ப்ரஷ்ஷெல்லாம் வேணாம்."

எல்லோரும் காலைக் கடன்களை முடித்துவிட்டு மணமக்களை வரவேற்கத் தயாரானார்கள்.

ஆறரை மணிக்கு மேல் கதவு திறக்கும் ஓசை கேட்டது. சாரதா ஆவலோடு போய் எட்டிப்பார்த்தாள்.

மகள் காலி சொம்போடும், டம்ளரோடும் கீழே துவண்டு இறங்குவதைப் பார்த்து சந்தோஷமானாள். கீழே இறங்கியதும் மெல்லப் போய் மகளை அணைத்துக் கொண்டாள். நெற்றியில் முத்தமிட்டாள். பெண்ணும் அம்மாவைக் கட்டிக் கொண்டது.

கூடத்திற்குப் போய் மாமனாரையும், மாமியாரையும் நிற்க வைத்து வணங்கினாள். மாமியார் அவளை நிறுத்தி தன் உள்ளங்கையில் முகத்தைத் தேக்கி கண்களில் கண்களைச் செலுத்தி கூர்மையாகப் பார்த்தாள்.

"நல்லா தூங்கினியா" என்று பார்வதி அம்மாள் கேட்க, அவள் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திகைத்தாள்.

"இப்படி கேள்வி கேட்டா இப்படித்தான் முழிக்கணும்" என்று சொல்லி பார்வதியம்மாள் உரக்கச் சிரித்து அணைத்துக் கொண்டாள்.

"அப்பாவையும், அம்மாவையும் நமஸ்காரம் பண்ணிக்கோ." என்று கட்டளையிட்டாள்.

அப்பாவும், அம்மாவும் நிற்க அவர்களையும் விழுந்து வணங்கினாள்.

"புள்ள தூங்கறானா."

"இல்லை எழுந்துட்டாரு."

"என்னா பண்றான்."

"பல்லு தேய்ச்சுட்டு வரேன்னு சொன்னாரு."

"நீ பல் தேய்ச்சுட்டியா."

"தேய்ச்சிட்டேன். நான் காபி போடட்டுமா."

"வேணாம். நீ போய் குளிச்சிட்டு வந்துடு. நான் போடறேன்."

வட்டமாக எல்லோரும் உட்கார்ந்து கொள்ள, கனகசபாபதி மாடியிலிருந்து கீழே வந்தான். அப்பாவுக்கு அருகே போய் அமர்ந்து கொண்டான். அவர் கைகளை கோர்த்துக் கொண்டான்.

"ஏதாவது ஊருக்கு போறியாடா."

"போயே ஆகணுமா."

"போயிட்டு வாடா. அந்தக் குழந்தைக்கு சந்தோஷமா இருக்குமில்லை."

"எங்க போறது."

"ஏதாவது ஊட்டி, கொடைக்கானல்னு போயிட்டு வா."

"எல்லாரும் அங்கதானே போறாங்க."

"இல்லைன்னா பெங்களூர் போயிட்டு வா. சில்லுனு இருக்கும்."

"நீங்களும் வாங்களேன்."

"எங்கைக்கு."

"பெங்களூரோ, ஊட்டிக்கோ, கொடைக்கானலோ."

"போடா மடையா. ஹனிமூன்னா தனியா போகணும்"

"எனக்கு தனியா போறதுக்கு பயமா இருக்குப்பா."

"ஏண்டா... அந்தப்பொண்ணு நல்ல மாதிரிதானே இருக்கு."

"ஐயோ. நல்லா பேசுது. ஏகப்பட்ட அரட்டை."

"இந்த வீடு பிடிச்சுருக்காம்மா."

"ரொம்ப."

"எங்கிட்ட கேட்டா மாதிரி உங்கம்மாகிட்ட கேட்காத. நானும் வரேன்னு ஒட்டிப்பா. தேன்நிலவுக்கு அம்மாவை கூட்டிட்டு போன முதல் அசிங்கம் பிடிச்ச ஆள் நீயாதான் இருப்ப."

"ஏம்ப்பா... கூட்டிட்டு போனா என்ன தப்பு. ஏன், அம்மா மட்டும் வரணும். நீயும் வா."

"ஏய்... அந்த பொண்ணு கொஞ்சம் ஃப்ரீயா இருக்கணும் தாண்டா ஹனிமூன் போறது."

"அது நல்லா ஃப்ரீயா இருக்குப்பா."

"எங்களோட போறது அப்படின்னா இன்னொன்னு பண்ணலாம். இங்க அங்கப்போய் சாமி கும்பிட்டு வரலாம்."

"கும்பகோணம் போறதா இருந்தா நிறைய கோயில் போகலாமே."

"அது ஹனிமூனா இருக்காதேன்னு பார்க்கறேன்."

"ஹனிமூன்னா என்ன. என்னோட ரூம்ல கம்பளி போர்த்திட்டு உட்கார்ந்திருக்கறதா."

"இல்லை, ஜாலியா ஆபீஸெல்லாம் மறந்துட்டு ஊர் சுத்தறது."

"நீங்களும் வாங்கப்பா நல்லாயிருக்கும்."

கனகசபாபதி பிரியமாகக் கூப்பிட்டான்.

"என்ன, அப்பனும், பிள்ளையும் குசுகுசுன்னு பேசறீங்க."

பார்வதியம்மாள் கேட்க, அவளைத் தாண்டிக் கொண்டு ட்ரேயில் காபி கோப்பைகளுடன் சிவகாமி வந்தாள். மாமனாருக்கு முதல் கப் கொடுத்துவிட்டு, புருஷனுக்கு அடுத்த கப்பை கொடுத்துவிட்டு அப்பாவுக்கும், அம்மாவுக்கும் காபி நீட்டினாள். அம்மாவுக்கு அருகே உட்கார்ந்து கொண்டு அவள் காபி குடிக்கத் துவங்கினாள்.

அவள் காபி குடிக்கும்வரை காத்திருந்த கனகசபாபதி குடித்து முடித்ததும் அவளை அருகே அழைத்தான்.

"ஹனிமூன் போகலாமா."

"போகலாம்."

"எங்க போகலாம்."

"நீங்க எங்க சொல்றீங்களோ அங்க."

அவள் இனிமையான முகத்தோடு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நாம மட்டும் போகலாமா. எங்க அப்பா, அம்மாவையும் கூட்டிட்டு போகலாமா."

"ஐய்... உங்கப்பா, அம்மாவோட போகலாம். ஏன், எங்கப்பா, அம்மாவையும் கூட்டிட்டு போகலாம்."

"போச்சுடா சாமி."

கனகசபாபதியின் அப்பா முகவாயில் கை வைத்துக் கொண்டார்.

"ஏன், மாமா."

"நான் வரவேணாம். என்னை கூப்பிடாதடான்னு சொல்றேன். நீ உங்கப்பா, அம்மாவையும் கூப்பிட்டற."

"அவங்க எங்கயும் ஜாஸ்தி வெளிய போனதில்லை மாமா. நீங்களும் வந்தா நல்லாதான் இருக்கும்."

"நாங்க கும்பகோணத்துக்கு போய் தங்கலாம்னு இருக்கோம். சுவாமிமலை எங்க குலதெய்வம். அங்கேபோய் ஸ்வாமி கும்பிட்டுட்டு, அங்க இருக்கற ஊருங்களெல்லாம் பார்த்துட்டு திரும்பிடறது."

"அட... அப்போ எங்கம்மா துள்ளி குதிச்சுகிட்டு ஓடி வந்துடுவாங்க. ஏன்னா, அங்க போகணும் போகணும்னு பல நாளா சொல்லிகிட்டிருக்காங்க."

"அவங்க போனதில்லையா."

"க்ரூப்பா போய் க்ரூப்பா வருவாங்க. நிதானமா போய், நிதானமா வரணும்னு சொல்லுவாங்க. அவங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவேயில்லை."

"உங்க அம்மாவை ஒரு வார்த்தை கேட்டுக்கடா. அவ தடுக்குனு ஏதாவது இடது பக்கம் திரும்பி பேசிடப்போறா."

அவன் சமையல் அறைக்குப் போய் அம்மாவோடு பேசினாள்.

"அவங்க தப்பா நினைச்சுக்கப் போறாங்கடா. நாங்க என்னமோ உங்களை சந்தோஷமா இருக்க விடாதபடின்னு அலுப்பா ஏதாவது சொல்லப்போறாங்க."

"நான் சொல்லிடறேம்மா. அவங்ககிட்ட."

"நீ சொல்லாத. உன் பொண்டாட்டி சொல்லட்டும். முதல்ல அவங்களுக்கு சம்மதமான்னு பாரு."

"அவதான் சொன்னா அப்பா அம்மாவை கூப்பிட்டுக் கலாம்னு."

"அப்போ ரைட்."

அவர்கள் ஹாலுக்கு வந்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தபோது கனகசபாபதியின் அப்பா மெல்ல தொண்டையைச் செருமிக் கொண்டு "ஒரு க்ஷேத்திராடனம் மாதிரி போயிட்டு வரலாமா. அதையே ஹனிமூன் மாதிரி வச்சுக்கலாமா அப்படின்னு பேசறோம். நீங்களும் வந்தீங் கன்னா நல்லாயிருக்கும்."

"ஹனிமூனுக்கு நாம என்னாத்துக்கு."

"அது ஹனிமூனே இல்லை. க்ஷேத்திராடனம். அதான் கேட்டேன். மலைபக்கமா ஊட்டி, கொடைக்கானல்னு போறியாடான்னேன். வேணாம்கறான். உங்கப் பொண்ணும் வேணாம்னுது. நான் இந்த மாதிரி சுவாமிமலைக்கு போகலாம். குலதெய்வக் கோயில் அப்படின்னு சொன்னேன். அப்பா, அம்மாவையும் கூட்டிட்டு போகலாம். எங்கம்மா பார்த்ததே இல்லைன்னு சொல்லுது."

"சாரதா நம்ம ஆறு பேரும் போகலாம். வெளியே சொல்லாத கண்ணுபடும்."

பார்வதியம்மாள் அடிக்குரலில் எச்சரித்தாள்.

இரண்டு வீடுகளுக்கு விருந்து போய்விட்டு, திருமணம் நடந்த ஐந்தாம் நாள் வேனில் ஏறி ஊருக்குக் கிளம்பினார்கள். வீட்டிற்கு வந்து கூட்டிக்கொண்டு போனால் கண்படும் என்று சாரதாவையும், அவள் புருஷனையும் கிண்டிக்கு ஆட்டோவில் வரச்சொல்லி அந்த இடத்தில் அவர்கள் காத்திருக்க, அவர் களையும் அழைத்துக் கொண்டு வண்டி பறந்தது. சந்தோஷம் தாங்காமல் சிவகாமி துள்ளி குதித்தாள். அம்மாவின் அருகில் உட்கார்ந்து கொண்டு இழைந்தாள். மாமியாரோடு கை கோர்த்துக் கொண்டாள். புருஷனுக்கு வறுத்த முந்திரிப்பருப்பு கொடுத்தாள்.

ஆள் அரவம் இல்லாத பிற்பகல் நேரம் கிளம்பி இரவு ஏழரை மணிக்கு அந்த ஜோடிகள் குடந்தை போய் இறங்கின. குளித்துவிட்டு விலாவரியாகச் சாப்பிட்டார்கள். ஆளுக்கொரு அறை எடுத்துக் கொண்டு அயர்ந்து தூங்கினார்கள். விடியலில் எழுந்து திருவலஞ்சுழிக்குப் போய் விநாயகரை தரிசித்துவிட்டு, சுவாமிமலைக்கு ஏறினார்கள். ராகத்தோடு அர்ச்சகர் அர்ச்சனை செய்ய மூன்று ஆண்களுமே காசு போட்டார்கள்.

"ஒருத்தர் போட்டா போதுமே."

ஐயர் ஆனந்தமான சிரிப்போடு சொன்னார்.

"நீங்க அர்ச்சனை செய்த சந்தோஷம். உங்களுக்கு ஏதாவது கொடுக்கணும்னு தோணிச்சு. அப்படித்தான் அவங்களும் காசு கொடுத்திருப்பாங்க."

கனகசபாபதியின் அப்பா சொல்ல அர்ச்சகர் நமஸ்கரித்தார்.

"இவ்ளோதான். இவ்ளோதான் உலகம். நான் நன்னா இருந்தா நீங்க நன்னாயிருப்பேள். நான் உண்மையா இருந்தா, நீங்க உண்மையா இருப்பேள். கோபமா, தந்திரமா இருந்தா எனக்கு எதிர்படறவாளும் கோவமா, தந்திரமா இருப்பா. இவ்ளோதான் உலகம்."

"உங்களுக்கு காசு போடலைன்னா."

கனகசபாபதி அடிக்குரலில் அவருக்கு மட்டும் கேட்கும் வண்ணம் கேட்டான்.

"அது எனக்கு தெரியவே தெரியாது. நீங்க காசு போட்ட பிறகுதான் எனக்குள்ள இருக்கற மந்திரசப்தம் கலைஞ்சுது. நான் பாட்டுக்கு இன்னொரு தடவை அஷ்டோத்திரம் சொல்ல போயிருப்பேன்."

"நாம நைட் பேசினதும் இவர் இப்போ சொல்றதும் ஒண்ணா இல்லை."

சிவகாமி அவன் காதோரம் கிசுகிசுத்தாள். கனகசபாபதி ஆமென்று தலையாட்டினான்.

அவர்கள் மண்டபத்தில் வந்து உட்கார்ந்து கொண்டார்கள். காற்று சுழன்று சுழன்று வேகமாய் வீசியது. ஒரு வைக்கோல் மணம் கொண்டு வந்து நிரப்பியது.

"அறுவடை நாட்கள்ள இப்படியொரு மணம் கும்பகோணம் முழுக்க தனியா தூக்கும்."

"உங்களுக்கு கும்பகோணமா மாமா."

இடதுபக்கம் அமர்ந்திருப்பவரை நோக்கி சிவகாமி கேட்டாள்.

"பதினாறு வயது. எஸ்.எஸ்.எல்.சி. முடிச்ச பிறகு மெட்ராஸுக்கு வந்துட்டேன். இஞ்சேதான் படிச்சேன்."

"இஞ்சேன்னா..."

"இங்க கும்பகோணம் பக்கத்துல. இங்கேயே வந்து இஞ்சயேன்னுதான் சொல்லுவாங்க. அவங்களுக்குன்னு தனி குரல். தனி பாஷை உண்டு."

"மாமியை லவ் பண்ணி கல்யாணம் பண்ணீங்களா."

சிவகாமி ஒரு துள்ளலுடன் கேட்டாள்.

உலகமே சந்தோஷமாய் தன்னைச் சுற்றிக் கொண்டிருப்பது போல் ஒரு துள்ளலோடு பேசினாள்.

"ரொம்ப கெட்டபழக்கம் இது."

சாரதா வேகமாக மகளை அதட்டினாள்.

சில வினாடிகள் அவருக்கு முகம் இருண்டு மீண்டும் மலர்ந்தது. பார்வதியம்மாள் வேறு ஏதோ பக்கம் முகம் திருப்பிக் கொண்டாள்.

ஏதோ ஒரு சங்கடமான நிலைமை நிலவியது.

அவர்கள் இரண்டு பேரையும் மாறிமாறிப் பார்த்த கனகசபாபதி மெல்ல உதட்டில் விரலை வைத்து மனைவியை 'சும்மாயிரு' என்று அதட்டினான்.

சாரதா துணுக்குற்றாள்.

ஏதோ தவறான கேள்வி கேட்கப்பட்டுவிட்டது என்பதை மிகத் தெளிவாக உணர்ந்தாள். பார்வதியின் முழங்கால் மீது கைவைத்து "அவ குழந்தை ரொம்ப ரெண்டாங்கெட்டான். மன்னிச்சிடுங்க." என்றாள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. வழக்கமா எல்லாரும் கேட்கறதுதான. லவ் மேரேஜா, அப்பா, அம்மா பார்த்து வச்சதான்னு. இது ஒண்ணும் தப்பான கேள்வி இல்லையே."

சிவகாமியை பார்த்துச் சிரித்தாள்.

அவள் சிரிப்பு சற்று வெளிறியபடி இருந்தது. சிவகாமி அந்த முகமாற்றத்தை கவனித்துவிட்டு, "நான் நீங்க ஜாலியா இருக்கீங்க அப்படின்னு நினைச்சு கூடுதலா பேசிட்டேன். மன்னிச்சுக்கோங்க."

"நாங்க ஜாலியாத்தான் இருக்கோம். உங்கபேச்சு தப்புன்னு யார் சொன்னது."

"முகம் மாறிப் போச்சு உங்களுக்கு."

"அதுக்குக் காரணம் என் வாழ்க்கை. நான் பட்ட காயம்."

"சொல்லிடும்மா. என்னான்னு சொல்லிடு. அவங்க மிரண்டு போய் நிற்க வேணாம் பாரு."

கனகசபாபதி சொன்னான்.

"என் கல்யாணம் ஒரு விசித்திரமான கல்யாணம்."

பார்வதியம்மாள் தொண்டைச் செருமி, தலைகவிழ்ந்து உட்கார்ந்திருந்தாள். பிறகு நிமிர்ந்தாள்.

கனகசபாபதியின் அப்பா எந்த உணர்வும் காட்டாமல் மௌனமாக இருந்தார்.

"எனக்கு கல்யாணம் ஒருத்தரோட முடிவாகி முதல்நாள் மாப்பிள்ளை ஊர்வலம் நடந்து அன்னிக்கு நைட் பன்னெண்டரை மணிக்கு அவரு காணாத போயிட்டாரு. எங்கிருந்தோ போன் பண்ணாரு. எனக்கு இந்த பொண்ணு பிடிக்கலை. எனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டம் இல்லை. என்னைத் தேடாதீங்க. நான் வடக்க போறேன் அப்படின்னு சொல்லிட்டுப் போயிட்டாரு. எங்க இருக்க... எங்க இருக்கன்னு எங்க அப்பா ரொம்ப பதறி ஊர் எல்லைவரைக்கும் போய் தேடிட்டு காணோம்னு வந்தாங்க. அப்புறம் எங்கம்மா கதறி என் தாய்மாமா கால்ல விழுந்து அவரை கொண்டு வந்து மேடை மேல உட்காரவச்சாங்க. அவரும் சரின்னு உட்கார்ந்தாரு.

குளிச்சுட்டு புதுடிரஸ் போட்டுகிட்டு கழுத்துல மாலை போட்டுகிட்டு அக்னி முன்னாடி உட்கார்ந்து மந்திரம் சொல்ல ஆரம்பிச்சாரு. பிள்ளையார் பூஜை முடிஞ்சிடுச்சி. இப்போ அவருடைய இன்னொரு அத்தை வந்தாங்க.

என் பொண்ணுக்குத்தானே நானே பேசி வச்சிருக்கேன். நீ இங்க உட்கார்ந்து எவ கழுத்துலயோ தாலி கட்டறியே எழுந்திரு எழுந்திருன்னாங்க. எனக்கு இவங்களும் சொந்தம் தான்னாங்க உட்கார்ந்தவங்க. உனக்கு ஆயிரம் சொந்தம் இருக்கும். நான் பேசி வச்சிருக்கும்போது, உங்க வீட்ல சரின்னு சொல்லிவிட்டு, இப்போ வேற யாரையோ கல்யாணம் பண்ணிக்கறியே அது நியாயமான்னு கத்தினாங்க.

"உன்கிட்ட உன் பொண்கட்றதா நான் வாய் வார்த்தை யாதானே சொன்னேன். வெத்தலை பாக்கையா மாத்திட்டேன். இதுவொரு தர்மசங்கடமான நேரம் இந்தப் பொண்ணுக்கு உதவி செய்யணும்தான் நான் உட்காரவச்சேன்னு எங்கம்மா உட்கார வச்சாங்க."ன்னு எவ்வளவோ சொன்னாங்க. ஆனா அந்த பொம்பளை கேட்க லை. நான் திரும்பி பேசினேன். என்ன பாவம் பண்ணேனோ என் கல்யாணம் ஒரு மாதிரி தொலைஞ்சிடுச்சு. நா வேற யார் வாழ்க்கையையும் குலைக்க விரும்பலை.

அந்தப் பொண்ணு உங்களுக்காக காத்துகிட்டிருக்குங்கறது உண்மையானா, நீங்க எழுந்திருங்க. எனக்கு கல்யாணம் ஆகாட்டி பரவாயில்லை. அந்தப் பொம்பளைய கல்யாணம் பண்ணிக்கோங்க அப்படினுட்டேன். அவரும் மாலையை கழட்டிட்டு எழுந்திருச்சிட்டாரு.

கல்யாணமே வேணாம். திரும்பி போயிடலாம் அப்படின்னு எல்லாரும் கிளம்பறபோது இவரு முன்னால வந்து நான் கல்யாணம் பண்ணிக்கறேன். கல்யாணம் நிக்கக்கூடாது அப்படின்னு சொன்னாரு. முகூர்த்தம் முடிஞ்சு பதினஞ்சு நிமிஷம் கழிச்சு இவரு மணமேடையில உட்கார்ந்து எந்த மந்திரமும் சொல்லாம, புதுத்துணி மாத்தாத, வெறும் மாலைய மட்டும் கழுத்துல போட்டுகிட்டு தாலி எடுத்து என் கழுத்துல கட்டினாரு. எனக்கு ஒண்ணுமே புரியலை. ரொம்ப துக்கமா, ரொம்ப அவமானமாயிடுச்சு. தாலி கட்டின அஞ்சு நிமிஷத்துல நான் சுருண்டு விழுந்துட்டேன்.

மனசு அதிர்ச்சியில மூளையில நிறைய ரத்தம் பாய்ஞ்சு மயக்கம் வந்திடுச்சி. அவங்க தூங்கட்டும் எல்லாத்தையும் மறந்துட்டு தூங்கட்டும். நாங்க அவங்களுக்கு மயக்க மருந்து கொடுத்திருக்கோம் அப்படின்னு சொல்லிட்டாங்க. மூணுநாள் கழிச்சு எழுந்து நான் அம்மாகிட்ட கேட்டேன். எனக்கு கல்யாணம் ஆச்சா. இல்லைன்னா நின்னு போச்சாம்மான்னு, ஆயிடுச்சின்னாங்க. யாரும்மா புருஷன், எனக்கு பார்த்தா மாதிரி ஞாபகமே இல்லையேன்னு சொன்னேன். இவரை கொண்டு வந்து நிறுத்தினாங்க. இவரு தலைய தடவிவிட்டு ஒண்ணும் கவலைப்படாதே. எல்லாம் சரியாயிடுச்சுன்னாங்க. பதினஞ்சு நாள் ஆச்சு. இவருதான் என் புருஷன்னு ஒத்துக்கறதுக்கு. ஒரே மணமேடையில மூணு பேரோட உட்கார்ந்த பொம்பளை நான் மட்டுமாத்தான் இருக்க முடியும்."

"அதனால என்ன... இப்போ நல்லாதானே இருக்கீங்க."

"ரொம்ப ரொம்ப நல்லாயிருக்கேன் சாரதா. முதல்ல உட்கார்ந்த நாய் அவனும் குடிச்சு, அவன் அழிஞ்சு அவன் பொண்டாட்டியையும் அழிச்சான். ரெண்டாவது உட்கார்ந்

தானே அவன் பசங்களோட பீச்சுக்கு போனபோது குழந்தைய அலை இழுத்துகிட்டு போச்சுன்னு பின்னாலயே போனான். குழந்தைய காப்பாத்திட்டாங்க. இவன் போய் மாட்டிகிட்டான். உடைஞ்ச கப்பல்ல போய் முட்டி மூஞ்சு அறுந்து ரோடுக்கு எடுத்துகிட்டு வரத்துக்குள்ள செத்துப் போயிட்டான்.

ஒரு ஜாதகம் பார்க்காத, நேரம் பார்க்காத, நாதஸ்வரம் கூட இல்ல போயேன்... முதல்ல கல்யாணம் நின்னவுடனே, அவன் உறையில நாதஸ்வரத்தை போட்டுகிட்டு போயிட்டான். டும்... டும்... டும்முனு வாயிலதான் எங்கப்பா கொட்டினாரு. ஊர் மெச்ச, உலகம் மெச்ச இவரோட நான் வாழந்துட்டேன். கூட சுவாமிமலைக்கு வரும்போது எனக்கு ஒரே பயம். சரியான வாழ்க்கை அமையுமா. இப்போ அமையறதும் பிடுங்கிட்டு போயிடுமா அப்படின்னு கலவரம். எப்போவும் ஒரு மிரட்சியிலே இருப்பேன். பதட்டமாவே இருப்பேன். இந்த மனுஷன் எல்லாத்தையும் பொறுமையா சகிச்சு என்னை சரி பண்ணாரு.

குழந்தை வேணாம்னு உள்ள ஒரு தீர்மானம். அதனால புருஷன் கூட படுத்துக்கக் கூடாதுங்கறது ஒரு எண்ணம். இவரு குழந்தைய கொடுத்துட்டு எனக்குத் தெரியாதுன்னு போயிட்டா என்னா பண்றதுன்னு ஒரு பயம். எந்த ஆம்பளையா இருந்தாலும் அடிச்சு இழுத்துகிட்டு போயிடுவான். இவர் சரின்னு சொல்லி தனியா போய் படுத்துகிட்டாரு. என்னிக்கு என்மேல உனக்கு நம்பிக்கை வருதோ, என்னிக்கு உம்மேலயே உனக்கு நம்பிக்கை வருதோ, அன்னிக்கு பார்த்துக்கலாம்னாரு. ரெண்டே கால் வருஷம். வெறும வெளிய வாசல்ல போவோமே தவிர, எல்லாருக்கும் முன்னாடியும் சிரிச்சு பேசிகிட்டிருப்போமே தவிர, எங்களுக்குள்ள எந்த சம்மந்தமும் இல்லை. திருநீலகண்டமாவே இருந்தோம்."

சிவகாமி சட்டென்று முகத்தைப் பொத்திக் கொண்டு அழத் துவங்கினாள்.

"ஏண்டி... என்னிக்கோ முடிஞ்சு போன என் கதைக்கு நீ ஏண்டி அழுவற. அழுவாத நிறுத்து."

பார்வதி அம்மாள் மெல்லிய அதட்டலோடு மருமகளின் தோளைப்பிடித்து நிறுத்தினாள். அவளை இழுத்து அணைத்துக் கொண்டு முதுகு தடவினாள்.

"அந்தக் கல்யாணத்துலேர்ந்தே அவளுக்கு கொஞ்சம் வெட்கம். நல்லது கெட்டதுக்கு போகமாட்டா, யாரண்டயும் பேசி பழகமாட்டா. அவளுக்கு உலகமே நான்னு ஆயிப்போச்சு. நானும் அதை புரிஞ்சுகிட்டு அவ உரக்க கத்தினாலும், வேகமா பேசினாலும் அதை மௌனமா எடுத்துக்கறது. அவளுக்கு வடிகால்னு ஒண்ணு வேணாமா. அவ எங்க யார்கிட்ட போய் கோச்சுப்பா எங்கிட்டதானே, கோச்சுகிட்டும்னு விட்டுருவேன்."

சாரதா சின்னதாய் ஒரு கும்பிடு அவரைப் பார்த்து போட்டாள்.

"இப்படியெல்லாம் யாராவது இருக்க முடியுமா. பொண்டாட்டி லேசா முகத்தை தூக்கினாகூட கொன்னுடுவேன், வெட்டிடுவேன்னு சொல்றவன்தான் உண்டு. உரத்த குரல்ல கத்தினாகூட அவளுக்கு வடிகால் வேண்டாமான்னு சொல்லி யார் இருக்க முடியும்."

"என் கல்யாணத்துக்குன்னுதான் அம்மா வெளிய வந்தாங்க."

கனகசபாபதி பேசினான்.

கனகசபாபதியின் அப்பா குறுக்கிட்டார்.

"மருமக நல்லாயிருக்கணும்னு மட்டும் இல்லைங்க. சம்மந்தி அம்மா நல்லாயிருக்கணும். அந்த வீடு ரொம்ப ஸ்நேகிதமா, நட்பா இருக்கணும் அப்படின்னும் அவளுக்கு ஒரு ஏக்கம் உண்டு. இவங்களும் நட்புக்கு, அன்புக்கு ஏங்கறவங்கள்னு உங்களைப் பார்த்த, அரை மணி நேரத்துல புரிஞ்சு போச்சு."

"ஆமாம் சம்மந்திங்கறவங்க புள்ள பெத்துட்ட ஒரே காரணத்துக்காக தாம்தூம்னு ஆடாதவளா, கண்ணுல விரலை கொடுத்து ஆட்டுவேன்னு கத்தாதவளா, என் புள்ள என் சொல் பேச்சை மீறமாட்டான். நில்லுன்னா நிப்பான். உட்காருன்னா

உட்காருவான்னு அகம்பாவம் பிடிச்சு கத்தாதவளா இருக் கணும்னு நான் வேண்டாத தெய்வமில்லை. கொஞ்சம் அனுசரணையா நடந்துகிட்டா போதுமே, நாம காலுக்கு செருப்பா இருக்கலாமே அப்படின்னு கூட நினைச்சுப்பேன். ஆனா ஏக்கத்தை வெளிய சொன்னாலே இன்னும் ரெண்டு மிதிமிதிக்கலாம்னு சொல்லிடப் போறாங்களோன்னு ஒரு கலவரம் உண்டு."

"ஆமாம். சொல்லக்கூடாது. எளக்காரம் ஆயிடும். அது என்னவோ உலகத்து மேல ஒரு கோபம். அதனால என் குரல் கொஞ்சம் உசந்துடுச்சி. அது உசந்துடுச்சின்னுகூட எனக்குத் தெரியலை. இவர் சொல்லித்தான் எனக்குப் புரிஞ்சுது. நான் சட்டுனு கொஞ்சம் உசந்த குரல்ல பேசுவேனே தவிர, அது கோபமோ அதிகாரமோ இல்லை."

பார்வதியம்மாள் தன்னிலை விளக்கம் கொடுத்தாள்.

"அதுமட்டுமில்லை சாரதா. நான் வாழாவெட்டி இல்லை. புருஷனோட நல்லா வாழறவ. நான் மலடி இல்லை. ஒரு புள்ளைக்கு அம்மா. இதை உலகத்துக்கு சொல்லிட்டேன். ஆனாலும் உள்ள ஒரு நிறைவு வரலை சாரதா. புள்ளைக்கு ஊரறிய, உலகம் அறிய கல்யாணம் பண்ணேன் பார். அதுல ஒரு நிறைவு வந்தது. நிமிர்ந்துட்டேண்டி. நிமிர்ந்துட்டேண்டி உள்ளுக்குள்ள ஒரு பெரிய கூச்சல் இருந்தது.

கனகசபாபதி உனக்கு தாலி கட்டினபோது, உங்கம்மா லேசா கண்கலங்கினா, நான் தாவி வந்து அவளக் கட்டிகிட்டேன். நான் இருக்கறேன்டின்னு மனசார சொன்னேன். மறுபடியும் வேற யாரும் அழக்கூடாதுங்கற மாதிரி ஆயிடுச்சு. வேற யாரும் வருத்தப்படக்கூடாதுங்கற மாதிரி திரும்பிடுச்சு. ஒரு வகையில நான் நல்லவளா இருக்கிறதுக்கு நான் பட்ட கஷ்டங்கள்தான் காரணம். சாரதாக்கு புரியும். உனக்கு புரியுதா சிவகாமி.

ஒரே மணமேடையில, மூணு பேரோட, மூணு வெவ்வேறு ஆளுங்களோட நான் மாலையும் கழுத்துமா உட்கார்ந்து கிட்டிருக்கேன் சிவகாமி. அந்த மூணு பேரோட எடுத்த போட்டோவும் எங்கிட்ட பத்திரமா இருக்கு. அதை எடுத்து

பார்க்கறபோது உடம்பெல்லாம் எரியும். நரம்பெல்லாம் முறுக்கும். என்ன பாவம் பண்ணேன். எனக்கு ஏன் இந்த அவமானம்னு ஒரு கோவம் வரும்." அடி மன ஆழத்திலிருந்து பார்வதியம்மாள் பேச, சிவகாமியின் குடும்பம உறைந்து போய் கிடந்தது.

"அதைக் கிழிச்சுடறேன்னு சொன்னேன். அவ கேட்கலை. வேணாம் கிழிக்காதீங்க. நான் எங்கனா தலைகனம் புடிச்சு ஆடறபோது எனக்கு முன்னாடி இதுதாண்டி உன் லட்சணம்னு இதை காட்டுங்க, நான் பொட்டிப்பாம்பா அடங்கிடுவேன்னு சொன்னா. தனக்குத்தானே ஒரு அங்குசம் தயார் பண்ணி வச்சு தானே தன் கழுத்துல மாட்டிவச்சுருக்கா சரிதான்னு துடைச்சுப் போடத் தெரியலை."

"அதை எப்படி துடைச்சுப்போடறது. நமக்கு கஷ்டம்கறது எதுக்குத்தான் ஏற்படுது. துடைச்சு போடறதுக்கா. இல்லை ஞாபகம் வச்சுக்கறதுக்கு. ஏய் நாயே ஜாஸ்தி ஆடாத. நீ எப்படி கிடந்தன்னு ஞாபகம் வச்சுக்க அப்படின்னு நினைப்பு இருந்தா தான் அடுத்தவங்களை கஷ்டப்படுத்தாத இருக்கலாம். அல்லது அடுத்தவங்க கஷ்டப்பட்டா அவங்களுக்கு உதவி செய்யலாம் அல்லது குறைஞ்சபட்சம் அடுத்தவங்க கஷ்டம் தீரணும்னு பிரார்த்தனை பண்ணலாம்."

அந்தக் கூட்டம் மௌனமாய் பார்வதியைப் பார்த்துக் கொண்டிருந்தது.

பார்வதி கொஞ்சம் உரக்கச் சிரித்தாள்.

"அதனால என்ன சொல்றேன். சாரதாவும், சாரதா வீட்டுக்காரரும் தன் பொண்ணு பத்தின கவலைய சுத்தமா மறந்துடட்டும். மாமியார் இல்லை நான். அவளுக்கு பெத்த தாய் மாதிரி பார்த்துக்கறேன். நீ எங்க அசலூரா. மூணு பஸ் ஸ்டாப் தாண்டிதானே இருக்க. எப்போ வேணா வரலாம். எப்போ வேணா போகலாம். சம்மந்தி அம்மா என்ன சொல்வாங்க ளோன்னு தயக்கமே வேணாம். இன்னும் கேட்டா இந்த மாதிரி வெளிய வாசல்ல நீங்க போறபோது என்னையும் கூட்டிகிட்டு போங்க. இப்படி கும்பலா, ஜாலியா, வெளிய வாசல்ல நான்

அதிகம் போனதில்லை. போனாலும் இப்படி சந்தோஷமா இருந்ததில்லை. எனக்கு என்னமோ சாரதாவோட மனச ஒட்டிக்கிச்சு. என்ன சாரதா அடிமனசுல என்னைப்பத்தி எளக்காரமா தோணுதோ."

பார்வதியம்மாள் நெற்றியைச் சுருக்கிக் கொண்டு சாரதாவை உற்றுப் பார்த்துக் கேள்வி கேட்டாள்.

"அட... ச்சே போங்க. என்னா பேசறீங்க. என்ன எளக்காரம் இது. எவ்ளோ பெரிய வேதனை தாண்டி வந்திருக்கீங்க. எனக்கு பிரமிப்பா இருக்கு. நான் சொல்லட்டுங்களா. அது கெடுதலே இல்லை. அது ரெண்டும் ரொம்ப நல்ல விஷயம். இந்த நல்ல புருஷன் கிடைக்கணும்கறதுக்காக ரெண்டு தடவை குட்டு வாங்கிட்டீங்க. துடைச்சு போட்டுட்டு போங்க. இதுல என்ன அழகுன்னா, இருவதடி தொலைவுலேர்ந்து எல்லாம் பார்த்து கிட்டிருந்தேன். ஒரு பொண்ணு ரெண்டாவதா கல்யாணம் கட்டிக்க வந்த ஒரு ஆம்பளைய யாருக்கோ துரோகம் பண்ணிட்டு இங்க உட்காராத எழுந்துபோன்னு சொல்லிச்சு. அது பார்த்தவுடனே நெகிழ்ந்துட்டேன்னு சொன்னாரு பாருங்க. அவரு ரொம்ப உசந்த இடத்துல இருக்காரு. உங்க அடுத்த வெட்டிங்டே எப்போங்க. அப்போ ஊரை கூப்டு ஜமாய்ச்சுடு வோம்."

சாரதா கைகொட்டிப் பேசினாள்.

"வேணாம்... வேணாம் சாரதா. அடுத்த வெட்டிங்டேவுக்கு இந்த மாதிரி நாம ஆறு பேரும் வேற எங்கனா வெளிய போயிடுவோம். ஏன் கும்பகோணம் எங்கனா வடக்க காசி கங்கோத்ரின்னு போயிடுவோம். எங்கயாவது இமயமலை அடிவாரத்துல உட்கார்ந்திருப்போம்."

எங்க கல்யாணத்தை ஒண்ணும் கொண்டாட வேண்டாம். கொண்டாடறதுக்கு விஷயமா இல்லை. அடுத்த வருஷம் என் மருமக குழந்தை பெத்து கையில கொடுத்துட்டான்னா தினம் தினம் கொண்டாட்டம்தான். பேரனோ, பேத்தியோ அக்குள்ள இடுக்கிகிட்டு நான் ஊர் ஊரா சுத்தமாட்டேனா. ஐயோ பாவம்

இவன்னு சொன்ன வீட்டுக்கெல்லாம் போயிட்டு வர மாட்டேனா."

பார்வதியம்மாள் குரல் கம்மியது.

"நிச்சயமா போய்வரலாம்."

"போய்வரது மட்டுமில்லை. நம்ம வீட்டுக்கு பத்துப்பேரை கூப்பிடலாம்."

"அடிசக்கை அப்படி சொல்லுங்க."

கனகசபாபதியின் அப்பா குதூகலித்தார்.

"நாங்க கிரகப்பிரவேசத்துக்குகூட யாரையும் கூப் பிடலையே. ஒடு மொத்தமும் பிரிச்சு தளம் போட்டு புதுசா எழுப்பினேன். நாலு ஐயருங்களை கூட்டிகிட்டு வந்து பூஜை பண்ணதோட சரி. வேற யாரையும் நாங்க கூப்பிடவே இல்லை. கூப்பிடறதுக்கு வெட்கம்."

கனகசபாபதியின் அப்பா தொடர்ந்து பேசினார்.

"இதோ பாருங்க.. இனிமே வெட்கப்படறதுங்கறதே கிடையாது. எப்பவோ என்னமோ நடந்தது. அதைப்போய் திரும்பத் திரும்ப மனசுல நினைச்சுகிட்டு இவங்க கேலி பண்ணுவாங்களோ, அவங்க எளக்காரம் பண்ணுவாங்க ளோன்னு மருகி நிக்கக்கூடாது."

"அப்படியில்லை சாரதா. சின்ன வயசுல பட்ட காயம். அதனால ஆழமான வடுவா நின்னுடுச்சு."

"நான் இன்னொன்னு சொல்லிடட்டுமா."

சாரதாவின் கணவரும் மெல்லிய குரலில் ரகசியமாய் சொன்னார்.

எல்லோரும் அவரை நோக்கித் திரும்பினார்கள்.

"கடவுள் கிருபையில நமக்குள்ள ஒரு நல்ல உறவு ஏற்பட்டுப்போச்சு. இதை நாம வெளியவும் சொல்லக் கூடாது. எங்க சம்மந்தி அம்மா எனகு ஸ்நேகிதி மாதிரி அப்படின்னு நாலு பேர்கிட்ட சொன்னேன்னு வச்சுக்க, உடனே ஏதாவது

சில்மிஷம் பண்ணுவாங்க. நம்மள பத்தி நாமளே பேசி கெடுத்துக்கறோம் அப்படின்றது என் அபிப்ராயம்."

"நீங்க சொல்றது ரொம்ப சரி."

அவரைப் பார்த்து பார்வதி அம்மாள் கைகூப்பினாள்.

"உங்க வீட்லேர்ந்து பொண் பார்க்கறதுக்கு வராங்கன்னு நான் சொன்னதும், யார் என்னன்னு துருவி கேட்டு அட்ரஸ் விசாரிச்சுகிட்டு அடுத்தபடி உங்க வீட்டுக்கு கடுதாசி எழுதிப்போட்டவங்க, எங்க ஜாதியில, எங்க குடும்பத்துல உண்டு."

"கடுதாசி எழுதிப்போடலை. நேரா வந்துட்டாங்க. சுமதிங்கற பொம்பளையத்தான் சொல்றீங்க. இவங்க வீட்டு பொண்ண பார்க்கப் போறீங்களாமே. எங்க வீட்டுல பொண்ணு இருக்கு. அதை காலையில பார்த்துட்டு சாயந்தரம் அந்தப் பொண்ண பாருங்களேன் அப்படின்னாங்க.

நான்கூட பார்த்துடலாமே ஒரே நாள்ல அப்படின்னு நினைச்சேன்.

இவரு கேள்வி கேட்டாரு. அவங்க வீட்டுக்கு பொண் பார்க்கப் போறதுங்கறது உங்களுக்கு தெரிஞ்சுருக்கு. உங்க வீட்டுக்கு பொண் பார்க்க வரோம்னு அவங்களுக்கு சொன்னீங்களான்னு கேட்டாரு.

இல்லைன்னாங்க.

இவரு டக்குனு சைலண்ட்டாகி நான் வரலைன்னுட்டாரு.

ஏன் வந்தா என்ன, அதனால என்ன அப்படின்னு அந்தம்மா ஆரம்பிச்சுது.

அவங்க வீட்டுக்கு பொண் பார்க்கப்போறது தெரிஞ்சுகிட்டு, உங்க வீட்டுக்கு பொண் பார்க்க வரதை சொல்லலைன்னா அது திருட்டுத்தனம்தானே. நேர்மையான வழி இல்லையே அப்படின்னு எங்க வீட்டுக்காரரு சொல்ல, ஆமா பெரிய நேர்மையான வழி அப்படின்னு எகத்தாளமா பேச ஆரம்பிச் சாங்க. அவங்க யாருன்னு உங்களுக்கு தெரியுமா அப்படின்னு விவரணை சொல்ல ஆரம்பிச்சாங்க."

"என்ன ஏதாவது என்னைப்பத்தி குறை சொன்னாங்களா?"

"இல்லைம்மா. உங்களைப்பத்தி சொல்லலை."

"ஆனால் மாப்பிள்ளையை பத்தி சுமதி எங்கிட்ட சொன்னா. அந்தப் பையன் மக்கு. சும்மா பொம்பளைங்களோட சேர்ந்துகிட்டு டிராயிங் போடறேன், டிராயிங் போடறேன்னு கூத்தடிக்கறான். அதெல்லாம் வீட்டுக்கு ஆகுமா. சனிக்கிழமை, ஞாயித்துக்கிழமை வீட்டுக்குப் போய் பாருங்க. ஒரே ரூம்ல ஆறேழு பொம்பள உட்கார்ந்துகிட்டிருக்கும் அப்படின்னாங்க. இவருக்கு ரொம்ப கோபமாகிப்போச்சு. ஆனா, குரலே உயர்த் தலை. அப்படியா... அப்படியா... அப்போ அங்கயும் போவாத விட்டுடலாம் அப்படின்னு என்னைப் பார்த்து சொன்னாரு. லேசா கண்ணடிச்சாரு. வேணாங்க நிறுத்திடலாம். வேற எங்கனா போகலாம் அப்படின்னேன் நான். ரொம்ப சந்தோஷமா போனாங்க. நாங்க பாட்டுக்க ஏதும் நடக்காத மாதிரி கிளம்பி உங்க வீட்டுக்கு வந்துட்டோம்."

"சுமதியும் கல்யாணத்துக்கு வந்திருந்தது இல்லையா." பார்வதி கேட்டாள்.

"வெட்கங்கெட்டவங்க எல்லாத்தையும் துடைச்சு போட்டுட்டு வருவாங்க."

"அவங்க பொண்ணுக்கு நிச்சயமாயிடுச்சா."

"அதெப்படி ஆகும்."

"ஐயோ பாவம். நல்லபடியாகட்டும். அப்படியே வேற எங்கேயாவது கோயிலுக்குப் போயிடலாமா."

"போவோம்." கனகசபாபதி சொன்னான்.

"எத்தனை நாள் சுத்தறாப்போல."

சாரதாம்பாள் கனகசபாபதியை நோக்கி விசாரித்தாள்.

"என் மனசுல மூணுநாள்னு நினைச்சுகிட்டிருக்கேன். தஞ்சாவூர் போய் அங்கேயிருந்து திரும்பிடறதுன்னு. இத்தனை கோயில் பார்க்கணும்னு எந்த சங்கல்பமும் இல்லை. எந்த

அவசரமும் இல்லை. ஒரு நாளைக்கு ஒரு கோயில் போனாகூட சந்தோஷம்தான்."

அப்படித்தான் போனார்கள். ஓடு ஓடு என்று பஸ்சில் வரும் ஐயப்ப பக்தர்கள் போல் அல்லாமல். காலையில் இரண்டு கோயில், மாலையில் இரண்டு கோயில் என்று நிதானமாய் நகர்ந்தார்கள்.

மண்டபங்களிலும், குளக்கரைகளிலும் அரட்டை அடித்தார்கள். கனகசபாபதியின் அப்பா கோயில் கட்டுமானம் பற்றியும், சிற்பங்கள் பற்றியும் சொல்ல வியந்து கேட்டார்கள். கனகசபாபதி கூடுதலாய் விசாரிக்க, இன்னும் விசாரித்து அறிந்து கொண்டார்கள். கேட்டு விரும்பி ரசித்து சாப்பிட்டார்கள். அயர்ந்து தூங்கினார்கள்.

"என்னாடி எதுனா ஒழுங்கா நடக்குதா."

அம்மாவும், மாமியாரும் சிவகாமியை நடுவிலே உட்கார வைத்துக்கொண்டு விவரம் கேட்டார்கள். சொல்லிக் கொடுத்தார்கள்.

எங்கோ ஒரு கிராமத்தில் காவிரி சலசலத்து இடுப்பாழம் ஓடுவதைப் பார்த்து இறங்கிக் குளிக்க ஆசைப்பட்டார்கள். இறங்கிக் குளித்தார்கள்.

பார்வதியம்மாள் தன்னை மறந்தாள். குதூகலமானாள். குழந்தைபோல் விளையாடினாள். கட்டைத் தொண்டையில் பாட்டுப் பாடினாள். பலமுறை பலர்பேர் சொல்லி முழுக்குப் போட்டாள். எழுந்து போய் படிக்கல்லில் துணி துவைத்தாள். மற்றவர் வேட்டிகளை, புடவைகளை முறுக்கி பிழிந்து கொடுத்தாள். உட்கார்ந்து படித் துறையை அந்தக் கருங்கல்லை தடவிக் கொடுத்தாள்.

"எத்தினி மனுஷாளை பார்த்திருக்கும் இல்லை இது. காவிரிங்கறது இன்னிக்கு நேத்தி விஷயமா. இந்த இடம், இந்த வழி, இந்த கூழாங்கல்லை தாண்டிகிட்டுதானே கோடிக்கணக்கான ஜனங்கள் போயிருக்கு. நல்லவங்க; கெட்டவங்க, அழகு, குரூரம் எல்லாரையும் பார்த்திருக்கும்ல இது."

எவரையும் குறிப்பிட்டுப் பார்க்காது காவிரியைப் பார்த்து வாய்விட்டுப் பேசினாள்.

சட்டென்று மௌனமானாள்.

"நான் ரொம்ப அலம்பல் பண்றேனோ" என்று புருஷனைப் பார்த்துக் கேட்டாள்.

"பண்ணேன். பண்ணிட்டுப் போயேன். என்ன தப்பு" என்று சிரித்தபடி சொல்ல, சற்று வெட்கப்பட்டாள்.

"எனக்கு டூர் போதும்னு ஆயிப்போச்சு. நாளை மெட்ராஸுக்குதானே போறோம்."

"உங்க குலதெய்வம் கோயிலுக்கு மாப்பிள்ளையையும் பொண்ணையும் கூட்டிகிட்டு போயிட்டீங்க. எங்க குலதெய்வம் கோயில் கிட்டதான் இருக்கு போகலாமா."

சிவகாமியின் அப்பா கேட்க, கனகசபாபதியின் அப்பாவும், அம்மாவும் திரும்பிப் பார்த்தார்கள்.

"அடடே... சொல்லவே இல்லையே."

"அந்தக் கோயில் திருச்சியில இருக்கு. சமயபுரம் மாரியம்மன்."

"அட போகலாமே."

"எப்படியும் ஒரு நாளாகும்."

"ஆயிட்டு போகறது. இப்போ யாருக்கு என்ன வேலை முக்கியம். அவன்தான் லீவு போட்டுட்டு வந்திருக்கானே."

"வண்டி அப்படி பேசியிருக்கோமா."

"வண்டி எப்போவும் நம்ம கூடதாம்ப்பா இருக்கும். ஒருநாள் ரெண்டுநாள் தள்ளிப் போனா ஒண்ணும் கேட்க மாட்டாங்க."

"ஆனா பார்வதியம்மாவுக்கு உடம்பு அலுப்பு ஆயிப் போச்சோ."

சாரதா கவலையோடு கோட்டாள்.

"அலுப்புதான். ஆனா, அதைவிடவும் நிறைவு உள்ளுக்குள்ள இருக்கு. அதனாலயும் ஊருக்கு திரும்பலாம்னு

நினைக்கிறேன். சமயபுரம் பார்க்கணும்னு எனக்கும் ஆசை யிருக்கு."

"போயிட்டு வந்துடலாம்மா. நான் முன்னாடி உட்கார்ந்துக் கறேன். நீங்க நாலு பேரும் நல்லா தூங்கிட்டு வரலாம். பதினாலு பேரு போற வேன்ல ஆறுபேர் தான் போறோம். ஃப்ரீயா படுத்துக்கிட்டு வரலாம். திருச்சி போயிட்டு வந்துட லாம்மா." என்று பையன் சொல்ல, பார்வதியம்மாள் பலமாகத் தலையாட்டினாள்.

கனகசபாபதி சொன்னது போலவே அவர்கள் தஞ்சாவூர் போவதற்கு முன்பே தலையாட்டத் துவங்கி, மெல்ல சாய்ந்து தலைக்கு வாட்டமாய் பையோ, தலைகாணியோ வைத்துக் கொண்டு அயர்ந்து தூங்கினார்கள். திருச்சி வந்துட்டோம் என்று சொன்னதும் எழுந்தார்கள். முகம் கழுவி காபி குடித்து சுவாமி தரிசனம் பண்ணி வேறொரு லாட்ஜில் ஓய்வெடுத் தார்கள்.

"இப்படி அப்பா அம்மாவோடு, மாமனார் மாமியாரோடு யாராவது ஹனிமூன் போயிருப்பாங்களா."

இரவு திருச்சி ஓட்டலில் புருஷனை நெருங்கிக் கட்டிக் கொண்டு அவன் தடவலை தாங்கி கிளர்ந்து கொண்டு குரல் நெகிழ அவள் கேட்டாள்.

"கொஞ்சம் அதிசயம்தான்."

"அம்மா சொல்றாங்க ஊருக்கு போனவுடனே உங்கப்பா அம்மாவை நம்பள உட்கார வச்சு சுத்திப் போடணுமாம்"

"அவங்களையும் உட்காரவச்சு சுத்திப் போடணும். சிவகாமி உனக்கு ஊருக்கு போகணும்னு இல்லை."

"போகணும்னா போகலாம். இருக்கணும்னா இருக்கலாம்."

"உனக்கு ஒரு சாய்ஸ் கொடுத்தா நீ என்ன பண்ணுவ ஊருக்கு போவியா, இல்ல இங்க இருப்பியான்னு கேட்கறேன்."

"என் புருஷன் எங்க இருக்காரோ அங்க நானும் இருப்பேன். அவ்ளோதான். ராமன் இருக்குமிடமே அயோத்தி."

"எனக்கு இன்னொரு கவலை."

"என்ன."

"ஒண்ணும் சரியா வரலையே தடுமாற்றமா இருக்கேன்னு ஒரே கவலை."

"எங்கம்மாகிட்ட சொன்னேன்."

"ஏய்... இதெல்லாமா சொல்றது."

"கேட்டாங்களே... கேட்டா பதில் சொல்லணுமே. அவங்க கிட்ட சொன்னேன் தடுமாற்றமாத்தான் இருக்குன்னு. ஆரம்பத் துல அப்படித்தாண்டி இருக்கும். போகப் போக சரியாயிடும். நீங்க கவலைப்படவேணாம்னு சொல்லு. பிரியமா இருக்கறது தான் பெரிய சந்தோஷம். பொம்பளைகிட்ட உண்மையா இருந்துட்டா... பொம்பளை தானா கட்டுப்படுவா. அப்படின்னு சொன்னாங்க."

"நீ வலிக்குதுன்னு கத்தறியா எனக்கு எல்லாம் அப்செட் ஆயிப்போகுது. வலிக்காதபடியா எப்படி செய்யறதுன்னு பின்வாங்கிடறேன்."

"அதுவும் சரியாயிடுமாம். ரெண்டுபேர் உடம்பு சூடும் பட்டுபட்டு சமனமாகுமாம். பயமே இல்லாத போகுமாம்."

"உனக்கு பயமிருக்கா என்ன."

"பயமில்லை. ஆனா, இதைவிட உட்கார்ந்து பேசறது பிடிச்சிருக்கு. உங்களோட பேசறது மட்டுமில்லை. நம்ம மனுஷாள் சுத்தி உட்கார்ந்துண்டு பேசறது ரொம்ப பிடிச் சிருக்கு. எப்படா விடியும். எப்படா மாமியாரை பார்க்கலாம். எப்படா மாமனாரை பார்க்கலாம். எப்படா எல்லாத்தையும் தூக்கி வண்டியில போட்டுண்டு வேன்ல ஏறி சிரிச்சு பேசிகிட்டே போகலாம்னு நினைக்கறேனே தவிர ராத்திரி வரணும், புருஷன் பக்கத்துல படுக்கணும்னு தோணவே இல்லை."

"அப்படியா, சங்கதி. நீ வேணும்னு கேட்பியோன்னு தான் நான் தொட்டுத் துழாவிகிட்டிருக்கேனே தவிர, மத்தபடி இதுல எனக்கு பெரிய ஆர்வமில்லை."

"நிஜமாவா."

"நிஜமாதான்"

"ஆம்பளைங்க அப்படி இல்லைன்னு சொல்லுவாங்க."

"எப்படி இல்லை."

"ஆம்பளைங்களுக்கு காமம் அதிகமா இருக்கும். பொம்பளைங்க இல்லாத முடியாது அப்படின்னு சொல்லுவாங்க."

"காமம் எல்லாருக்கும் பொதுவான உணர்ச்சி. அந்த உணர்வை ஜாக்கிரதையா வச்சுக்கறது தனிநபர் திறமை."

"பொம்பளைங்க அடக்கறா மாதிரி, ஆம்பளைங்க அடக்க முடியுமா."

"காமம் அடக்கற விஷயமே இல்லை. எதை அடக்கினாலும் பிய்ச்சுகிட்டு மறுபடியும் மூஞ்சியில குத்தும், புரிஞ்சுக்கறது தான் முக்கியம். காமம் என்னான்னு நான் புரிஞ்சுகிட்டேன்."

"எப்போ."

"காலேஜ் படிக்கும் போது."

"ஐயா... கதை கதையா விடறீங்க. காலேஜ் படிக்கற போது ஆட்டம் பாட்டம் ஜாஸ்தியா இருக்குமே தவிர, அப்பப்போய் தெரிஞ்சுக்கறதும், புரிஞ்சுக்கறதும் நடக்குமா. சொன்னாலும் புரியாத பருவமில்லையா."

"அது எல்லாருக்குமில்லை. சிலர் விதிவிலக்கு உண்டு. நிறையபேர் அதுல சிக்குவாங்க, சீரழிவாங்கங்கறது உண்மை. ஆனா, கொஞ்சம் ஒரு அஞ்சு நிமிஷம் நம்மள சுத்தி என்னா நடக்குதுன்னு அலெர்ட்டா விழிப்பா இருந்து பார்த்துட்டோம்னா ரொம்ப எளிதா இதைப் புரிஞ்சுக்கலாம். எப்போ புரிஞ்சு போச்சோ அப்போ இது சீறாது. இந்தப்புலி நாய்க்குட்டி மாதிரி பின்னாலயே வரும்."

"அஞ்சு நிமிஷம் விழிப்பா இருக்கறது கஷ்டமா."

"ரொம்ப ரொம்ப கஷ்டம். எதுனா ஒரு மயக்கம் வந்துகிட்டே இருக்கும்."

"நீங்க எப்படி விழிப்பா இருந்தீங்க."

"கண் எதிர்க்க ஒருத்தன் செத்துப் போனான். அவன் ஏன் செத்துப் போனான்னு யோசனை பண்ணேன். அந்த யோசனை பண்ணின அஞ்சு நிமிஷமும் என்னுடைய வாழ்க்கையின் அற்புதமான நேரம்."

"யாரு எப்படி செத்துப் போனான்."

"எங்க காலேஜ் ஸ்டூடண்ட் அகமது உசைன்னு பேரு. அவன்தான் எங்க காலேஜ்ல ஹீரோ. காலேஜ் பிரசிடெண்டோ, வைஸ் பிரசிடெண்ட்டோ, செக்ரடரியோ எதுவுமில்லை. பெரிய ஸ்போர்ட்ஸ்மேனோ அல்லது நடிகனோ இல்லை. ஆனா, இவங்க எல்லோருமே கிறங்கி நிக்கற ஒரு ஆளா இருந்தான். பணக்காரன் அழகன். ஒரு அராபியன் மாதிரி பெரிய முகவாய் கட்டையா, உயரமா, கோதுமை உடைச்சமாதிரி நிறமா, சிலும்புற தலைமுடியோட இருப்பான். இம்ரான்கான் சாயல் இருக்கும்.

அவன் யாரை சொல்றானோ அவன்தான் பிரசிடெண்ட். அவன் யாருக்கு கைதட்ட சொல்றானோ அவனுக்குத்தான் க்ளாப். ஒருமாதிரியா, கெட்டிக்காரத்தனமா சர்வாதிகாரம் பண்ணிகிட்டிருந்தான்.

அவனைக் கண்டா எனக்கு ஆச்சரியமா இருக்கும். இருவத்தோரு வயசுல இந்த போடு போடறானே நாப்பது வயசுல எப்படி இருப்பான். எதையெல்லாம் கட்டி ஆளுவான் அப்படின்னு பிரமிப்பா இருக்கும். இவங்கிட்ட என்ன இருக்கு அப்படின்னு ஒரு கேள்வி வரும். இந்த உயரம், அழகு இதனால வந்த ஆளுமையா. அறிவால வந்த ஆளுமையா. என்ன அப்படின்னு ஒரு கேள்வி வரும்.

அழகா இருப்பான். பொண்ணுங்க அவனை சுத்தும். ஆனா அவன் பொண்ணுங்க பக்கமே போகமாட்டான். லவ்வுனு யாரா வது சொல்லிட்டா கூப்பிட்டு திட்டுவான். படிக்க வந்துட்டு என்னா லவ்வு. இந்த மாதிரி அசிங்கமா எல்லாம் டைம் வேஸ்ட் பண்ணாதீங்க அப்படின்னு அட்வைஸ் பண்ணுவான்.

ஸ்போர்ட்ஸ் மேனை கட்டிப்பிடிச்சு பாராட்டுவான். ஆனா அவன் ஸ்போர்ட்ஸ்ல இருக்கமாட்டான். பாட்டுப்பாடினா நேரா

வந்து கை குலுக்குவான். இன்னும் ரெண்டு பாடுங்க பிரதர் அப்படின்னு தனியா கூட்டிகிட்டு போயிடுவான்.

ஒரு பையன் சாப்பாட்டுக்கு இல்லாம மயங்கி விழுந்துட்டான்னு கேள்விப்பட்டு அவனை கூட்டிகிட்டு போய், அவங்க ஜாதி பெரியவங்ககிட்ட இன்ட்ரொடியூஸ் பண்ணி அவனுக்கு ஒரு சேரிட்டி டிரஸ்ட்லேர்ந்து ஸ்ட்டைபண்ட் வாங்கித் தந்தான். பையன் சட்டைத்துணி சரியா இல்லைன்னு பேண்ட் நைக்கி ஷூ எல்லாம் வாங்கிக் கொடுத்தான். தினம் காலையில் அந்தப் பையன் வந்து குட்மார்னிங் சொல்லிட்டு, அவன் டிரஸ்ஸை காண்பிச்சுட்டு போயிடுவான். அவனைச் சுத்தி எப்பவுமே இருபதுபேர் இருப்பாங்க. பேராசிரியர்க ளெல்லாம் மரியாதையா பேசுவாங்க.

ஒரு தடவை மோட்டார் சைக்கிள்ள உட்கார்ந்து பேசிக் கிட்டிருந்தோம். காலேஜ் உசரத்துல இருக்கற தேசியக் கொடியை அவிழ்க்க ஒருத்தன் ட்ரை பண்ண போது, இவன், "பார் அந்த தேசியக் கொடியை தவற விடப்போறான்'னு சொல்லி, டப்புனு தன் மோட்டார் சைக்கிளை உதைச்சான். அவன் சொன்னா மாதிரியே கொடி அறுந்து கீழே விழுது. இவன் மூணாவது செகண்ட் நாலுபேரை பொளந்துகிட்டு அந்த மோட்டார் சைக்கிள்ள பறந்தான். கொடி கீழ வரதுக்கு முன்னாடி அவன் கொடியை பிடிச்சுட்டான்.

எல்லாம் சரி. லவ்வுன்னா மட்டும் ஏன் அவ்ளோ கோவப் படற. மத்த தெல்லாம் பிரமாதமா இருக்கு. உனக்கு ஏன் காதல் பிடிக்கமாட்டேன்னுதுன்னு ஒரு பையன் கேட்டான். அவன் கொஞ்சநேரம் சைலண்டா இருந்தான். எனக்கு ரோட்ல நின்னு டாவடிக்கறது. பொண்ணுங்க பின்னாடி சுத்தறது. லெட்டர் கொடுக்கறது. இதெல்லாம் அவசியமே இல்லாமப் போயிடுச்சு. ஏன் அப்படின்னு கேட்டான் ஒருத்தன்.

அகமது உசைனுக்கு ப்ளஸ் டூ படிக்கும்போதே கல்யாணம் ஆயிடுச்சாம். சொந்தக்காரப் பொண்ணேவாம். இப்போ அகமது உசைன் எம்.ஏ. படிக்கிறான். அந்த சொந்தக்காரப் பொண்ணு வேற ஒரு ஊர்ல பி.ஏ. படிக்குது. லீவுன்னா

போயிட்டு வருவானாம். என் பொண்டாட்டி என்னையே நினைச்சுட்டிருக்கணும்னு நான் நினைக்கறேன்."

அப்போ அந்தம்மா நினைக்க மாட்டாங்களா.

நான் அவங்களையே நினைச்சுட்டிருக்கணும்னு அவங்க நினைக்கறதுதானே நியாயம். இங்க நான் உட்கார்ந்து யார்கிட்டயோ லெட்டர் கொடுத்து, யார் பின்னாலயோ சுத்தி, என்னால அதெல்லாம் பண்ண முடியாது.

உனக்கு கல்யாணம் ஆயிடுச்சு. அதனால நீ வேற யாரையும் லவ் பண்ண மாட்ட. நான் என்ன பண்ணுவேன் அப்படின்னு இன்னொரு பையன் சீறினான்.

எனக்கு கல்யாணம் ஆகாம போனாலும் நான் இந்த மாதிரி லவ் லெட்டர் கொடுக்க மாட்டேன். என் பொண்டாட்டி என்னை கல்யாணம் பண்ணிக்கறதுக்கு முன்னாடி யாருக்கோ லவ் லெட்டர் கொடுத்திருந்தா, யார் பின்னாடியோ சுத்திகிட்டிருந் தான்னு கேள்விப்பட்டா எனக்கு பதறாதா. அதே மாதிரிதான் நான் யாரையோ லவ் பண்ணிட்டு இன்னொருத்தியை கல் யாணம் பண்ணிக்கறதுங்கறதும், இது அயோக்கியத்தனம். என் பொண்டாட்டி பியூரா இருக்கணும்னு நினைக்கறாப்போல, நானும் சுத்தமா இருக்கணும்னு என் பொண்டாட்டி நினைக்கலா மில்ல. ஸோ, பிரச்சினை கல்யாணம் ஆவறது ஆவாதது இல்ல. வாழ்க்கையில ஒரேயொரு பொண்ணு. சும்மா எல்லாப்பக்கமும் வாயவச்சுகிட்டு இருக்கக்கூடாது. அதுவும் தவிர லேடீஸ்மேல ரொம்ப கான்சன்ட்ரேட் பண்றவனுக்கு மத்த விஷயத்துல மனசு சரியா லயிக்காது. அவங்க எதுலயும் முதலா வரமுடியாது. திறமை வளர்த்துக்க முடியாது.

நீ எதுலப்பா முதலாவதா வந்த அப்படின்னு இன்னொரு பையன் கேட்டான்.

சட்டுனு அகமது உசேன் மூஞ்சி முழுவதும் சிவந்தது. அப்படி அவன் கோபப்பட்டு யாரும் பார்த்ததில்லை. என்னை கேட்கறியா, என்னை கேட்கறியா அப்படின்னு விருக்குன்னு எழுந்தான். மோட்டார் சைக்கிள்ல உட்கார சீட்டை தூக்கினான்.

அதுக்குள்ள ஒரு லெதர் பேக் இருந்தது. அதுலேர்ந்து பேங்க் பாஸ்புக் எடுத்தான்.

ஒண்ணுத்துல ஏழு லட்சம், ஒண்ணுத்துல ரெண்டு லட்சம், ஒண்ணுத்துல நாலு லட்சம் அப்படின்னு மூணு நாலு பாஸ் புக் தூக்கிப் போட்டான். பக்கத்துல இருந்த என்னை கூப்பிட்டு அவன் பாஸ்போர்ட்டை காண்பிச்சான் பல ஊருக்கு போயிட்டு வந்த விசா அவங்கிட்ட இருந்தது. சிங்கப்பூர், மலேசியா, துபாய், பிரிட்டன், அமெரிக்கான்னு பல இடங்கள் இருந்தது.

அவன் சொந்தமா ப்ளாட் வாங்கி கிரகப்பிரவேசம் பண்ண போட்டோ காண்பிச்சான். இது எதுனா உங்ககிட்ட இருக்காடா அப்படின்னு கேட்டான். பசங்க சைலண்ட்டாயிட்டாங்க. நான் இப்பவே முதலா வருவேன். சென்ட்ரல் மினிஸ்டரா வருவேன். எனக்கு நம்பிக்கை இருக்கு அப்படின்னான். பசங்க அப்பவே வருங்கால முதல்வர் வாழ்கன்னு தூக்கிட்டாங்க. ஆனா அப்படிச் சொன்னது தப்போ. அத்தினி பேர் கண்பட்டது பிசகாயிடுச்சோ தெரியலை.

எங்க காலேஜுக்கும் இன்னொரு காலேஜுக்கும் சண்டை. பொண்ணுங்கள டாவடிக்கிற விஷயத்துல அந்தக் காலேஜ் பசங்க எங்க காலேஜ் உள்ளுக்குள்ள புகுந்து அங்க மரத்துல இருக்கற பசங்களை என்ன ஏதுன்னே சொல்லாத அடிச்சுட்டுப் போயிட்டாங்க. எங்க காலேஜ் பசங்க விடுவாங்களா. ஒட்டு மொத்தமா அறுபது எழுபதுபேர் புகுந்து அந்த காலேஜுக்குள்ள கண்ட இடங்களை அடிச்சு ஒடிச்சு நாசம் பண்ணி அங்க ஒரு பேராசிரியர் மூஞ்சியில தண்ணியை ஊத்தி அசிங்கப் படுத்திட்டானுங்க.

ரெண்டு மூணு நாள்ல பெரிய சண்டை யாயிடுச்சு. வேணாம் விட்ருங்க. சமாதானமா போயிடுங்க. அப்படின்னு பிரின்சிபால் மீட்டிங்ல பேசிகிட்டே இருக்கும் போது ஒரு ரெண்டாயிரம் பசங்க அந்த காலேஜ்லேர்ந்து இந்தக் காலேஜ் பார்த்து வரமாதிரி ஒரு நியூஸ் கிடைச்சது. க்ளாஸ்ல இருக்கற பசங்களை யெல்லாம் கூப்பிட்டு வெளிய வரதுக்குள்ளயும் அந்தப்பசங்க காலேஜ் வாசலுக்கு வந்துட்டாங்க. கல்லு பறக்குது. வெளிய

வரவே முடியலை. காலேஜ் போர்டெல்லாம் நாசம். எங்க புரொபஸருங்களே வெறியாயிட்டாங்க.

எவன்டா அவன் அப்படின்னு ரெண்டு புரொபஸர் வயசானவங்க தெருவுல இறங்க, அவங்கள தடுத்து நிறுத்த அகமது உசேன் போனான. அகமது உசேன் இறங்கறான்ன வுடனே மொத்த காலேஜும் பெரிய படை மாதிரி இறங்குச்சு. நான் எல்லாத்தையும் வெறுமனே வேடிக்கைதான் பார்த்து கிட்டிருந்தேன். ஒண்ணுகூட கலந்துக்கலை. அதை இப்ப நினைச்சா கொஞ்சம் வெட்கமாவும் இருக்கும். ஆனா, அதுதான் சரின்னும் தோணும்."

எங்க பசங்க மைதானத்துல இறங்கி பதில் குரல் விடவே எதிர்ப்பக்கம் கல் அடிக்கறது குறைஞ்சது. அப்படியே தெரு முனை வரைக்கும் துரத்திகிட்டு போனோம். ஆனா அதேநேரம் வேற காலேஜ்லேர்ந்து இன்னும் கொஞ்சம் கூடுதலா பசங்க அந்தப்பக்கம் வந்து இறங்கிட்டாங்க. முன்னாடி போன எங்க பசங்களுக்கெல்லாம் செம அடி. முன்னாடி போன பசங்களுக் குத்தான் இப்படி ஆயிப்போச்சுன்னா, இன்னொரு பக்கத்துல அகமது உசேன் போராடிகிட்டிருக்கான். அடிச்சு துவம்சம் பண்ணிட்டான். தெருவுல வலதுபக்கம் முனைவரைக்கும் க்ளியர் ஆயிப்போச்சு. வலது பக்கம் க்ளியர் ஆயிப்போச்சுன்னு சொல்லிட்டு இடதுபக்கம் ஓடி வந்தான். அப்போ எதிரேயிருந்து ஒரு ஆள் தபதபன்னு சைக்கிள்ல வேகமா வரதப்பார்த்தவுடனே வாடா உன்னை கொன்னுடறேன்னு உருட்டுக்கட்டைய வச்சுகிட்டு நின்னான்.

சைக்கிள்ள வர ஆள் வேகமாக கிட்ட வந்ததும் உருட்டுக் கட்டைய செவிட்டி அடிச்சான். நங்குனு அந்தக்கட்டை மூஞ்சி யில பட்டுது. வந்தவன் எகிறி விழுந்தான். அப்புறம் பார்த்தா அவன் காலேஜ் பையன் இல்லை. காலேஜுக்கு எதிரே இருக்கற குப்பத்துப் பையன். அவங்கம்மா செத்துப் போயிட்டாங்கன்னு யாரோ சொல்ல, அவன் வேலைலேர்ந்து அலறி அடிச்சுகிட்டு வந்திருக்கான். அதே இருவத்தோரு வயசு. ஆனா. உத்துப் பார்த்தாதான் அவன் காலேஜ் படிக்காதவன்னு தெரியும்.

சைக்கிள்ல மிதிச்சுகிட்டு வரும்போது ஒண்ணும் கண்டுபிடிக்க முடியாது. ஐய்யய்யோ தப்பா அடிச்சுட்டோமேன்னு அகமது உசேன் பயந்து பின்வாங்க, மொத்த குப்பமும் வந்து இவன்தான் அடிச்சான். இவன்தான் அடிச்சான்னு அகமது உசேனை மடக்கிப் பிடிச்சுகிட்டு, ஆம்பளையும் பொம்பளையுமா ஒரு முப்பது நாப்பது பேர் பொத்து பொத்துனு அடிக்கறாங்க.

நான் ஒரு சுவத்துக்கட்டை பின்னாடி நின்னு பார்க்கறேன். நான் நின்ன இடத்துலேர்ந்து பதினஞ்சு அடி தூரத்துல அகமது உசேன் பேயடி வாங்கறான். சுத்தி சுத்தி பசங்க தடுக்கறாங்க. ஆனாலும், அத்தனையும் மீறி குப்பத்து ஜனம் அவனை அடிக்குது. சுத்தியிருந்து தடுத்த பசங்களையும் அடிக்குது. நான் எல்லாத்தையும் வேடிக்கை பார்த்துகிட்டிருக்கேன். அஞ்சு இல்ல ஆறு நிமிஷம் அகமது உசேன் தரையில கிடக்கான். மூஞ்சி வாயெல்லாம் ரத்தம். பேண்ட் பின்பக்கமா ரத்தம். வயித்துலேர்ந்து ரத்தம். அவனை தூக்கினா தலை லொடுக்குனு சாயுது. அப்பவே பசங்க சொல்லிட்டாங்க அகமது உசேன் செத்துப்போயிட்டான்னு.

பயந்து போய் சுவரோட சுவரா உட்கார்ந்துட்டேன். எங்க அந்த அகமது உசேன். எங்க அந்த வீரம். எங்க அந்த அழகு. எங்க அந்த திறமை. எங்க அந்த காசு. எங்க போச்சு எல்லாம். ஏன் எதுவும் காப்பாத்தலை. அவன் கீழ விழாம யாராவது காப்பாத்த வேணாமா. ஏன் காப்பாத்தலை. இப்படி சாகறதுக்கா இவ்ளோ அழகா பொறந்தான். இப்படி சாகறதுக்கா இவ்ளோ சம்பாதிச்சான். இப்படி சாகறதுக்கா இந்த காலேஜ்ல வந்து சேர்ந்தான். இப்படி சாகறதுக்கா அவனை எல்லாரும் கொண்டாடினாங்க. எனக்கு வாழ்க்கையில எந்த அர்த்தமும் இல்லைன்னு ஒரு பதினஞ்சு அடி தூரத்துல ஒரு பாடம் நடந்தது.

குப்பத்து ஜனங்களை தப்பு சொல்றதா. குப்பத்து பையனை அடிச்ச அகமது உசேனை தப்பு சொல்றதா. இல்லை, இன்னொரு காலேஜ் பையனை தப்பு சொல்றதா. எங்க காலேஜ்

பசங்களை தப்பு சொல்றதா. எனக்குப் புரியலை. அவன் சாகணும்னே சகலமும் நடந்தா மாதிரியே இருக்கு.

எங்க காலேஜ் பையன் எந்தப் பொண்ணையோ கேலி பண்ணப்போக, அந்தப் பொண்ணோட அண்ணன் வேற காலேஜ்ல படிக்க, அந்தப் பையன் இந்தப் பையனை அடிக்கப்போக செத்தது அகமது உசேன். தி க்ரேட் லீடர். சென்ட்ரல் மினிஸ்டர் ஆகணும்ன லீடர். சாதாரணமாக நடு ரோட்ல பொம்பளைங்களாலும், ஆம்பளைங்களாலும் அடி பட்டு நாய்மாதிரி செத்துப் போனான்.

அப்புறம் போலீஸான போலீஸ். என்கொயரியான என் கொயரி, நான் தான் நேர்ல பார்த்தேன். ஆனா என்னை என் கொயரியில சேர்க்கலை. நான் உளறிடுவேனாம். சரியா பேச மாட்டேனாம். பார்க்காத ஒரு பையன் எல்லாத்தையும் பார்த்தா மாதிரி சாட்சி சொல்ல போயிட்டான்.

கடைசி வரைக்கும் குப்பத்து ஜனங்க யாரையும் கைது பண்ணலை. அவங்க அவ்ளோ ஒத்துமையா நாங்க யாரும் அடிக்கலைன்னு சத்தியம் பண்ணாங்க. ஓடி வந்தானே அந்தப் பையன் அம்மா சாகலையாம். சாகக் கிடந்தாளாம். செத்துட்டான்னு நினைச்சுகிட்டு ஓடி வந்தானாம். புள்ள அடிபட்டு செத்துட்டானோன்னு அவ சரியாயிட்டா.

ஒரு மாசம் நான் பைத்தியம் புடிச்ச மாதிரி இருந்தேன்.

இது என்ன உலகம். என்ன வாழ்க்கை அப்படின்னு திரும்பத் திரும்ப யோசனை பண்றபோது, அமைதியா இருக்கறதுதான் அழகுன்னு தோணிடுச்சு. என்னால சண்டைக்கு போக முடியாது. யாரும் சண்டைக்கு கூப்பிட்டாலும் என்னால சண்டைக்கு போக முடியாது. நான் சாவுக்கு பயப்படலை. ஆனா, இப்படியா ஒருத்தன் சாவான்.

கோபம், காமம் எல்லாமே பதட்டம்தான். வெறுமன பதட்டத்துல ஒருத்தன் சாவான்றது ரொம்ப பரிதாபம். வாழ்வும், சாவும் பதட்டமில்லாம இருக்கணும். எந்நேரமும் தந்திரமா, எந்நேரமும் ஒரு தவிப்பா, எந்நேரமும் அடுத்த ஆளை குறை சொல்றதா, எந்நேரமும் தான் மகா பெரிய புத்திசாலி, போர்வீரன்

அப்படின்னு தொடை தட்டித் திரியாத. சாதாரணமா சும்மாயிருக் கணும் அப்படின்னு அங்கதான் கத்துகிட்டேன். அன்னிலேர்ந்து அப்படித்தான் இருக்கேன்.

இப்போ பரவாயில்லை. பேசறேனே காலேஜ் படிக்கும்போது யார்கூடயும் பேசமாட்டேன். பேச்சு குறைஞ்சதுனாலயோ என்னமோ செயல் ஜாஸ்தியாச்சு. டிராயிங் வரையறது அதிகமாயிருந்தது. காலேஜ்ல டிராயிங் காம்படிஷன் இருந்தது. நான் மூணுபடம் வரைஞ்ச எக்ஸ்பிட் பண்ணேன். இன்னொரு பையனுக்கு எப்படி டிராயிங் போடறதுன்னு சொல்லிக் கொடுத்து அவன் போடற டிராயிங்ல சில கரெக்ஷன்ஸ் பண்ணேன். என் படத்துக்கு முதல் பிரைஸ். அவன் படத்துக்கு ரெண்டாவது பிரைஸ், நான் பரிசு வாங்கறதுக்கு போகலை. வீட்டுக்குப் போயிட்டேன்.

காலேஜ் முடிச்சவுடனே ரயில்வே எக்ஸாமினேஷன் எழுதினேன். அதுக்குப்பிறகு நல்ல இடத்துல வேலை கொடுத் தாங்க. நிறைய துட்டு வாங்கலாமாம். துட்டு வாங்கினாத்தான் அங்க இருக்க முடியுமாம். எனக்கு அந்த இடம் வேணாம்னு வேற இடம் கொடுங்க ஸார்னு வந்தேன். அங்க ரொம்ப லஞ்ச லாவண்யம்னுதானே உன்னை போடறேன் அப்படின்னாரு ஆபிஸர். நான் ஒருத்தன் புகுந்துவிட்டதுனால எதையும் நிறுத்த முடியாது ஸார். உள்ள புகுந்து எல்லாரையும் சத்தியசந்தனா மாத்தறதுக்கு பதிலா என்னை நான் சத்தியசந்தனா வச்சுக்கறதுக்கு இடம் கொடுங்கன்னு கேட்டேன். ஒரு மூணு மாசம் இருன்னாங்க. போவாத போவாதன்னு எல்லோரும் சொன்னாங்க. பழகிக்கோடான்னாங்க. இது லஞ்சமே இல்லை அன்பளிப்பு அப்படின்னு புதுசா விவரம் சொன்னாங்க.

ரயில்வேயின் எதிர்காலத்திட்டம் பற்றின ப்ளான். அந்த இடத்துக்குத்தான் நான் வேலைக்கு வந்தேன். இங்க ஒரு லைன் போடலாம். அங்க ஒரு லைன் போடலாம். இங்க ஒரு பாலம் கட்டலாம். அங்க ஒரு பாலம் கட்டலாம்னு நாங்க ஆராய்ஞ்சு பலதும் பார்த்து தேர்ந்தெடுப்போம். நாங்க சொன்ன இடத்தை தேர்ந்தெடுத்து கொடுத்து இப்படி பாலம் கட்டலாம்னு

சொல்றவரைக்கும் தான் எங்க வேலை. பாலம் கட்டறது வேற ஒரு டிபார்ட்மெண்ட் வேலை.

எங்க டிபார்ட்மெண்ட்ல தீபாவளி ஸ்வீட்கூட யாரும் தர மாட்டாங்க. ஒரு விதத்துல நான் கோழைதான். ஒரு விதத்துல வீரன். கெட்டுப்போகமாட்டேன்னு பிடிவாதமாயிருந்த வீரன். இது ரயில்வே முழுக்க பலபேருக்கு தெரிஞ்சு போச்சு. ஏன் அதைத்தாண்டி விக்கிரவாண்டி வரைக்கும், விழுப்புரம் வரைக்கும். இந்தாண்ட நெல்லூர் வரைக்கும் பரவிப்போச்சு. போயிடு, போயிடு தனியார் கம்பெனிக்கு போயிடுன்னாங்க. எனக்கு இஷ்ட மில்லைன்னு சொல்லிட்டேன். காசுக்கு ஆசைப் பட்டு டென்ஷனை வரவழைச்சுப்பானேன். டென்ஷனை வர வழைச்சுட்டு மருந்துக்கு காசை செலவு பண்ணுவானேன்னு தோணுச்சு. ஒன்பதே முக்கால்லேர்ந்து அஞ்சே முக்கால், வாரத்துக்கு ரெண்டு நாள் லீவு. நடுசிட்டியில உத்தியோகம். அந்தப்பக்கம், இந்தப் பக்கம் அரைமணி நேரம் போயிட்டு வரலாம். வேலை இருந்தா செய்யலாம். இல்லைன்னா சும்மா உட்கார்ந்திருக்கலாம். ஆபத்து சம்பத்துன்னா உடனே லீவு கொடுத்துடுவாங்க. ஏன், எதுக்குன்னு கேள்வி கேட்கவே மாட்டாங்க. அதைத்தவிர...”

கனகசபாபதி நிறுத்தினான்.

சிவகாமி ஆவலாக அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“அதைத்தவிர...” என்று அழகாக தலையசைத்துக் கேட்டாள்.

“என்னுடைய இன்னொரு தொழிலுக்கு ரயில்வே உத்தியோகம்தான் ரைட்.”

“டிராயிங் போடறதா.”

“ஆமாம் அப்போதான் நான் தஞ்சாவூர் பெயிண்டிங் பக்கம் திரும்பினேன். வாரப்பத்திரிகைக்கு போகலாமா, காலண்டர் டிராயிங்குக்கு போகலாமான்னு அலை மோதிக்கிட்டிருந்தேன். வாரப்பத்திரிகைக்கு போனா மறுபடியும் டென்ஷன். காலண்டர்

டிராயிங்ல எனக்கு முன்னாடி பல பேர் இருந்தாங்க. அவங்க
ளெல்லாம் ஒய்ஞ்சபிறகுதான் எனக்கு வாய்ப்பு கிடைக்கும்.
அதனால அது அவ்ளோ பிரகாசமாகவும் இல்லை. வருஷத்
துக்கு ஒரு தடவைதான் வேலை. ஆனாலும் நான் விடலை.
அந்த காலண்டர் டிராயிங்லயே எதுனா வித்தியாசமா பண்ணி
லாமான்னு நினைச்சு, வழக்கமா பண்ற ரவிவர்மா காப்பியடிக்க
மாதிரியான சரஸ்வதியெல்லாம் வரையாத, காமதேனு அது
உடம்புல தேவதைகள், பெரிய கும்பம், அதுல மஹாலட்சுமி,
பழைய வெங்கடாஜலபதி படம். அதாவது, முகம் தெரியற,
பெரிய கண்களா இருக்கற, சங்கு சக்கரத்தோட இருக்கற,
வெறும் மாரோட வேட்டியும், இடுப்புல ஒட்டியாணமும
இருக்கற, வெங்கடாஜலபதி படம்னு வரைஞ்சேன்.

நான் புதுசா பண்றேன்னு பார்த்துட்டு வேற யாரோ ஒருத்தர்,
சினிமா நடிகை மூஞ்சியாகவே லக்ஷ்மி சரஸ்வதியெல்லாம்
போட்டார். என்னய்யா இப்படி பண்றீங்கன்னு கேட்டதுக்கு,
சின்னப்பசங்களெல்லாம் புதுசா புதுசா பண்றாங்க. நானும்
புதுசா பண்ண வேணாமான்னார். என்னடா இது கேடுகெட்ட
விஷயமா இருக்கேன்னு சொல்லிட்டு நான் அந்த
இடத்துலேர்ந்து நகர்ந்துட்டேன்."

"தஞ்சாவூர் பெயிண்டிங் நல்லா வந்துதா."

"எனக்கு நல்லா வந்தது. ஏன்னா அதுல டிராயிங் கம்மி.
சித்திரவேலைகள் அதிகம். வெட்டி ஒட்டறது. பட்டில டிராயிங்
போடறதுங்கறா மாதிரி கை வேலைகள் அதிகம். ஆனா,
சுவாரசியமா இருக்கும். எனக்கு கத்துக் கொடுத்தாரே ஒரு
வாத்தியார் அவரை விடவும் நான் போடற முகம்
நல்லாயிருந்தது.

எங்க வாத்தியார் பெரிய மனுஷன். ரொம்ப நல்லா
போடறடா. இனிமே நான் பண்ற தஞ்சாவூர் சித்திரங்களுக்கும்
நீயே முகம் வரைஞ்சுடு அப்படின்னாரு. படம் வரையறதுக்கு
இவன் வீட்டுக்கு போங்கன்னு என் வீட்டு அட்ரஸ் கொடுத்தார்.
மொத்தமா கை, கால் எல்லாம் வரைஞ்சுட்டு நகைகளெல்லாம்
போட்டுட்டு முகம் வரைய மட்டும் எங்கிட்ட கொண்டு வரு

வாங்க. நான் முதல்ல வாத்தியார் சொன்னாரேன்னு காசே
வாங்கிக்கலை. இப்போவும் வாத்தியார் கூப்டு முட்டாளா
இருக்கியே, உனக்கு காசு வரணும்தானே அனுப்பினேன். காசு
வேணாம்னு சொல்றியாமே. காசு கேட்டு வாங்கு
அப்படின்னாரு. ஒரு முகத்துக்கு நூறு ரூபாய்னு வாங்கினேன்.

ஒரு அம்மா எங்கிருந்தோ டிராயிங் கொண்டு வந்து
கொடுத்து முகம் வரைஞ்சு கொடுங்க, முகம் வரைஞ்சு
கொடுங்கன்னா. அப்புறம்தான் தெரிஞ்சுது. அந்தம்மா நான்
வரைஞ்சு கொடுத்த முகத்தை கொண்டு போய் கொடுத்து தான்
வரைஞ்சதா சொல்றாங்கன்னு. தெரிஞ்ச பிறகு நான் சரி
சொல்லிட்டு போகுதுன்னு விட்டேன். இன்னொரு அம்மா
வந்தாங்க. அந்தம்மாவுக்கும், இந்தம்மாவுக்கும் சண்டையாம்.
அந்தம்மா கண்டுபிடிச்சுடுச்சாம். இந்தம்மா வரையல நான்
தான் வரையறேன்னு நான் ரெண்டு பேரை கூட்டிகிட்டு
வரேன். நீங்க உண்மைய சொல்லணும்னுச்சு. ஏம்மா இந்த
சண்டையிலெல்லாம் என்னை இழுக்கறீங்க. ஏதாவது ரெண்டு
பேருக்கு டிராயிங் போடச் சொல்லுங்க நான் பண்றேன். நீங்க
சொல்லிக்கோங்க. நீங்கதான் டிராயிங் போட்டதா. எனக்கு
ஒண்ணும் ஆட்சேபணை இல்லைன்னேன். இப்படி நீங்க
இருக்கக்கூடாது. உண்மை எல்லாருக்கும் தெரிஞ்சாலும்
உலகத்துக்கு புரிஞ்சாகணும் அப்படின்னு வந்தாங்க."

"ஐயருங்களா."

"ஆமா, ரெண்டு பேரை கூட்டிகிட்டு வந்து ரெண்டு
படத்தை காண்பிச்சு இது யாரு வரைஞ்சா அப்படின்னு
கேட்டாங்க. நான்தாம்மா வரைஞ்சேன். போனமாசம் வரைஞ்
சேன். இவங்க கொண்டு வந்தாங்க அப்படின்னேன்... எவ்ளோ
காசு கொடுத்தாங்கன்னு கேட்டாங்க. ஒண்ணும் காசு கொடுக்
கலைம்மா, நான் ஃப்ரீயா வரைஞ்சு கொடுத்தேன். ஐயோ,
எங்கிட்ட ஐநூறு ரூபா வாங்கினாளே. எங்கிட்ட ஐநூறு ரூபா
வாங்கினாளேன்னு அந்தம்மா புலம்பினாங்க.

நான் ஒண்ணும் பேசாம இருந்தேன். அடுத்த பத்தாவது
நிமிஷம் அந்த வீட்டுக்குப் போய் கன்னாபின்னான்னு பேசி

கெட்ட வார்த்தைகள்ளாம் இறைச்சு, அதனால கோபப்பட்டு அந்தப் பொம்பளையோட புருஷன் மாடிலேர்ந்து இறங்கி வந்து, ஒரு பொம்பளை தலையில அடிக்க, அடிபட்ட பொம்பளை தன் வீட்டுக்காரர்கிட்ட சொல்ல, அந்தாள் நாலுபேரோட வந்து அவங்க வீட்டுக்குள்ள இருக்கற சாமானெல்லாம் உடைக்க, பெரிய போலீஸ் கேஸ் ஆயிப்போச்சு.

பேப்பர்ல எல்லாம் வந்தது. போலீஸ்காரன் விடுவானா. நேரா வந்து என்னை கூட்டிகிட்டு போயிட்டான் ஒரு ஹெட் கான்ஸ்டபிள் வந்து நீங்கதான் ஓவியம் வரையறவரா. வாங்க அப்படின்னாங்க. எங்கய்யா வரதுன்னேன். இந்த போலீஸ் ஸ்டேஷனுக்கு வரணும்னான் எங்கிட்ட வண்டி ஒண்ணும் இல்லையா. நான் எப்படிய்யா வருவேன்னு சொன்னேன். சைக்கிள்ல போகலாம் வாங்கோன்னு கேரியர்ல என்னை உட்காரவச்சு கூட்டிகிட்டு போனார். எங்க தெருவே அதை வேடிக்கை பார்த்தது. என்னமோ போலீஸ் வந்து கூட்டிகிட்டு போகுது கனகசபாபதி என்னா பண்ணானோ, ஏது பண்ணானோன்னு எங்கம்மா அப்படியே திகைச்சுப்போய் உட்கார்ந்து கிட்டிருந்தாங்க.

நான் போய் போலீஸ் ஸ்டேஷன்ல என்னா நடந்ததோ அதைச் சொன்னேன். எவ்ளோ வேகமா சண்டை போட்டாங்களோ அவ்ளோ வேகமா ராசியாயிட்டாங்க. ஆமாம் பண்ணது தப்புதான் அப்படின்னு எங்கிட்ட டிராயிங் கேட்டு போன பொம்பளை ஒத்துகிச்சு. ஆமா, நான் உங்கிட்ட வந்து கெட்டவார்த்தை சொன்னது தப்புதான் அப்படின்னு இந்தம்மா ஒத்துகிச்சு. மேலேயிருந்து வந்து கீழ உன்னை அடிச்சது தப்புதான்னு அந்தப் புருஷன் ஒத்துகிட்டாரு. வீட்டுக்குள்ள புகுந்து சாமான் உடைச்சது தப்புதான்னு இந்தப் புருஷன் ஒத்துகிட்டாரு.

நான் போலீஸ் ஸ்டேஷன்ல பேந்தப் பேந்த முழிச்சுகிட்டு நிக்கறேன். எல்லாம் உங்களால வர வினை அப்படின்னாரு இன்ஸ்பெக்டர். நான் என்னாங்க பண்ணேன். நான்தான் டிராயிங் போட்டேன்னு நாலு பேருக்கு சொல்றதை விட்டுட்டு

ஃப்ரீயா ஏன் டிராயிங் போட்டுக் கொடுத்தீங்க அப்படின்னாரு. நான் பதில் பேசாம நின்னுகிட்டிருந்தேன்.

எல்லாரையும் அனுப்பிட்டு எனக்கு காபி வாங்கிக் கொடுத்தாரு. எனக்கு ஒரு உதவி செய்யணுமே அப்படின்னாரு. என்னாங்கன்னு கேட்டேன்.

எங்கம்மாவோட பழைய போட்டோ இருக்கு. அது தெளிவா இல்லை. அதை என்லார்ஜ் பண்ணாக்க சுமாராத்தான் வரும் டல்லாத்தான் இருக்கும்னாங்க. டல்லா இல்லாத தீர்க்கமா எங்கம்மா முகத்தை நீங்க டிராயிங் போட்டு கொடுக்க முயுமான்னு கேட்டாரு. நான் போர்ட்ரெய்ட் வரைஞ்சது இல்லீங்கன்னு சொன்னேன். உங்களைப் பார்த்தா நல்லபடியா வரும்னு தோணுது. ஏன்னா, எங்கம்மா சத்தியவதி. நீ சத்தியம் சொல்றவன். அதனாலதான் உன் கைக்கு எங்கம்மா சிக்குவா அப்படின்னாரு. நிஜமா சொல்றேன் அது நான் போட்ட டிராயிங்கே இல்லை. அவங்கம்மா தன்னைத்தானே போட்ட டிராயிங். போர்ட்ரெய்ட் அவ்வளவு அழகா வந்தது. அதுவும் நான் இதுவரைக்கும் வாட்டர் கலர்தான் பண்ணியிருக்கேன். சும்மா பண்ணி பார்க்கலாமேன்னுதான் ஆயில் கலர் வாங்கினேன். அந்த முரட்டு மீசை இன்ஸ்பெக்டர் ஆய்... ஊய்னு கத்தறவர். அந்த போர்ட்ரெய்ட் பார்த்துட்டு மூஞ்சியில அடிச்சுகிட்டு அழுதான். எங்கம்மா பயந்துட்டாங்க. எல்லாரும் இன்ஸ்பெக்டர் அழுததை பார்த்தாங்க. கூட வந்த ஏட்டு எல்லாரையும் வெளிய போங்கன்னு துரத்தினான்.

இன்ஸ்பெக்டருக்கு முதுகு தடவி கொடுத்தான். எங்கம்மா காபி போட்டு கொடுத்தாங்க. நான் சொல்லலை உன்கிட்ட சத்தியம் இருக்கு. சத்தியவதி எங்கம்மா. உன் கைக்கு சிக்கும்னு சொல்லலை. சிக்கிட்டாடா. எங்கிட்டேயிருந்து டபாய்ச்சாடா. உங்கிட்ட சிக்கிட்டாடா அப்படின்னு அழுதான். ஆயிரம் ரூபா கொடுத்தான். சீஸ் பண்ண வண்டி ஏலத்துல வரும் நம்ம ஸ்டேஷன்ல. நான் ஒரு டூ வீலர் வாங்கித்தரேன் எடுத்துக்கோங்கன்னு ரெண்டாம் மாசமே ஞாபகமா ஒரு ராஜ்தூத் மோட்டர் சைக்கிள் வாங்கிக் கொடுத்தான்.

அமைதியா இருந்தா உனக்குக் கிடைக்க வேண்டிய பாராட்டு நிச்சயம் கிடைக்கும். நான் எப்பவோ போட்ட டிராயிங்குக்கு ஒன்பது மாசம் கழிச்சு ஒரு ராஜ்தூத் கிடைச்சது. ஒன்பது மாசம் நான் சைலண்ட்டாதான் இருந்தேன். கிடைக்கும் அப்படின்னு நினைக்கக்கூட இல்லை."

"கடவுளே... கடவுளே..."

அவன் கால்களை வருடி சிவகாமி கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

"நான் ஓவியனுக்கு வாக்கப்பட்டேன்னு நினைச்சேன். இல்ல நான் ஒரு ஞானிக்கு வாக்கப்பட்டிருக்கேன். நான் என்னை மாத்திக்கணும். ஏதோ இன்ஸ்பெக்டர், டிராயிங் போடற பொம்பளையெல்லாம் மாத்தறியே என்னை மாத்தக்கூடாதா. நான் ரொம்ப பரபரப்பா இருக்கேன்ப்பா."

"இல்லைம்மா. சந்தோஷமா இருக்க."

"சந்தோஷத்துல வர படபடப்பு கோவத்துலயும் வந்திரு மில்ல."

"வந்துடும்."

"அப்போ சந்தோஷமா இருக்கறதையும் அளவா வச்சுக்கணு மில்லை."

"ஆமாம்."

"எப்படி வச்சுக்கறது."

"யாரைப் பார்த்தாலும் எடுத்தவுடனேயே பல்லு தெரிய சிரிக்காம இருக்கறது."

"என்ன. எடுத்தவுடனே சிரிக்காம இருக்கணுமா. ஏன்."

"அங்கேயே உன்னை அடக்கி அளவா வெளிய விடணும். ஈன்னு இளிச்சுகிட்டு போய் நிக்கக்கூடாது."

"நான் அப்படி நிக்கறேனா."

"நிறைய பேர் அப்படித்தான் நிக்கறாங்க."

"அதுல என்ன தப்பு."

"இந்த உலகம் அதாவது எதிர இருக்கற மனுஷாள் உன்னை அப்படியே எடுத்து அணைச்சுப்பாங்கற எண்ணத்துலதான் நீ சிரிக்கற. இல்ல, இந்த உலகம் யாரையும் எடுத்து அணைச்சுக் காது. கொண்டாடாது. முடிஞ்ச வரைக்கும் தள்ளத்தான் பார்க்கும். அது கொண்டாடுதோ, கொண்டாடலையோ நீ உள்ளுக்குள்ள போற போது கவனமா போனா நல்லதில்லையா. அது முள்ளுக்காடு. நீ கவனமா போனாலொழிய கீறல் விழாம இருக்கிறது சாத்தியமில்லை. அப்போ கீறல் விழாம இருக் கணும்னா ஒவ்வொரு அடியும் பார்த்து வைக்கணும்.

ஒருத்தரை பார்க்கறபோது ரொம்ப நிதானமா அமைதியா எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் சாதாரணமா இருக்கணும். சிரிக்கற போதே எதிர்பார்ப்பு அதிகமாயிடும் நல்லாயிருக்கியா, சௌக் கியமா அப்படின்னு கேட்டாங்கன்னு. அப்படி கேட்கறவனை ச்சீ... நாயன்னு சொல்லிடலாம். இல்ல, அப்படிக் கேட்காத என்ன எழவுக்கு இங்க வந்த அப்படின்னு பேசிடலாம். அதனால எல்லா இடத்துலயும் எதிர்பார்ப்பு இல்லாத ஒரு தட்டை மனப்பான்மை இருக்கறது நல்லது.

நம்ம கல்யாணத்துல உத்துபார்த்தீன்னா கண்டு பிடிச் சிருப்ப. எத்தினி பேர் கை குலுக்கினாலும். பல்லு காட்டாத நல்லாயிருக்கேன். நல்லாயிருக்கேன். நன்றி. வாங்க, வாங்க ரொம்ப சந்தோஷம் அப்படின்னு சொல்லிகிட்டிருந்தேன். ஆனா, நீ போட்டோ ஆல்பம் எடுத்துப்பாரு. உன் எல்லாப் பல்லும் தெரியுது. அதுக்கு என்ன அர்த்தம்னா நீ சந்தோஷமா குழந்தை மாதிரி இருக்கேன்னு அர்த்தம். குழந்தையா இருக்கக் கூடாதுடா. முத்தி முதிர்ந்து இருக்கணும். குழந்தையா இருந்தா மாத்திடுவாங்க. அவன் ஏமாத்தறான்னு நமக்கு தெரிஞ்சுடுச் சின்னா அதுக்கேத்தபடி நாம நடந்துக்க முடியும். தெரியாத போதுதான் அலறுவோம் நான் நினைக்கவேயில்லை. இவன் ஏமாத்துவான்னு அப்படின்னு கத்துவோம். அதனால சிரிக்காம மத்தவங்ககிட்ட பழகறது நல்லது. என்ன பேசணும், என்ன கேட்கணும்னு ஆழ்ந்து சிந்திச்சு வாங்கிக்கறது. சரியா ரியாக்ட் பண்றது. முடிஞ்ச வரைக்கும் தனியா இருக்கறது. அப்போ

என்ன ஆகும். ஏமாத்தமில்லாம இருக்கும். ஏமாத்தமில்லாம இருந்தா கோபம், ஆத்திரம். படபடப்பு இல்லாம இருக்கும். கோபம், ஆத்திரம். படபடப்பு இல்லாம இருந்தா நல்லா புரிஞ்சுக்க முடியும். இன்னும் நல்லா புரிஞ்சுக்கும்போது, இன்னும் நல்லபடியா வாழ்க்கை அமையும்.

இப்படி தனிமையா இருக்கறதுக்கு எது உதவி செய்யும்.

எனக்கு இந்த டிராயிங் உதவி செய்யுது. ஆறு மணிக்கு வீட்டுக்கு வந்தேன்னா, முகம் கழுவிகிட்டு அம்மா சின்னதா டிபன் தருவாங்க. ரெண்டு வடை ஒரு காபி, ரெண்டு போண்டா ஒரு காபி, ஏதோ கொஞ்சம் குழம்பு சோறு காபி சாப்டுட்டு நான் டிராயிங்குக்கு உட்கார்ந்துடுவேன்.

காலையில விட்ட வேலையை செய்ய ஆரம்பிப்பேன். ஒரு வெங்கடாஜலபதி படத்தை செய்யறதுக்கு பத்து நாள் ஆகும். ஒரு வெண்ணைத்தாழி, கிருஷ்ணன் செய்யறதுக்கு எட்டு நாள் ஆகும். லட்சுமி, சரஸ்வதி, பிள்ளையார் செய்யறதுக்கு பதினஞ்சு நாள் ஆகும்.

இப்படி ஒண்ணுமாத்தி ஒண்ணு செய்துகிட்டே இருப்பேன். செய்ததை அழகா மரச்சட்டம் போட்டு தங்கக்கலர் கொடுத்து கண்ணாடி சட்டம் போட்டு மாட்டிடுவேன்.

முன்னூறு ரூபா செலவழிச்சது ஆயிரம் ரூபாய் கொடுக்கும். ஆயிரத்து நானூறு ரூபாக்கூட அம்மா வித்திருக்காங்க. இந்த விக்கற வேலையை நான் பண்றதேயில்லை. அம்மாதான் பண்ணுவாங்க. சில சமயம் ஆர்ட்கேலரிலேர்ந்து வந்து மூணுபடம், நாலுபடம் சொல்லி வாங்கிட்டுப் போவான். முன்னாடியே காசு கொடுத்துடுவான். அமைதிக்கு அமைதி, காசுக்குக் காசு. பொழுது போகலை அப்படின்னு நான் சுத்தறதே இல்லை. டைம் இல்லாம இருக்கறதுக்கு ரயில்வே உத்தி யோகம் அங்க ரெண்டு நல்ல ஸ்நேகிதர்கள். அங்க உண்மை யான வேலை. நல்ல அப்பா, அம்மா அவங்க சம்பாதிச்ச வீடு. எனக்கு கோவத்துலேர்ந்து விடுதலை கிடைச்சது. காமத்து லேர்ந்தும் விடுதலை கிடைக்கும். கோபமும், காமமும் பக்கத்துல பக்கத்துல இருக்கு. ரெண்டும் ஒரே விதமான

ராட்சஸர்கள். காமம்கறதுகூட ஒருவகை கோபம். ஒருவகை வயலன்ஸ் ஒருவகை மிருகத்தனம். கோபத்தை ஒழிச்சோம்னா, காமத்தையும் ஒழிச்சுடலாம்."

"ஐய்யய்யோ உங்களுக்கு சுத்தமா அது இல்லையா."

"அதெப்படி இல்லாம இருக்கும். கோபமும் கொஞ்சம் உண்டு. காமமும் கொஞ்சம் உண்டு. என்ன, கண்ட்ரோல்ல இருக்கும். சுத்தி வேலிபோட்டு கூண்டுக்குள்ள வச்சிருந்தேன். வீட்ல ஏதாவது சரியா வைக்கலைன்னா எப்போவேணா மிருகம் மூஞ்சியில அடிக்கும்.

ஒரு அம்மா வந்தாங்க மலையாளி. அவங்க ட்ரெஸ் பண்றதுகூட ரொம்ப நேர்த்தி. எங்கிட்டேயிருந்து ஆர்ட் வாங்கறானே அவனுக்கு போட்டியா கடை ஆரம்பிச்சாங்க. இங்க ஆர்ட்கேலரி வச்சிருக்கறவன் வட இந்தியாவுல இருக்கற வன். அவன் ஒரு குஜராத்தி. இந்தம்மா மலையாளி. ஒரு காரைக்கால் முஸ்லீமுக்கு ரெண்டாந்தாரமா வாழ்க்கைப் பட்டிருந்தாங்க. அந்த முஸ்லீம் வீட்டுக்கு எப்போவாவது வந்துட்டுப் போவாரு. நிறைய காசு கொடுப்பாரு போலிருக்கு. அதை என்ன பண்றதுன்னு தெரியாத இந்தம்மா ஆர்ட் கேலரி ஆரம்பிச்சுது.

அப்போதான் சொஸைட்டில பெரிய மனுஷாளோட பழக முடியும்னு நினைச்சு மௌண்ட் ரோடுல முக்கியமான இடத்துல பிரமாதமா கடை போட்டுது. அந்தம்மா வந்து பதினைஞ்சு பதினாறு படம் கொடுன்னு கேட்டுச்சு. என்னால அவ்ளோ எல்லாம் செய்ய முடியாது. அவ்ளோ கொடுத்தால் தரமா இருக்காது அப்படின்னேன். ஒண்ணு பண்ணு என்னோட இடத்துல ஒரு பத்துநாள் வேலை செய். நீ வேலை செய்தா படம் நல்லா விக்கும் அப்படின்னாங்க.

இல்லைம்மா அப்படியும் பண்ண முடியாதுன்னு சொன்னேன். அந்தம்மா என்ன செய்துச்சோ என் பேர் சொல்லி இவர் படம்னு வேற யாரோ பண்ண படத்தை வித்துது. அந்த குஜராத்திக்காரன் இதை கண்டு பிடிச்சுட்டு வந்து சொன்னான். நான் என்னய்யா பண்ண முடியும் அவங்க சொன்ன பொய்க்கு.

சொல்லிகிட்டு போகட்டும்னு சொன்னேன். வந்து கேளுன்னான். வந்து கேட்பேன். அந்தம்மா நான் அப்படி சொல்லலைன்னு சொல்லும். என்ன பண்றது அப்படின்னேன்.

அந்த குஜராத்திக்காரன் எங்கிட்ட வந்து பேசறான்றத. அந்தக் குஜராத்திகிட்ட வேலை செய்யற ஒரு ஆளு அந்தம்மாகிட்ட போட்டுக் கொடுத்துட்டான்.

அந்தம்மாவுக்கு என்னை மடக்கியே ஆகணும். என்ன பண்றது. இங்க வந்து நின்னு, இப்படி நின்னு. அப்படி நின்னு எல்லாம் பேசிச்சு. கோல்ட் ஃபாயில் வாங்கத் தெரியலை வாங்கன்னுச்சு. நானும் சரின்னு அதுக்கூட கார்ல போனேன்.

அதுதான் கார் ஓட்டுச்சு. போய் கோல்டு ஃபாயில் வாங்கினோம். ரொம்ப பசிக்குது. வீட்டுக்குப் போய் சாப்டுட்டு போலாம்ன்னுச்சு. வேணாங்க நான் வீட்டுக்கு கிளம்பிடறேன். என்னை இறக்கி விட்டுடுங்க. நான் ஆட்டோல போயிடறேன்னு சொன்னேன். இல்ல, இல்ல என் வீட்டை நீங்க வந்து பார்க்கணும். பல நல்ல பெயிண்ட்டிங்க்ஸ் வச்சிருக்கேன் அப்படின்னாங்க. பெயிண்ட்டிங் பார்க்கற ஆவல்ல அவங்களோட போனேன். வீட்டுக்கு போனா சரியா நடந்துக்கலை.

சின்னப்பையனா இருக்கியே பொம்பளைய அனுபவிச்சிருக்கியா வா. என்னை அனுபவின்னு சொல்லிச்சு. நான் ரொம்ப பயந்துட்டேன். நடுங்கினேன். ஏன் சொல்லு."

"தெரியலையே."

"அந்தம்மாவை ரெண்டு மூணு தடவை நான் தப்பான கோணத்துல பார்த்து, அனுபவிச்சா நல்லாயிருக்குமேன்னு நினைச்சேன். அப்போ, எதிர வந்து கேட்கறபோது நான் ரொம்ப பெரிய அவஸ்தைப்பட்டேன். கிட்டதட்ட மேல்துணியை நெகிழ்த்திவிட்டுட்டு வா படுக்கைக்குன்னு கண்ணு சிமிட்டி, நாக்கை நீட்டி கூப்பிடறபோது ரொம்ப சிரமமா இருந்தது.

அவங்க வீட்டு பூஜை ரூமுக்குள்ள ஓடிப்போய் அங்கேயிருந்து விபூதியை எடுத்து நெத்தியில பூசிகிட்டு ரெண்டு கைய எடுத்து தலைக்குமேல வச்சுகிட்டு சிவாயநம

ஓம்... சிவாய நம ஓம்'னு கத்தினேன். அந்தம்மா பயந்துடுச்சு. நான் ஒண்ணும் கேட்கலை நீ போயிடுன்னுச்சு. நான் அப்படியே தலையெல்லாம் விபூதியா, மூஞ்சியெல்லாம் விபூதியா வீட்டுக்கு வந்தேன். ரொம்ப நேரம் அழுதேன்.

உன் மூஞ்சி நல்லாயில்லையேன்னு சொல்லிட்டு எங்கம்மா தொடர்ந்து கேட்டாங்க. நான் இந்த மாதிரி ஆயிடுச்சுன்னு அம்மாகிட்ட சொன்னேன். நீ கெட்டிக்காரனா இருந்தா போதா துடா, உன்னை சுத்தி ஒரு சூட்சுமமா ஒரு வேலி போட்டுக் கணும். அது ரொம்ப முக்கியம் அப்படின்னாங்க. என்னம்மா பண்றதுன்னேன். எங்கம்மா அவங்க குருநாதர்கிட்ட கூட்டி கிட்டு போனாங்க.

அவர் ஒரு ஐயரு. அவர் மொத்தமும் கேட்டுட்டு சிரிச்சாரு. விபூதியை நெத்தியில பூசிக்கணும். தலையில கொட்டிக் கணும்னு எப்போ தோணிச்சோ. அப்பவே நீ ஜெயிச்சுட்ட... விபூதிக்கு எதிர்த்து எவளும் ஒண்ணும் பண்ண முடியாது. இருக்கட்டும் நான் உனக்கு மந்திரஜபம் சொல்லித்தரேன்னு ரெண்டு மூணு மந்திர ஜபம் சொல்லித் தந்தாங்க. அப்புறம் யாருமே தப்பா எங்கிட்ட வந்ததே இல்லை."

"இத்தனை விஷயம் நடந்திருக்கு. ஆனா, கோபம் வராத இருக்கும்னு சொல்றீங்க."

சிவகாமி அவனைக் கூர்ந்து பார்த்துக் கேட்டாள்.

"கேலியா கேட்கறியா... கத்துக்கறதுக்கு கேட்கறியா சிவகாமி."

"என்ன கேலி இதுல. அதுவும் உங்களைப்போய், தெரிஞ்சுக்கறதுக்கு கேட்கறேன்னு வச்சுக்கோங்களேன்."

"ஏன் கத்துக்கமாட்டியா."

"எனக்கு இது வரும்னு தோணலை."

"ஏன் அப்படி பேசற சிவகாமி"

"நானெல்லாம் வேற மாதிரி வளர்ந்தேன். மூணு முழம் மல்லிப்பூ வாங்கி ஒன்றரை முழம் அவங்களுக்கு, ஒன்றரை முழம் எனக்குன்னு, ஏன் உனக்கு ஒன்றரை முழம், நீ ஒரு முழம்

வச்சிக்கோயேன். எனக்கு ரெண்டு முழமா நறுக்கிக்கொடேன். உன்னதுவிட என் பூ கொஞ்சம்கூட இருக்கணும்னு கேட்டேன். அம்மா சரின்னுவாங்க. அடுத்த தடவை பூ கொடுக்கறபோது அம்மா எனக்கு கூட பூ கொடுப்பாங்கன்னா, இல்லை அதே பேர்பாதியாத்தான் கட் பண்ணுவாங்க. நான் கூடவச்சு கட் பண்ணுங்கன்னு கத்துவேன்.

எனக்கும், அம்மாவுக்கும் புடவையில் சண்டை வரும். என்னைவிட அழகா ஒரு பொண்ணு போன ஐய்யோடி இவ்ளோ அழகா இருக்காளே அப்படின்னு ஒரு பொசபொசப்பு, என்னா சொல்றது ஒரு ஆத்திரம் வரத்தான செய்யும். ஒரு பொறாமை இருக்கத்தான் செய்யும். அவ ஒரு ஆம்பளையோட பேசிப்பேசி சிரிச்சுகிட்டு போறான்னு வச்சுக்கோங்க. அது யாரு, புருஷனா. இல்ல வேற யாராவதா அப்படின்னு மனசு விதம்விதமா கேள்வி கேட்கும். அதை எப்படியாவது தெரிஞ்சுக்கணும்னு பரபரக்கும். அது புருஷனா இருந்தா பொறாமைப்படும். வேற யாரோ ஆம்பளைன்னா இன்னும் அதிகமா பொறாமைப்படும். அவ யாரோ, நாம யாரோ, அவ துக்கம் என்னவோ, சூழ்நிலை என்னவோ, அவ பலம் என்னவோ, பலவீனம் என்னவோ, நமக்கெதுக்கு, அப்படின்னு மூஞ்சி திரும்பவே திரும்பாது. நான் அப்படி பார்க்கறேன். என்னையும் பலபேர் அப்படிப் பார்க்கறத பார்க்கறேன். இந்த மாதிரி குணத்தையெல்லாம் மாத்த முடியும்னே தெரியலை."

"இது உடனே நடக்காது சிவகாமி. மெல்ல மெல்ல தாண்டும். கோபங்கற இடத்தை ஓரளவு ஜெயிக்கறதுக்கு எனக்கு ஆறு வருஷம் தேவைப்பட்டது. அகமது உசேன்கிட்டேயிருந்து ஆரம்பிச்சேன். அவன் 'ணங்...ணங்...' குனு அறுவது எழுவது அடிவாங்கி துடிதுடிச்சு கிடக்கறபோது என் மனசுக்குள்ள கேள்வி வந்தது.

ஏன் இந்த சாவுன்னு எல்லா இடங்கள்லேயும், எல்லா நேரமும் கேள்வி கேட்டு, கேள்வி கேட்டு ஒரு அளவு பக்குவத்துக்கு வந்திருக்கேன். முழுசா ஜெயிச்சுட்டேன்னு சொல்ல முடியாது.

சாயிபாபா கோவிலுக்கு போனேன். பின்னாடியே விரலால நிமிண்டி நிமிண்டி ஒரு பத்து வயசு பையன் காசு கேட்கறான். நிஜமாவே உள்ளேயிருந்து கோபம் பொங்கிச்சு, இப்படித் தொடாதேன்னு. ஆனால், அவன் என்னா பண்ணுவான். அவனுக்கு சொல்லி கொடுத்திருப்பாங்க. அப்படிப் பண்ணா தான் துட்டு கொடுப்பாங்கன்னு. நான் மிரள்றத பார்த்தவுடனே அவன் திருப்பித் திருப்பி என்னையே சுத்திகிட்டிருந்தான். வேற யார்கிட்டயும் காசு கேட்காம, அங்க இருந்த அத்தனை நேரமும் என் பின்னாடியே காசு வாங்கறதே குறிக்கோளா வெறியா இருந்தான். நான் ஆரம்பத்துலயே அவன் அப்படித் தான் பண்ணுவான். இது உனக்கு வச்ச டெஸ்ட். நீ கோவப் படறியான்னு பாரேன். அவனை விடு. அப்படின்னு அவனை தொந்தரவு பண்ண விட்டுட்டேன்.

இங்க கூட பிச்சை எடுக்கற பெரியவங்க யாராவது அவனுக்கு இப்படித்தான் பிச்சை எடுக்கணும்னு கட்டளை போட்டிருக்கலாம். அப்படி இவன் பிச்சை எடுக்காட்டி அவனை அடிக்கலாம். துன்புறுத்தலாம். அவன் சாப்பாட்டை பிடுங்கிக்க லாம். அதனால என்னை அவன் தொந்தரவு பண்றான். நான் கோவப்பட்டா என்ன பண்ண முடியும். அடிக்கலாம். அடிச்சா என்ன ஆகும். அவன் இன்னும் பெருசா அழுவான். கத்துவான். கீழ விழுந்து புரளுவான். அப்போ பக்கத்துல இருக்கற ஆள் என்ன சொல்லுவான். ஏன் ஸார் ஒரு பிச்சைக்காரனை அடிக்கறீங்க அப்படின்னுவான். அவரை அவன் தொந்தரவு பண்ணாலும் அவர் அதேதான் பண்ணுவாரு. ஆனால் நான் அடிச்சிட்டேன் இல்ல. அதனால அவரு இரக்கப்படறவரா மாறிடுவாரு. ரொம்ப உத்தமரா, மகாத்மா காந்தியா தன்னை காண்பிச்சுக்கறதுக்கு ஆசைப்படுவாரு. அச்சச்சோ என்ன கொடுமை இது அப்படின்னு என்னை ராட்சசனா பார்ப்பாரு. ஆக, என் கோபம் அவர் மேலயும் திரும்பும்.

அவரை அடிக்கறபோது இன்னும் ரெண்டு பேர் வருவான். இன்னும் பலபேரிடம் தொடரும். ஆக முளையிலேயே கிள்ளி விட்டுடணும். கோவத்துலேர்ந்து தப்பிச்சேன். இதை நான்

தாண்ட கத்துகிட்டேன். கோபத்தை தாண்டறபோது, அதே மாதிரி வேகமுள்ள காமத்தையும் தாண்டமுடியும். ஒவ்வொரு கோவமும் கிளறும்போது, உத்துப்பார்த்தா கோவத்தை ஒரு ஸ்டேஜ்ல நிறுத்திடலாம். கோவத்தை நிறுத்தறதுபோல காமத்தையும் ஒரு கட்டுப்பாட்டுல வைக்கலாம்.

ரோடுல பள்ளம் பள்ளமா தோண்டி வச்சுருப்பாங்க. சரியா மூடமாட்டாங்க. ஒரு மழையில அந்த மண்மேடு கரைஞ்சு போய் மறுபடியும் பெரிய பள்ளம் நிக்கும்.

ஸ்கூட்டர்ல போகும்போது 'டம்மு டும்மு'னு விழுந்து இடதும் வலதும் அலைஞ்சு விழுந்துடுவோமோ அப்படிங்கற ஒரு உயிர் பயம் ஏற்படும். அந்த உயிர் பயம் ஏற்படறபோது ஒரு கோவமும் வரும்.

எந்த சண்டாளன் இந்தக் குழி தோண்டினான். இப்படி சரியா மூடாத போறான் அப்படின்னு ஒரு ஆத்திரம் வரும். எவன் ஏமாத்தினானோ, எவன் திருடினானோ, மக்கள் பணத்தை இப்படி கொள்ளை அடிக்கிறானே, இவன் வீடு நல்லா யிருக்குமா. இவன் மனைவி நல்லாயிருப்பாளா, இவங்க குழந்தைங்க ஆரோக்கியமா வளருமா அது திருடாதா, அது திரிசமம் பண்ணாதா, இவன் பொண்டாட்டி ஏமாத்திட்டு வேற பக்கம் போகமாட்டாளா. அந்த வேதனைகள் இவனை தவிக்க வைக்காதா. அப்படின்னு ஒரு கோபம் வரும்.

ஆனா நான் இதையும் ரொம்ப ஆழமா யோசனை பண்ணிப் பார்த்தேன். நமக்கு என்ன யோக்கியதையோ அந்த அரசாங்கம் கிடைச்சுருக்கு. அந்த அரசாங்கத்துக்கு என்ன யோக்கியதையோ அதுக்குண்டான அதிகாரிகள் கிடைச்சுருக்காங்க. அந்த அதிகாரிகளுக்கு என்ன யோக்கியதையோ அதுதான் வேலையா நடக்குது. ஆக இந்த மாதிரி தெருதான் நமக்கு யோக்கியதை. இது அரசாங்கத்தப்பு இல்லை. நம்ம தப்பு. ஜனங்க தப்பு. என் தப்பு.

யாரைக் கொண்டாடணும்னு தெரியலை. யாருக்கு கொடி பிடிக்கணும்னு தெரியலை. ஸோ, என் யோக்கியதைக்கு இப்படித்தான் கிடைக்கும்.

ஸ்கூட்டர் முட்டி மோதி அலைகழிஞ்சுதான் போகும். நூறு ரூபா காசு கொடுத்தா, மூக்குத்தி கொடுத்தா உனக்கே ஓட்டு போடறேன்ற ஜனத்துக்கு இந்த ரோடே அதிகம். நூத்தம்பது ரூபா மூக்குத்திக்கு தன்னுடைய வாக்குரிமையை அடமானம் வைக்கற பொம்பளைக்கு குழாய்ல எப்படி தண்ணி வரும். குடத்தை எடுத்துகிட்டு தெருத்தெருவா அலையத்தான் செய்வாள். கண்ணு உனக்கு தூக்கம் வருதா. நான் போரடிக்கிறனா."

"இல்லைப்பா... இந்த மாதிரி நிறைய பேசுங்க. எனக்கு இப்படி பேசிக்கிட்டே இருக்கணும்னுதான் தோணுது. ஆம்படையான் பொண்டாட்டி மனசுவிட்டுப் பேசாத, நீ படுக்கறதுக்கு தாண்டின்னு ஆம்படையான் நினைக்கறதும் இவன் படுக்க வரபோது இவனுக்காக கொஞ்சம் ஆடி சந்தோஷப்படுத்தி, இவங்கிட்டேயிருந்து காசு வாங்கணும். பொருள் வாங்கணும்னு நினைக்கறதும் அசிங்கம். எனக்கு தூக்கமும் வரலை. உங்களோட கட்டிப்புரளணும்னும் தோணலை. இன்னும் ஒரு பத்து நிமிஷம் பேசலாமேன்னு தோணுது."

அவனுடைய அலுவலக வேலையைப் பற்றி விசாரித்தாள். அலுவலக நண்பர்கள் பற்றி கேள்வி கேட்டாள். தன்னுடைய நண்பர்கள் பற்றி சொன்னாள். தன் தந்தையும் தாயும் ஒருவருக்கொருவர் எவ்வளவு பிரியமாக இருப்பார்கள் என்பதை விவரித்தாள்.

சிவகாமியும், கனகசபாபதியும் ஓயாது பேசினார்கள். வெறுமே தொட்டுக்கொண்டு படுத்தார்கள். முத்தமிட்டார்கள்.

"விட்ருங்கப்பா... விட்ருங்கப்பா ரொம்ப வலிக்குதுப்பா."

அவள் கத்த அவனுக்கு பயமும், பதட்டமும் ஏற்பட்டு, வேண்டவே வேண்டாம் என்று விலகினான். ஆனால், மனைவியின் மீது இன்னும் பிரியமாக இருந்தான்.

ஒன்பதே முக்காலுக்கு அலுவலகம் போக வேண்டும். ஒன்பதே காலுக்கு புருஷன் மோட்டார் சைக்கிளில் அலுவலகம் நோக்கிக் கிளம்ப, அந்தப் பிரிவே பெரிய துக்கமாயிற்று.

இரண்டு மணிக்கு புருஷனுக்கு போன் செய்து, அவன் சாப்பிட்டாகி விட்டதா என்று கேட்டு, எப்படி இருந்தது உணவு என்று குசலம் விசாரித்து, பிறகு அவள் போய் தட்டு எடுத்துப் போட்டுக்கொண்டு சாப்பிடுவாள்.

ஐந்தரை மணிக்கு முகம் கழுவி பொட்டிட்டு உடையை சரிசெய்து சிங்காரித்துக் கொண்டு புருஷனுக்காக வாசலில் காத்திருப்பாள். ஆறுமணிக்கு அவன் வந்ததும் டிபன் பாக்ஸ் வாங்கிக் கொண்டு உள்ளே ஓடிப்போய் அவனுக்கு சிற்றுண்டி எடுத்துவைப்பாள்.

"இன்னிக்கு என்ன விசேஷம் ஆபீஸ்ல..." என்று பேச ஆரம்பிப்பாள்.

ஏழு மணிக்கு சந்தன சோப் போட்டுக் கழுவிய முகமும், திருநீறும் பளபளக்க புருஷன் தஞ்சாவூர் சித்திர வேலைக்கு உட்காருகையில் இவளும் அருகில் உட்கார்ந்து கொள்வாள்.

முதன்முதல்ல நீ என்கூட இருக்க சிவகாமி. அதனால நான் பண்ற இந்த பெயிண்ட்டிங்கை ராமர் பட்டாபிஷேகமா போடப்போறேன். நாலுபேர் மட்டுமில்லாத ஒரு பெரிய கும்பலா போடலாம்னு இருக்கேன்.

கனகசபாபதி நாலடிக்கு ஆறடி வெள்ளை அட்டையை போர்டில் ஆணி அடித்துவிட்டு, ஓரம் வரைந்து உள்ளுக்குள் பென்சிலால் படம் வரையத் துவங்கினான். அமர்ந்திருக்கிற ராமர், அருகே நெருங்கி உட்கார்ந்திருக்கிற சீதை, இடப்பக்கம் லட்சுமணர், வலப்பக்கம் பரதன், இன்னொரு இடப்பக்கம் சத்ருக்கனன், கீழே ஹனுமார். அரசர்கள், முனிவர்கள், கந்தர்வர்கள், ஜடாயு, ஜாம்பவான், அங்கதன். இன்னொரு பக்கம் குகன், விபீஷணன். அவர்களுடைய மனிதர்கள். பிறகு கீழே பொது ஜனங்கள். அந்தப் பொது ஜனங்களின் சற்று வெளிப்பகுதியில் கனகசபாபதி, சிவகாமி, சிவகாமியின் அப்பா, அம்மா, கனகசபாபதியின் தாய், தந்தை இவர்கள் அனை வரையும் பழங்கால மனிதர்களாக்கி நிற்க வைத்தான்.

"ஒண்ணு, ரெண்டு, மூணு, நாலு, அஞ்சு, ஆறு ஏழு கோடுல எங்கம்மா முகம் கொண்டு வந்துட்டீங்களே எப்படி."

அவள் வியந்தாள்.

புருஷனுக்கருகே கட்டிக்கொண்டு நின்றாள்.

அவன் முகத்தை அவள் நெஞ்சில் உரசினாள்.

"மனசு நல்லாயிருந்தா சித்திரம் எளிதா வரும். பிசிறடிக்காத கோடு போடணும்னா ஒரு முனைப்பு வேணும். ஒரு முனைப்பு வேணும்னா அவன் வீடு ரொம்ப அமைதியா இருக்கணும் அல்லது வீட்டைப்பத்தி கிஞ்சித்தும் கவலையில்லாதவனா இருக்கணும். வெளியுலகம் பத்தி கவலைப்படறவனுக்கு டிராயிங் போட முடியாது."

மனிதர்கள் வரைந்துவிட்டு, கீழே எருது, பசு, யானை, கன்றுக்குட்டி, வெறும் குதிரை, தேரோடு கூடிய குதிரைகள், கொடி பதாகை, குடை என்று வரைந்தான்.

'இது வரைஞ்சு முடிக்கவே பதினொண்ணு ஆயிப்போச்சு. வாங்க சாப்டுட்டு தூங்கலாம்."

சோறு போட்டு அவன் தலையைத் தடவி தூங்க வைத்தாள். மெல்லியதாய் வாய் பிளந்து குழந்தை போல் தூங்கினான்.

எழுந்து வராண்டாவிற்குப்போய் விளக்கு பொருத்தி, அவள் ஆச்சரியமாக அவன் வரைந்த பென்சில் கோடுகளைப் பார்த்தாள். ஒவ்வொரு உருவமாகத்தடவி கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

'கடவுளே... கடவுளே இது ரொம்ப நல்ல பெயிண்டிங்கா வரணும். நல்ல இடத்துக்கு போய் இது உட்காரணும்' என்று வேண்டிக் கொண்டாள். இடுப்புப் புடவையைச் சொருகி நமஸ்கரித்தாள். திரும்ப வந்து தூங்குகின்ற புருஷனை ஆவலோடு பார்த்தாள். அவனைக் கட்டிக்கொண்டு, போர்வை யில் போர்த்திக் கொண்டாள். பல முறை கூடியதான நிறைவு அந்த அணைப்பில் அவளுக்கு ஏற்பட்டது. அவளும் தூங்கிப் போனாள்.

மாமியாரோடு சென்னையில் பல இடங்களுக்குச் சுற்றினாள். பிறந்த நாளுக்கு நகை வாங்கிக் கொண்டாள். மாமியார் பிறந்த நாளுக்கு பட்டுச் சேலை எடுத்துக் கொடுத்தாள். மாமனாரின் பிறந்தநாளின் போது எட்டு மணிக்கு சிலோன் ரேடியோவை தேடி வைத்துக் காத்திருந்தாள்.

'சென்னையிலிருந்து சிவகாமி கனகசபாபதி என்னும் நேயர் எழுதுகிறார்.

என் அப்பாவைப் போல என்னை ஆதரிக்கும் என் மாமனாருக்கு இன்று பிறந்தநாள் வாழ்த்துக்கள். நன்றி மறவா மருமகள் என்று சொல்லியிருக்கிறார்.'

மாமனாரை இப்படி அப்பாவைப்போல என்று கொண்டாடுவது மிக அரிதான விஷயம். அப்படிக் கொண்டாடுவதற்குண்டான தகுதிகளை உடைய சிற்றம்பலம் ஐயா அவர்களுக்கு... நாங்களும் பிறந்த நாள் வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கிறோம். ஐயா சிற்றம்பலம் அவர்கள் நீண்ட நெடுங் காலம் வாழ்ந்திருந்து... என்று பேசிக்கொண்டு போக வீட்டிலுள்ள அனைவரும் எழுந்து கைதட்டினார்கள்.

கனகசபாபதியின் அப்பா சிற்றம்பலம் திகைத்துப் போனார்.

"என்னாத்துக்கும்மா இதெல்லாம்." என்று மருமகளைப் பார்த்தார்.

"ஒரு மாசம் முன்னாடியே எழுதிப் போட்டுட்டேன் மாமா."

அவள் துள்ளலோடு பதில் சொன்னாள்.

"வேண்டா கண்ணு. நம்ம அன்பை நமக்குள்ளயே வச்சுப் போம். ரேடியோல சொல்லி முழங்குவானேன். அப்பா மாதிரி மாமனாரா. எவன் வீட்லடா இதுன்னு யாராவது மனசுல நினைச்சா, நமக்கு கொஞ்சம் லேசா இடிக்கும். கொண்டாடும்மா, என்னை, என் பொண்டாட்டிய எல்லாரையும் கொண்டாடு. வேணாம்னு சொல்லலை. எல்லாம் வீட்டுக்குள்ளயே வச்சுக்கலாம். வெளிய பேச வேண்டாம்டி கண்ணு." என்று சொல்ல, "மன்னிச்சுக்கோங்க மாமா." என்று சொல்லி மாமனாரின் காலில் விழுந்து வணங்கினாள்.

மருமகளை மனப்பூர்வமாய் ஆசிர்வதித்தார்.

"சீக்கிரம் புள்ள குழந்தை பெத்து எங்ககிட்ட கொடு. அதைவிட பெரிய பரிசு என்ன." குரல் தழுதழுக்கச் சொன்னார்.

"ஏங்க என்ன பண்றாங்கன்னே தெரியலையே. இது ஏழாவது மாசம். இப்போவும் மூணு நாள் உட்கார்ந்துட்டா." மாமியார் லேசான அலுப்போடு சொல்ல, அவள் திகைப்போடு புருஷனைப் பார்த்தாள்.

"என்னாடா அவ பார்க்கற பார்வையே நல்லாயில்லை. நீயும் பேந்தப் பேந்த முழிக்கற."

பார்வதியம்மாள் உரத்த குரலில் கேட்க, கனகசபாபதியின் அப்பா தடுத்தார்.

"இதை நீ பேசாத. அவங்கம்மா பேசட்டும்." என்று சொல்ல சாரதாம்பாளுக்கு டெலிபோன் மூலம் தகவல் சொல்லப் பட்டது.

சாரதாம்பாள் பதறியடித்து ஓடிவந்தாள். மகளை அழைத்துக் கொண்டு போய் பேச, "நான் ஒண்ணுமே பண்ணலையேம்மா. சந்தோஷமாத்தானே இருக்கோம்." என்று மகள் சொல்ல, மாமியாரும் அம்மாவும் தலையில் அடித்துக் கொண்டார்கள்.

"உங்க புள்ளைக்கு எல்லாம் தெரியும்னு நினைச்சேன். வெட்கமில்லாம இவளுக்கும் எல்லாத்தையும் சொல்லித்தான் கொடுத்திருக்கேன். புள்ள கொஞ்சம் முரட்டுத்தனமா இறங்கினாத்தானே நடக்கும். பொண்டாட்டி கத்தறாளேன்னு விட்டாக்க எப்படி அது." என்று எல்லோரும் அவனை நோக்கிப் பாய்ந்தார்கள்.

"சும்மாயிருங்க. எதுக்கு அவரைப்போய் கேலி பண்றீங்க."

சிவகாமி சீறினாள்.

"ஆபீஸ் போயிட்டு வராரு. வந்து டிராயிங் போடறாரா ஏகப்பட்ட வேலை இருக்கு. அவரை தொந்தரவு பண்ண வேண்டாம் தூங்கட்டும்னு விடறேன். நாங்க நிறைய பேசறோம். ஒருத்தர் மேல ஒருத்தர் பிரியமா இருக்கோம். இது என்னாத்துக்குன்னு நினைச்சேன். உங்களுக்கு குழந்தை

வேணுமா நாங்க அதுக்கும் தயாரா இருக்கோம். ஏங்க வாங்க நாம கும்பகோணம் போயிட்டு வரலாம்."

அவர்கள் மறுபடியும் சோழதேசத்தை சுற்ற கிளம்பினார்கள்.

"எப்படிடா போகப்போற."

"மோட்டார் சைக்கிள்ளயே."

"டேய் வேண்டாம்டா."

"சும்மாயிருப்பா. அதுதான் நல்லாயிருக்கும்."

"புடவை மாட்டிகிச்சின்னா."

"புடவையெல்லாம் அவ கட்டிகிட்டு வரமாட்டாப்பா. சுடிதார்ல வரப்போறா."

"அக்கம் பக்கத்துல ஏதாவது சொல்லுவாங்கடா."

"அதெல்லாம் ஒண்ணும் கிடையாது. அதுவும் நல்ல ட்ரெஸ் தான்."

அவன் மனைவிக்கு மூன்று சுடிதார்கள் வாங்கிக் கொடுத்தான். மோட்டார் சைக்கிள் சரி செய்து கொண்டான்.

செங்கல்பட்டிலிருந்து இடம் இடமாய் பெயர்ந்து, பல கோவில்கள் பார்த்து, திண்டிவனத்தில் தங்கி, மறுநாள் சோழ தேசத்திற்குள் நுழைந்தார்கள். கோவில் சுற்றிப் பார்த்து குடந்தையில் வசதியான லாட்ஜில் தங்கினார்கள்.

"அம்மா இந்தப் புஸ்தகம் கொடுத்துவிட்டாங்க. வலி இருந்தா என்னெல்லாம் உபயோகப்படுத்தலாம் அப்படின்னு இந்தப் புஸ்தகத்துல இருக்கு பாருங்க."

அவள் ஒரு புஸ்தகம் கொடுக்க அவன் படித்தான்.

அவர்கள் இரவில் வெகுநேரம் பேசினார்கள். பேசுவதை நிறுத்திவிட்டு இணைந்தார்கள். விடியல்வரை அயர்ந்து தூங்கினார்கள். பகல்பொழுதிலும சந்தோஷமாக இருந்தார்கள்.

"எனக்கு புரிஞ்சுபோச்சு." அவள் குதித்தாள்.

"என்ன."

"சுத்தி ராமர், பெரியவர்கள் படம், தினம் அதை பார்த்து கிட்டிருந்தா நமக்கு என்னா தோணும். இப்படி ஏதோ ஒரு லாட்ஜ்ல வந்து தங்கினாத்தான் ஒரு மாதிரியா வருது." அவள் சொல்லிவிட்டு அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

அவர்கள் கர்ப்பரக்ஷாம்பிகைக்குப் போய் வணங்கினார்கள். அங்கு கொடுக்கப்பட்ட பிரசாதத்தை பயபக்தியோடு உண்டார்கள்.

'இவள் சூலுற்றால் நான் மறுபடி வருகிறேன். உன்னை படம் எழுதிக் கொண்டுபோய் அழகிய தஞ்சாவூர் சித்திரமாய் மாற்றுகிறேன். ஒரு புது திருமண தம்பதிக்கு உன் படத்தை பரிசாகக் கொடுக்கிறேன்." என்று வேண்டிக் கொண்டான்.

வெளியே வந்ததும் அவளுக்குச் சொன்னான்.

அவள் காதலோடும், கனிவோடும் புருஷனைப் பார்த்தாள்.

"நாம என்ன ஆடு தரமுடியுமா, கோழி தரமுடியுமா, இல்ல அரைகிலோ வெள்ளி தரமுடியுமா. சித்திரம் எழுதறவன் சித்திரம்தான் கொடுக்க முடியும். அதையும் வந்து அந்தக் கோயிலுக்கு கொடுக்காத யாராவது புதுசா கல்யாணம் ஆனவங்களுக்கு தரேன்னு சொல்லியிருக்கிங்களே இது ரொம்ப அழகு. எனக்கு நேத்து ராத்திரியே உள்ளுக்குள்ள ஏதோ ஆயிப்போச்சு. அம்பாளை பார்த்ததும் அவ ஒரு சிரிப்பு சிரிச்சா. அதுவும் எனக்கு சந்தோஷமாயிடுச்சு. நான் கர்ப்பமாயிடுவேன்னு நினைக்கிறேன்." அவளும் குரல் குழையச் சொன்னாள்.

அவள் சொன்னது போலவே சூலுற்றாள். டாக்டர்கள் உறுதி செய்தார்கள்.

"மூணுமாசம் ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும். நான் கூட்டிகிட்டு போய் கொண்டு வந்து விடறேன்."

சாரதாம்பாள் பணிவோடு கேட்க, "நல்லா கூட்டிகிட்டு போ. நான் அப்பப்போ வந்து பார்க்கறேன்."

பார்வதி அம்மாள் அனுப்பி வைத்தாள்.

அவன் பெரிய ராமர் பட்டாபிஷேகப் படத்தை மிக அழகாக உருவாக்கினான். சீதை மட்டும் பாக்கியிருந்த போது நிறுத்தி விட்டு, கர்ப்பரக்ஷாம்பிகை படத்தை வரையத் துவங்கினான். அதிகம் நகைகள் அணிவித்தான். மகர தோரணமும், யாளித் தூணும், முன்னால் மேருவும் வரைந்தான். அவளைச் சுற்றி நிறைய தங்கத் தாமரைகள் இருப்பதாய் வரைந்தான்.

"எதுக்குடா தங்கத்தாமரை" என்று பார்வதி கேட்க, ஒவ்வொரு தாமரையும் ஒவ்வொரு குழந்தை என்று பதிலளித்தான். தங்கரேக்கு ஒட்டி முடித்துவிட்டு புடவை மடிப்புகள் அழகாக வரைந்துவிட்டு கடைசியாய் முகம் வரைந்தான். மிகக் கவனத்தோடு கண்கள் எழுதினான்.

ரெண்டுநாள் காயவைத்து விட்டு மறுபடியும் புருவம் வரைந்தான். பிறகு உதடு எழுதினான். பொடிசாய் அமெரிக்கன் டைமண்டுகள் வாங்கிவந்து கழுத்தில் அட்டிகையும், மூக்குக்கு அருகே ஒரு பேசரியும் அணிவித்தான். முத்து ஹாரமும், பதக்கமும், ஒற்றைக்கல் அமெரிக்கன் டைமண்ட் நெக்லஸும் செய்து போட்டான். அவன் வரைந்த படத்தின் முன்பு அவனே கைகூப்பினான்.

தாயே... என் மனைவிக்கு வலியில்லாமல் பிரசவம் நீதான் பார்க்க வேண்டும். தாயும், சேயும் நல்லபடியாக நீதான் பிரித்துத் தர வேண்டும் என்று வேண்டினான்.

ஸ்வாதி நட்சத்திரத்தில் அவனுக்கு ஆண்குழந்தை பிறந்தது. பிள்ளை பெற்ற மூன்றாம் மாதம் அவள் கிளம்பி வீட்டிற்குள் வந்தாள்.

புருஷனை விட்டு பிரிந்திருக்க முடியவில்லை என்று காரணம் சொன்னாள்.

கர்ப்பரக்ஷாம்பிகை படம் சட்டமிட்டு வந்ததும் எல்லோரும் வீட்டில் பரவசப்பட்டார்கள்.

"நாமளே வச்சுக்கலாமாடா" என்று கேட்க, இல்லை என்று சொல்லி விட்டான்.

பார்வதியம்மாளின் தூரத்து உறவுக்காரர் ஒருவருக்கு திருமணம் நடக்க, அங்கு கொண்டு போய் இந்தப் படத்தை கொடுத்துவிட்டு வந்தான்.

"ஆயிரம் ரூபா மொய் எழுதுவீங்கன்னு நினைச்சேன். இப்படிப் படம் கொடுத்துட்டு போறீங்க. சரி, உங்க இஷ்டம்." என்று பெண்ணைப் பெற்றவர்கள் கண்கலங்க சட்டென்று சிற்றம்பலம் ஆயிரம் ரூபாய் எடுத்துக் கொடுத்தார்.

"அதுக்குத்தான் சொன்னேன். படம் கொடுக்காதடா. இந்த நாய்ங்களுக்கு அதும் மதிப்பு தெரியாதுன்னு. பார், கொண்டு போய் நீட்டினா அவ என்னா கேட்கறா. துட்டை கொடு முதல்ல, அப்புறம் படத்தை வச்சுக்கறேங்கறா. அந்தப் படத்தை வித்துடுவா."

"வித்துட்டு போகட்டும்மா. அது எங்க போய் சேரணுமோ அங்க போய் சேர்ந்துடும்."

சொன்னது போல் அந்தப்படம் வேறு யாருக்கோ விற்கப் பட்டு விட்டது. திருமணமாகி ஆறு வருடமாகியும் குழந்தை பாக்கியமில்லாத ஒரு பெண்மணி வாங்கினாள் என்றும், வாங்கும்படி அந்த படமே தூண்டியதும் என்றும் அவனுக்கு கதை சொன்னார்கள்.

"யார் வீட்ல அந்த படம் இருந்தாலும், அந்தப்படம் வச்சு பூஜை பண்றவங்களுக்கு நிச்சயம் குழந்தை பிறக்கும். ரொம்ப சுத்தமான மனசோட, நீ வா... நீ வான்னு கேட்டுகிட்டுதான் நான் வரைஞ்சேன்."

கனகசபாபதி சொல்ல, அவன் வீட்டில் எல்லோரும் அவனை மரியாதையோடு பார்த்தார்கள்.

"எல்லாப் படமுமே அப்படித்தாண்டா வரையணும். எப்போ பொம்பளை படம் போடறதில்ல, எப்போ வந்து சைன் போர்ட் ஆர்ட்டிஸ்ட்டா இல்ல, எப்போ நீ தஞ்சாவூர் பெயிண்ட்டிங்ல வரையறேன்னவுடனே இது பூஜைக்குண்டான விஷயம்னு ஆயிப்போச்சு. பூஜைக்குண்டான விஷயம்னவுடனே அதுல காசு முக்கியமில்லை. வருமானம் முக்கியமில்லை. போற

இடத்துல அதுக்கு பெரிய மரியாதை இருக்கணும். அதனால அந்த வீடு சுபிட்சமாகணும். இப்போ இன்னும் வரையறியே ராமர்படம், கிட்டத்தட்ட ஒரு வருஷமா... இதுக்கு ரொம்ப பெரிய மரியாதை கிடைக்கணும்."

வீட்டுக்குள் வந்த ஒரு தனவந்தனின் மனைவி அந்த ராமர் படத்தைப் பார்த்துவிட்டு திகைத்தாள்.

"எவ்ளோ பொறுமையா வேலை செய்திருக்கீங்க. இதுல இந்த அனுமார் டக்குனு எழுந்து நின்னுடுவார் போலிருக்கு. ஒத்தக்கால் மடிச்சு உட்கார்ந்திருக்கறது ரொம்ப வீரமா இருக்கு. ராமரை வேணும்னாலும் கிருஷ்ணர் மாதிரி குண்டா போட்டிருக்கீங்க. சௌராஷ்டிரா பெண்மணி மாதிரி சீதைக்கு டிரஸ் பண்ணியிருக்கீங்க.

இவர் காட்டுக்கு போய் வந்த ராமர் இல்ல. வீட்ல சுகமா, சொகுசா இருந்த ராமர். ஓவியம் தட்டை ஓவியமா இருந்தாலும், நீங்க தூண் வச்சதும், பின்னால ஸ்க்ரீன் போட்டதும் அதுக் கொரு ஆழத்தை கொடுத்துடுச்சு. லட்சுமணன் கூட்டத்தை பார்த்துகிட்டிருக்காரு. சத்ருக்கனன் லட்சுமணனையே பார்த்து கிட்டிருக்காரு. பரதர் இராமரையே பார்த்துகிட்டிருக்காரு. அனுமார் ராமருடைய காலையே பார்த்துகிட்டிருக்காரு. முகத்தை உருண்டையா வரைஞ்சீங்களே. அதுதான் ஆச்சரி யம்.

மூக்கு விடைப்பு, உதடு கனிவு, கண்கள்ல இருக்கற ஆழம், முகவாய்க்கட்டையினுடைய உறுதி. இதெல்லாமும் கொண்டு வர முடியுது. ஓவியம் தட்டை ஓவியமா இருந்தாலும் பின்னால தொங்கற ஸ்க்ரீன், அந்த மடிப்பு, தூண்களுடைய வரிசை இதைப்பார்க்கறபோது இதுக்கு ஒரு ஆழம் கிடைச்சுடுச்சு.

ஜனங்களை பார்க்கற லட்சுமணர், லட்சுமணரை பார்க்கற சத்ருக்கனன், ராமரையே பார்த்துண்டிருக்கற பரதன், ராமருடைய காலையே பார்த்துண்டிருக்கற ஹனுமார், துடுக்கா இருக்கற அங்கதன். கொஞ்சம் அசால்டா நிக்கற சுக்ரீவன், கொஞ்சம் தளர்ந்து நிற்கிற ஜாம்பவான். முன்னால மூக்கு இருந்தாலும் பின்னால பார்க்கற ஜடாயு. பணிவா நிக்கற குகன்.

எல்லார்க்கும் ஒரு கேரக்டர் இருக்கு. ராமர் நகைக்கும், சீதை நகைக்கும் அவ்ளோ வித்தியாசம் இருக்கு. அந்த நாலுபேருதும் ஒரு நகைமாதிரி, இன்னொரு நகை இல்லை. ஒவ்வொரு நகையும் வித்தியாசமா இருக்கு. ஒரு நகைக்கடைக்காரர் வாங்கிட்டு போனார்னா இது ரொம்ப நல்லாயிருக்கும்னு நினைக்கறேன். இதுல எந்த டிசைன் வேணும்னு இந்தப் படத்தை காண்பிச்சு கூட அவர் வியாபாரம் பண்ணலாம்."

அந்த தனவணிகரின் மனைவி வியந்து வியந்து சொல்ல, அவள் வாக்குப்படியே இதை ஒரு பெரிய நகைக்கடைக்காரர் வந்து பார்த்துவிட்டு, 'இந்த ஓவியம் எனக்கு வேணுமய்யா' என்று கேட்டார். புருஷனும், மனைவியும் தங்கரேக்கு விலை. உழைப்பு என்று கணக்கு செய்து மூவாயிரத்து ஐநூறு என்று வைத்தார்கள். இதற்கு மேல் வருவதெல்லாம் லாபம்தான் பேசிக் கொண்டார்கள்.

"எடுத்துகிட்டு போங்க. விக்கறதுக்குத்தான் வச்சுருக்கோம். எவ்ளோ தருவீங்க." என்று கேட்க, "நீங்கள் விலை சொல்லுங் கள்" என்று அவனை அவர்கள் கேட்க, "எனக்கு விலை சொல்லி பழக்கமில்ல. நான் ஒரு சந்தோஷத்துக்கு வரையறேன். விற்பனைக்கு அல்ல." என்று சொல்ல, அந்த வீட்டினுடைய சூழ்நிலை புரிந்து போயிற்று.

கடைக்காரர் "சரி. பதினஞ்சாயிரம் ரூபாய் தரேன். அதுக்கு மேல கேட்காதீங்க." என்று சொல்ல, இரண்டு பேருமே திகைத்தார்கள்.

'சரி' என்று தலையசைத்தார்கள்.

கற்பூரம் காட்டி குங்குமப் பொட்டு வைத்து படத்தை பார்வதியம்மாள் அவரிடம் கொடுக்க, அவர் ஒரு தட்டில் பதினைந்தாயிரம் ரூபாய் பணத்தை வைத்தார். அவர் போனதும் இன்னும்கூட கேட்டிருக்கலாமோ என்று சிவகாமி துக்கப்பட் டாள்.

"அவருக்கு போய் நல்ல லாபம் கிடைச்சா அவரு கூப்பிட்டும் கொடுப்பார். கவலைப்படாத. நாம அடுத்தது என்ன வரையலாம்."

"பையன் பொறந்திருக்கான். வெண்ணெய்த்தாழி கிருஷ்ணன் வரைடா"

வீடு அலுவலகம். அலுவலகம் வீடு என்று பிசிறு தட்டாமல் வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது. சிறுசிறு படங்களாக பலதும் வரைய, அந்த தனவணிகரின் மனைவி பல பெண்களை அழைத்து வந்தாள்.

அவன் எப்படி வரைவது என்று சொல்லிக் கொடுத்தான்.

"இதை வெறுமன படமா வரையாதீங்கம்மா. நிதானமா செய்யுங்க. ஒரு வாரத்துக்கு ஒருபடம். பத்து நாளைக்கு ஒரு படம்னு பண்ண வேணாம். வருஷா வருஷம் வரைங்க. இந்தப்படம் பாராட்டுவதற்காக வரையப்பட்ட படம் அல்ல. இந்தப்படத்துக்குள்ள சுவாமி வந்து உட்காரணும்னு பண்ணுங்க. உள்ளுக்குள்ள உட்கார்ந்த சுவாமி இது எந்த இடத்துல இருக்கோ, அது அந்த இடத்துக்கு நல்லது பண்ணணும்னு பண்ணுங்க. நான் அப்படித்தான் தாயே செய்யறேன்." என்று அந்தப் பெண்களைப் பார்த்து சொல்ல, அவர்கள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"சின்ன புள்ள. ஆனா என்ன அழகா பேசறான் பார். பேசறது மட்டுமில்ல அதே மாதிரி நடக்கறான். அந்தப்படம் வாங்கிட்டுப் போன அந்த நகைக் கடைக்காரர் அவருக்கு பல பிரச்சினை இருந்தது. எல்லாம் ஒவ்வொண்ணா நகர்ந்துகிட்டேயிருக்கு. படம் வந்த வேளை, படம் வந்த வேளைன்னு சொல்லிகிட்டிருக்காரு. உங்களை பார்க்கணும்னு பிரியப்படறாருன்னு இவன் கிட்ட சொன்னேன். ஒருவருஷம் கழிச்சு பார்க்கறேன் அப்படின்னுட்டான்."

அவன் அலுவலகத்திலிருந்தும் இரண்டு பெண்கள் வந்து கற்றுக் கொண்டார்கள்.

"ஆபீஸ்ல உங்க வீட்டுக்காரருக்கு என்ன பேர் தெரியுமா."

"தெரியாதே. என்ன பேர். சாப்பாட்டு ராமன்னு வச்சிருக்கீங்களா."

"ச்சீ...ச்சீ... அதெல்லாம் நீங்க வச்சுக்கோங்க. அவரு பேர் சாமியார். இன்னொரு பேர் மொபைல் க்ளாக்."

"சாமியார்னா புரியுது. இந்தாண்ட அந்தாண்ட பார்க்க மாட்டாரு. சிரிக்க மாட்டாரு அதனால சொல்லுவீங்களாக்கும். மொபைல் க்ளாக்குன்னாக்க."

"கரெக்டா ஒன்பதே முக்காலுக்கு வண்டி உள்ள வந்துடும். அஞ்சே முக்காலுக்கு வண்டி கிளம்பிடும். ஒன்றரை மணிக்கு டிபன்பாக்ஸ் திறந்துடும். ரெண்டு மணிக்கு மறுபடியும் சேர்ல வந்து உட்கார்ந்துடுவார்."

"இது நல்லதுதானே. இதுல என்ன கேலி."

"எங்களால இருக்க முடியலையே அதனால நாங்க கேலிதானே செய்வோம். எங்களுக்கு பத்து இருவது ஆயிடுது வரத்துக்கு. இவரைப்பார்த்தா பொறாமையா இருக்கு. மணி எவ்ளோடி அப்படின்னு கேட்போம். மொபைல் க்ளாக் கிளம்பிடுச்சு, அஞ்சே முக்கால் கிளம்பு அப்படின்னுவாங்க. மொபைல் க்ளாக் டிபன்பாக்ஸ் திறந்துடுச்சு நீயும் சாப்பிட உட்காரு அப்படின்னுவாங்க."

"அவருக்கு தெரியுமா."

"நல்லா தெரியும். சிரிச்சுகிட்டு சும்மா இருந்துடுவாரு."

"கொஞ்சம் சாமர்த்தியம் போறாது இல்ல."

"வேணாம் கண்ணு. எதுக்கு சாமர்த்தியம்."

ஒரு மத்திம வயசுக்காரி சிவகாமியிடம் நெருங்கிப் பேசினாள்.

"இங்க சாமர்த்தியம்னு சொல்றவனெல்லாம் திருடனா இருக்கான். லஞ்சம் வாங்கறான். கூட வேலை செய்யற பொண்ண மடக்கிப் போடணும்னு பார்க்கறான். அப்படியெல்லாம் இல்லாத, தான் உண்டு தன் வேலை உண்டுன்னு இருக்கறதுன்றது எவ்ளோ பெரிய ஞானம். கோபமே இல்லாம இருக்கறது எத்தனை உயர்ந்த குணம்."

"கடவுள் படம் வரையறதுனால குணவானா இருக்காரா. குணவானா இருக்கறதுனால கடவுள் படம் வரையறாரா."

"ரெண்டும்தான். என் பொண்ணுக்கு பத்துவயசு. ஒரு பத்து வருஷத்துக்குள்ள எனக்கு ஒரு ராமர் பட்டாபிஷேகம் படம் வரைஞ்சு கொடுங்க ஸார். அதை என் பொண்ணுக்கு நான் பரிசாகக் கொடுக்கப் போறேன்னு சொல்லிட்டேன். சரின்னு சொல்லியிருக்காரு. நூத்தியோரு ரூபா அட்வான்ஸ் கொடுத்துட்டேன். வாங்கி ஒரு வருஷம் ஆச்சு. நான் கேட்கவே இல்லையே. கேட்க மாட்டேன். அவருக்கு ஞாபகம் இருக்கும், நிச்சயமா வரைஞ்சு தருவாரு. அந்தப்படம் வந்தவேளை என் பொண்ணுக்கு ஒரு நல்ல இடத்துல கல்யாணமாகும்."

எல்லா இடத்திலும் சிவகாமியின் புருஷன் கனகசபாபதியை அப்படித்தான் மரியாதையாகப் பார்த்தார்கள்.

யாரோ இரண்டு பேர் வம்பு சண்டைக்கு வந்தார்கள்.

"பொம்பளைங்களுக்காக, பொம்பளை மாதிரி உட்கார்ந்து, பொம்பளை டிராயிங் போடற ஆளுப்பா இவன்." என்று இளக்காரம் பேசினார்கள்.

ஒரே வார்த்தையில் 'ஆமாம், அப்படித்தான்' என்று சொல்லிவிட்டு அவன் மௌனமாகி விட்டான். "என்ன வேணா சொல்லுங்கய்யா. சொல்ல உங்களுக்கு வாய் இருக்கு. கேட்க எனக்கு காது இருக்கு கேட்டுக்கறேன்."

அவன் இதமாகப் பேசினான்.

எதனாலோ அந்த விஷமக்காரர்கள் மறுபடியும் அவன் வழிக்கு வரவில்லை.

அவர்கள் பையன் வளர்ந்து பெரியவனானான்.

பள்ளிக்கூடத்திற்கு அவனை அனுப்பினார்கள்.

"டொனேஷனெல்லாம் கொடுத்துத்தான் ஆகணும். நான் வேணாம்னு சொல்ல மாட்டேன். உங்க டொனஷேன்லதான் எங்க பள்ளிக்கூடமே ஓடுது. எங்களுக்கு இன்னும் கூடுதலா காசு வரணும்னு என் எதிர்க்க, நான் பார்க்கற மாதிரி ஒரு வெங்கடாஜலபதி படம் வரைஞ்சு கொடுங்களேன்."

அந்தத் தலைமையாசிரியை கேட்டாள். அவள்தான் பள்ளிக்கூடத்திற்கு சொந்தக்காரியாகவும் இருந்தாள்.

அவன் ஒரு மாதத்தில் ஒன்றை அடிக்கு இரண்டு அடி ஜ்வால்யமான வெங்கடாஜலபதி படம் வரைந்து கொண்டு போய் கொடுத்தான்.

பள்ளி அவனைக் கொண்டாடிற்று. அவன் குழந்தையை கொஞ்சிற்று.

மாதத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை தவிர, மனைவியோடு கூடுதல் என்பது இல்லாமல் போயிற்று. அப்படிக் கூடுகிற போதும் இன்னொரு மகன் இருந்தால் நன்றாக இருக்குமே என்று மனைவி கேட்டுக் கொண்டதற்கிணங்க செய்யப்பட்டதாய் இருந்தது. ஆனால், சிவகாமியின் ஆசை நிறைவேறவில்லை. கொஞ்சம் தள்ளிப் போய் மிகுந்த உதிரப்பெருக்கோடு மறுபடியும் அவள் அவஸ்தைப்பட பார்வதியம்மாள் கடிந்து கொண்டாள்.

"எங்க வீட்ல பரம்பரை பரம்பரையா ஒரு புள்ளதான். நீ ஏண்டி வரிஞ்சு கட்டிகிட்டு நிக்கற."

பார்வதியம்மாள் இடித்துரைத்தாள்.

"அது கிடைக்கும் போது கிடைக்கும். விடு. கிடைச்சதை வச்சு சந்தோஷப்படு." என்று உபதேசம் செய்தாள்.

கருப்பு வெள்ளை டி.வி. வந்த புதிதில் பையன், சிவசங்கரன் ஆடுவோமே பள்ளு பாடுவோமே என்று பாடிவிட்டு வந்தான். உச்சஸ்தாயில் கம்பீரமாக அவன் பாட அந்த தெருவே வியந்து போயிற்று. வந்து குசலம் விசாரித்தது. இரண்டு தெரு தள்ளியிருக்கின்ற ஒரு பெரியவர் வந்து குழந்தைக்கு நன்னா இருக்கு குரல்... என் பொண்ணு பாட்டு சொல்லித்தரா வந்து கத்துக்க சொல்லுங்க ஸார் என்று சொல்ல, சிவகாமி குழந்தையை பாட்டு க்ளாஸிற்கு அழைத்துப் போனாள்.

அந்தப் பாட்டு வகுப்பில் ஒரு வயலின் டீச்சர் வர பையன் வாய்ப்பாட்டோடு வயலினும் கற்றுக் கொண்டான். அப்பா மேல் தளத்தில் ஓவியம் வரைய அதற்கும் மேல் தளத்தில்

அழுத்தமான ஓலைக்குடிசை போட்டு பையன் வயலின் சாதகம் செய்தான்.

பையனுக்கு பதினாலு வயசு ஆகும்போது அந்த நகைக்கடைக்காரர் வந்தார்.

"இன்னியோட பன்னிரெண்டு வருஷம் ஆச்சு. இந்தப்பய வரும்போது எனக்கு பதினேழு லட்ச ரூபா கடன் இருந்தது இன்னிக்கு கடனெல்லாம் போக என் பொண்ணுக்கு கல்யாணம் நடந்து, இப்போ பெரிய ஹோட்டல் கட்றதுக்கு நிலம் வாங்கிட்டேன். பன்னெண்டு கோடி ரூபாயில ஒரு பெரிய ஹோட்டல் கட்டணும்னு தீர்மானம் பண்ணியிருக்கேன்.

நகை வியாபாரம் நல்லா நடக்குது. அந்த லாபத்துலதான், அது கொடுக்கற தைரியத்துலதான் ஹோட்டல் கட்டப்போ றேன். அந்த ஹோட்டல் வாசலுக்கு நீங்க பெருசா ராமர் பட்டாபி ஷேகம் படம் வரைஞ்சு தரணும். அந்த செட்டியாரம்மா வந்து, நீங்க வரைஞ்சதுல பல படங்களைப் பத்தி சொன்னாங்க. நாலடிக்கு ஆறு அடிதானே வரைஞ்சீங்க. இருவதடி நீளம், பன்னிரெண்டடி உயரம் வேணும். ஹால்ல அப்படியொரு இடம் இருக்கு. அந்த இடத்துல வைக்கறா மாதிரி, அங்க வந்து நீங்க ஓவியம் வரைஞ்சு தரணும். அது ராமர் பட்டாபிஷேகமாத் தான் இருக்கணும். சட்டம் போட்ட படம் வரையறதுக்கு பத்து மாசம், பன்னெண்டு மாசம் எடுத்துப்பீங்களாம். இது எவ்ளோ ஆகும். கூடுதலா ஆகுமில்லையா. அதனாலதான் முன்னமே சொல்றேன். எங்களுக்கு பேஸ்மென்ட் முடிஞ்சுடுச்சு. மேற் கொண்டு ரெண்டாவது மாடி, மூணாவது மாடி கட்டிகிட்டிருக் கோம். முதல் மாடியிலயும் வேலை முடிச்சுட்டோம். நீங்க வந்து இடம் பார்த்தீங்கன்னா நல்லாயிருக்கும்.

வெளிநாட்டுக்காரங்க வந்து தங்கும் படியான த்ரீ ஸ்டார் ஓட்டலாக கட்டப்போறோம். வெறும் பூஜை செய்யற இடமா இல்லாமல், எல்லாரும் ஆச்சரியப்பட்டு பார்க்கற விஷய மாகவும் இருக்கணும். வெறுமன ஆச்சரியப்பட்டு பார்க்கற விஷயமாகவும், இல்லாமல், அது அந்த இடத்துக்கே ஒரு

சாந்நித்யம் தர விஷயமாகவும் இதை நீங்கதான் செய்து தரணும்."

ஐம்பதாயிரம் ரூபாய் காசு வைத்து கைகூப்பினார்.

அவர் போனதும் தனவணிகர் மனைவி போன் செய்தாள்.

"அட்வான்ஸ் வாங்கிட்டீங்களா. ஆரம்பிச்சுடுங்க. நல்லநாள் பார்த்து ஆரம்பிச்சுடுங்க. உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் ராமர் பட்டாபிஷேகத்தை பார்த்தது மாதிரி செய்யுங்க. மண்டபம் மட்டுமில்லாம மண்டபத்துக்கு வெளிய மரம், செடி, கொடி போட்டு அங்கிருந்தும் மற்ற உயிரினங்களும் பார்க்கற மாதிரி செய்தீங்கன்னா நல்லாயிருக்கும்." என்று ஆலோசனை சொன்னாள்.

புருஷனும், மனைவியும் வேகமாக எழும்பிக் கொண்டிருக் கின்ற அந்த ஹோட்டலுக்குப் போய் பார்த்தார்கள். அவர்கள் வருவது தெரிவிக்கப்பட்டு அந்த தங்க நகைக்காரரும் ஓடிவந்தார்.

"இது ஹால். வலது பக்கம் ரிசப்ஷன். இடது பக்கம் சோஃபா செட்டெல்லாம் போட்டிருக்கும் லவுன்ச். நேர் எதிர ஆபீஸ். அது ஆபீஸ்னு தெரியாம இருக்கறதுக்கு வலதா ஒரு சுவர் கட்டிட்டோம். இப்போ இந்த சுவர்லதான் நீங்க பெயிண்ட்டிங் வேலை செய்யணும்."

மெல்ல முன்னேறினாள். சுவர் முழுவதும் உள்ளங்கையால் தடவினாள். 'காலாகாலத்துக்கும் என் புருஷன் பேரை சொல்ற இடமா இது இருக்கணும்' என்று பிரார்த்தனை உள்ளுக்குள் பொங்கி எழுந்தது. 'இதை செய்ற வரைக்கும் அவரு மாலை போட்டுகிட்ட மாதிரி இருக்கட்டும். நானும் அப்படியே இருப்பேன். வேற எதுவும் முக்கியமில்லை.

மனம் கொண்டபடி ஆடிட்டோம். ஒவ்வொரு தடவையும் அற்புதமான சந்தோஷம் அனுபவிச்சோம். வேலை செய்ய றதுக்கு பலம் வேணாமா. மனசுல தெளிவு வேணாமா. வீட்ல உட்கார்ந்து நான் ராமநாமம் சொல்வேன். ராமநாமம் சொல்லித் தான் சாப்பாடு செய்வேன். அது சொல்லித்தான் துணி

துவைப்பேன். வீடு முழுக்க ராமநாமம் சொல்லிச் சொல்லி அந்தப் பலத்துல இவரு வேலை செய்யணும்.

ராமர் முகத்துலேர்ந்து கண் எடுக்க முடியாது ஜனங்கள நின்னு கும்பிட்டுப் போகணும். ஹோட்டல், இந்தக் கட்டடம் இதை செய்யற இந்தக் குடும்பம், இந்த நகைக்கடை எல்லாம் ரொம்ப நல்லாயிருக்கணும். இங்க வந்து தங்கறவனெல்லாம் சந்தோஷமா இருக்கணும். அவன் காரியம் ஜெயம் ஆகணும். நின்னு கும்பிட்டவனெல்லாம் வெற்றி பெறணும். இந்த இடம் கோயிலாகணும். இங்கு தெய்வம் குடிவரணும்."

அவள் திரும்பத் திரும்ப அந்த இடத்தை தடவினாள். புருஷனுக்கு அருகே வந்தாள். தன் மனதைச் சொன்னாள்.

கனகசபாபதி திரும்பி அவளைப் பார்த்தான்.

"நீ இருக்க சொல்ல எனக்கு என்ன கவலை. நீ கொடுக்கற பலத்துலதான் நான் எல்லாம் செய்யறேன். நீ கொஞ்சம் சிணுங்கியிருந்தா, நீ வாடா அப்படின்னு இழுத்திருந்தா, ஏன் வரலைன்னு சண்டை போட்டிருந்தா, நான் என்ன கதியாயிருப் பேன். நீ பேசு கேட்கறேன் அப்படின்னு உக்காருகிற பொம்மனாட்டி யாராவது உண்டா. நீ கொடுத்த அன்பு, ஆதரவுதான் இங்க கொண்டு வந்து நிறுத்தியிருக்கு. இந்த வேலை கிடைச்சதும் நான் ஒதுங்கி நிக்கறேன். நீ வேலை செய்யுங்கறியே இதை எப்படி பாராட்டறது."

"அது இருக்கட்டும். இது எத்தனை நாளாகும்."

"ஆபீஸுக்கு போயிட்டு வந்து செய்தேன்னா மூன்று வருஷம் ஆகும். ஆபீஸுக்கு லீவு போட்டு செய்தேன்னா ஒரு வருஷத்துல முடிச்சிடலாம்."

"லீவு போட்டிருங்க."

"மறுபடியும் வந்து ஜாயின் பண்றபோது வேற இடத்துல போட்டுடுவான்."

"போடட்டுமே அதை விட இது முக்கியம்."

நல்ல நாள் பார்த்து, எதிரே கனகபதி ஹோமம் செய்து பிள்ளையாரை வணங்கிவிட்டு, சுவரை சுத்தம் செய்து, மேலே

பிள்ளையார் சுழி போட்டு, ஒரு ஓரமாய் பிள்ளையார் பட்டி கற்பகவிநாயகர் படத்தை தங்கக் கலரில் வரைந்து வைத்து விட்டு படத்திற்கான கோடுகள் போடத் துவங்கினான்.

தன்னுடைய அதிகாரியை மோட்டர் சைக்கிளில் அழைத்து வந்து தான் செய்யப்போகும் வேலையை விளக்கினான்.

"ரொம்ப நல்லாயிருக்கு. நீ சும்மா என்னை மட்டும் கூட்டிட்டு வந்து காட்டினா போதாது. லீவு வாங்கிட்டா போதாது. மேல யாராவது தொந்தரவு பண்ணிடுவான். அவங்க தொந்தரவு பண்ணாத இருக்கணும்னா, எனக்கும் மேல இருக்கற ஆளை கூட்டிகிட்டு வந்துடு. செகரட்டரி லெவல்ல வரட்டும். ஒரு டூரிஸ்ட் காரை எடுத்துக்கிட்டுவா" என்று சொல்ல, அவன் டூரிஸ்ட் கார் எடுத்துக் கொண்டு வந்து செகரட்டரியை போய் பார்த்து, தான் மிகப்பெரிய வேலை செய்ய போவதாய்ச் சொல்ல, "இதற்கு ஏன் காரெல்லாம் எடுத்துகிட்டு வந்த, என்கிட்ட காரெல்லாம் இருக்குன்னு தெரியாதா. என் கார்ல போகலாம் வா." என்று அவனை தன் காரில் ஏற்றிக் கொண்டு ஹோட்டலுக்கு வந்து, ஹோட்டல் எழும்புவதைப் பார்த்து, ஹோட்டல் முதலாளியோடு கை குலுக்கிவிட்டு, அவன் வரைய இருக்கின்ற சிற்பத்தின் நீள அகலம் பார்த்து வியந்து போனார்.

"லைஃப் டைம் ஒர்க் இது. எங்கயோ தனிப்பட்டவர் வீட்ல இல்ல. ஒரு நாளைக்கு மூவாயிரம் நாலாயிரம் பேர் நடந்துபோற இடத்துல இருக்கு. ரொம்ப ரொம்ப நல்லா வரணும். நீ செய். இதைப் பார்த்தவுடனே என் மனசுல வேற ஒரு எண்ணம் வந்திருக்கு. அதை செய்ய முடியுமான்னு தெரியலை. இருந்தாலும் இதைச் செய்யற பலத்துல அதுவும் கிடைக்கும்."

"என்ன ஸார்."

"ரயில்வே ஸ்டேஷன்ல இந்த மாதிரி ஒரு படம் வைகக முடியாதா."

"எப்படி ஸார். ராமர் பட்டாபிஷேகம் வச்சா நல்லா யிருக்குமா."

"ஆமாம்... எல்லா மதமும் பொதுதானே. சரி. ரயில்வே பத்தி டிராயிங் போட முடியாதா."

"வேணாம் ஸார். அதைப் போடறதுக்கு ஆள் இருக்காங்க. அதைப் போடறதுக்கு தஞ்சாவூர் சித்திரம் தேவையில்லை. நான் செய்யறதா இருந்தா இந்த மாதிரி வேலைத்தான் ஸார் செய்வேன்."

"எனக்குப் புரியுது. நீ கேட்ட அதே கேள்விதான் எனக் குள்ளேயும். ராமர் பட்டாபிஷேகத்தை சென்டரல் ஸ்டேஷன்ல வரைஞ்சா முஸ்லீம்களோ, கிறிஸ்தவர்களோ கேள்வி கேட்கலாம். வீண் வம்புதான் வரும். ஆனா, எனக்குள்ள ஆசை வரைங்க பார்க்கலாம்."

"லீவு கேட்டிருந்தேனே ஸார்."

"யோவ் உனக்கில்லாத லீவா. நான் ஏற்பாடு பண்ணித்தரேன் கவலைப்படாத வா."

அலுவலகம் முழுவதும் அவனுக்குக் கிடைத்த வேலையைப்பற்றிப் பெரிதாகப் பேசப்பட்டது. எல்லோரும் கை குலுக்கினார்கள். பாராட்டினார்கள்.

"உனக்கு நான் என்ன பண்ணணும் சொல்லுங்க தம்பி. மளிகை சாமான் கொண்டு வந்து போடவா. வீட்ல மராமத்து இருந்தா நீ கவனிக்காத நான் பார்த்துக்கறேன். பம்ப் ரிப்பேர், குழாய் ரிப்பேர், சாக்கடை ரிப்பேர் எல்லாம் நான் வந்து செய்யறேன்."

ஒரு இன்ஜினீயர் முன் வந்து கைகுலுக்கினார்.

"பாட்டு பாட்டுன்னு பையனை விட்டீங்கன்னா படிப்பு போயிடும். அவன் நாலு நாள் பாட்டுல இருக்கட்டும். நான் மூணு நாள் உன் பையனுக்கு டியூசன் சொல்லித்தரேன். நல்லா படிக்க வைக்கறேன். எட்டாவது படிக்கும்போதே ஆரம்பிச்சா தான் ப்ளஸ்டூல நல்ல மார்க் எடுக்கலாம். இப்போ விட்டுட்டான்னா அப்பவும் கஷ்டம் வரும். படிக்கத் தெரியாத போயிடும். நான் அவனுக்கு எப்படிப் படிக்கறதுன்னு சொல்லித் தரேன்."

"உனக்கு எதுக்கு சிரமம் கல்யாணி."

தன்னுடன் வேலை செய்கிற பெண்ணைப் பார்த்து கனகசபாபதி கைகூப்பினான்.

"நீ எவ்ளோ பெரிய வேலை செய்யற. உனக்கு நான் இதைச் செய்ய மாட்டேனா. என் பொண்ணுக்கு கல்யாணம் ஆகி ரெண்டு வருஷம் ஆச்சு. குழந்தை இல்லை. உன் புள்ளைக்கு நான் படிப்பு சொல்லிக் கொடுக்கற புண்ணியத்துல, என் பொண்ணு வயிறு திறக்கமாட்டாளா. அந்த ராமர் என்னை காப்பாத்த மாட்டாரா. அவங்க மாமியார் வீட்ல என் பொண்ண ஒரு மாதிரியா பேசறாங்களாம்."

சொல்லும் பொழுதே, கூட வேலை செய்கின்ற அந்தப் பெண்ணுக்கு கண்ணில் ஜலம் வழிந்தது.

இவளை நினைத்துக் கொண்டும் ஓவியம் வரைய வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

நாப்பது நாட்கள் உடல்நலக் குறைவு என்று லீவு கேட்டான். பத்தாவது நிமிடத்தில் அவனுக்கு விடுமுறை கொடுக்கப்பட்ட தாய் காகிதம் அவனுடைய மேஜைக்கு வந்தது. அன்று காலை பத்தரை மணிக்கு எல்லோரும் ஒன்றுகூடி 'ஸ்ரீராம் ஜெயராம் என்று பாடினார்கள்.

ஒரு முஸ்லீம் நண்பரும், கிறிஸ்துவ நண்பரும் அதில் கலந்து கொண்டார்கள். நல்லபடியா பண்ணி முடிங்க என்று வாழ்த்துச் சொன்னார்கள்.

கனத்த இதயத்தோடு கனகசபாபதி திரும்பினான்.

மறுநாள் காலையிலிருந்து வேலையில் இறங்கினான்.

மண்டபத்தின் இரண்டு பக்கங்களிலும் செடிகளும், மரங்களும் நிறைந்திருந்தன. மாமரங்களில் கனிகள் தொங்கின. பெரிய நாகங்கள் சுருண்டு தொங்கின. பருந்தும், கிளியும், மைனாவும், மரங்கொத்தியும் அமர்ந்திருந்தன. தங்க மாங்கனிகள் பச்சைக்கு நடுவே துளிர் இலைகளெல்லாம் தங்க நிறத்தில் பிரதிபலித்தன. மரத்துக்குக் கீழே பசுக்களும், குதிரைகளும், கோவேறு கழுதைகளும், யானைகளும்

நின்றிருந்தன. வேறு பக்கம் புலியும், சிங்கமும், ஆடும், பூனையும், நாயும் அருகருகே நின்று பட்டாபிஷேகத்தை கவனித்தன. கொலு வீற்றிருப்பதைப் பார்த்தன. மெல்ல மெல்ல உள்ளுக்குள் மனிதர்கள் வரையலானான்.

தஞ்சாவூர் ஓவியம் என்பது வெறும் வண்ணக் குழையல் அல்ல. பூச்சுகளில் எதையும் தெரிவிக்க இயலாது. ஒவ்வொரு இலையும் வரையப்பட வேண்டும். ஒவ்வொரு முகமும், ஒவ்வொரு உடையும், ஒவ்வொரு கிரீடமும் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும்.

ஸ்ரீராமரின் கிரீடம் போல எவர் கிரீடமும் இருக்கக்கூடாது. அவர் சக்ரவர்த்தி. குகன் படகோட்டி. விபீஷணன் அசுர அரசன். ஆயினும் அவர்கள் நிலை ஒன்றே. உடைகளில் வித்தியாசம் இருந்தாலும் கம்பீரத்தில் ஒரு இணைப்பு காட்ட வேண்டும். வசிஷ்டரும், விஸ்வாமித்திரரும் அருகருகே இருந்தாலும் இரண்டு பேரின் குணங்களையும் பிரதிபலிக்க வேண்டும்.

அரண்மனைப் பெண்டிருக்கும், பொது ஜனப் பெண்டிருக்கும் வித்தியாசமுண்டு. ஆடல் மகளிருக்கும், அந்தணப் பெண்மணிக்கும் வித்தியாசம் உண்டு. வணிகரின் கம்பீரம், அரசனின் கம்பீரத்தை விட ஒரு மாற்று குறைவானது. நாய், பூனை, கீரி, புலி, பசு எல்லாமும் உண்டு. ஆனால் எல்லா முகத்திலும் சாத்வீகமிருக்கும். உண்டு முடித்த சந்தோஷமிருக்கும். ஆனால், நின்று நாலாபுறமும் பார்க்க, புலி அமர்ந்து முன் கால்கள் நீட்டி வாய் பிளந்து கிடக்கும். சிங்கம் சற்று உயரமான இடத்தில் படுத்திருக்கும். ஆண் சிங்கத்தைப் பெண்சிங்கம் உரசி நிற்கும். கீரிகளில் எம்பி நின்று பார்க்கும் ஒரு வகை பிராணி உண்டு. அவை மனிதர்களுடைய தோள்களுக்கு நடுவே எட்டிப் பார்க்கின்றன. மரம் நிறைய கிளிகள். மண்டபத்தில் அணில்கள். கொடியோடு கொடியாக சுற்றிக் கொண்டிருக்கும் நாகப்பாம்புகள்.

"சாப்பாட்டுக்கு என்னாத்துக்கு வெளிய போகணும். ஹோட்டல்லயே தரச்சொல்றேனே."என்று முதலாளி கேட்ட போது கனகசபாபதி மறுத்துவிட்டான்.

டிபன் பாக்ஸில் கொண்டு வந்த சாப்பாட்டை தட்டை எடுத்து புடவையில் துடைத்து வைத்து சோறு பரிமாறி சாப்பிடும் வரை காத்திருந்து, பிறகு டிபன் பாக்ஸை மூடி, வாசனை பாக்கை புருஷனுக்குக் கொடுத்து தானும் இரண்டு போட்டு மென்று கொண்டு சிறிது நேரம் பேசி ஓவியம் எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது என்பதைப் பார்த்து, சிலவற்றிற்கு அபிப்ராயம் சொல்லி, சில திருத்தங்கள் சொல்லி ஒன்றரை மணி நேரம் இருந்துவிட்டுப் போவாள் சிவகாமி.

இரவு ஒன்பது மணிக்கு நகைக்கடை முதலாளி அவனை காரில் ஏற்றி, வீட்டில் கொண்டு வந்து விடுவார்.

கனகசபாபதிக்கு உடம்பு சற்று பெருத்தது. முகம் அழகாக மாறியது. தலையில் நரைகள் ஓடின. பூசின முகமும் நீண்ட விரல்களும், வெள்ளைக் கதர் ஜிப்பாவும் வேட்டியுமாய் இருக்கின்ற அவரைப் பார்த்து எல்லோரும் கைகூப்பினார்கள்.

மண்டபத்தைச் சுற்றி பொதுஜனங்களும், வானர வீரர்களும் வரைந்து, தகதகக்கும் தங்க நகைகள் ஒட்டி, தங்க வேட்டிகள் கட்டி, சிலருக்கு தங்க தலைப்பாகை அணிவித்து நிமிர, அசையாமல் பின்னால் ஒரு கூட்டம் இருப்பது தெரியவர, அவன் அதை விரும்பாது தன்னைச்சுற்றி திரை போடச் சொல்லி விளக்கு வசதியை அதிகப்படுத்தினான்.

"ஒரு உதவியாள் வச்சுக்கக்கூடாதா."

ஒரு மேனேஜர் கேட்க, "இல்லீங்க. அவர் செய்யற வேலை எனக்கு பிடிக்காத போயிடுச்சின்னா நான் பிரிச்சு செய்யும்படியா ஆகும். பிரிச்சு செய்யற வேலை நல்லாயிருக்காது. அதனால ஒத்த ஆளா தனித்தனியா ஒவ்வொரு பொம்மையா செய்து கிட்டுதான் வரணும். என்னுடைய கணக்கு பிரகாரம் முன்னூத்தி பதினஞ்சு பொம்மை இதுல இருக்கறதுக்கு வாய்ப்பு இருக்கு. அத்தனையையும் நான்தான் செய்யணும்."

ரிஷிகள் முடித்து, அரசர்கள் முடித்து, ஹனுமனைத் தொட்டவுடன் ஜுரம் வந்துவிட்டது.

பத்து மணிக்கு வந்து வேலையை ஆரம்பித்த அரைமணி
யில் மூக்கு உறிஞ்ச, கண்கள் எரியத் துவங்க, அடுத்த அ
மணியில் தலை பாரமாக, தங்க பேப்பரை சுருட்டி வைத்து
விட்டு வெளியே வந்து உட்கார பளிச்சென்று ஜுரம் பற்றி
கொண்டதை உணர்ந்தான்.

அவனைக் கவனித்துக் கொண்டிருந்த மேனேஜர் அருகில்
வந்து என்ன என்று பார்க்க, "தெரியலை ரொம்ப அலுப்பா
இருக்கு" என்று சொல்ல, அவர் நெற்றியில் கை வைத்துப்
பார்த்து, "ஜுரம் வந்துடுச்சு ஸார்." என்று கூவினார்.

உடனே முதலாளிக்கு போன் செய்தார்.

"எனக்கு காலையில் கனவு வந்ததுங்க. உங்களுக்கு
ஜுரம்வரும்னு. பவழமல்லி மரத்தை உலுக்கறீங்க. மெல்ல
உலுக்குங்க வேகமாக பண்ணாதீங்கன்னு சொல்றேன். ஆனா,
மேலேயிருந்து பூவா உங்க தலையில உதிருது. உதிர்
பூவெல்லாம் உங்க உள்ளுக்குள்ள போயிடுது. நான் ஜுரம்
வரும், ஜுரம் வரும்னு கத்தறேன். உங்களுக்கு ஜுரம்
வந்துடுச்சு. பவழமல்லின்னா ஹனுமார். நீங்க கரெக்டா
ஹனுமார் வரைய ஆரம்பிக்கறீங்க. நாம வேற ஏதாவது
பண்ணணுமோ. ஏதாவது பூஜை செய்யணுமோ."

அவர் கவலையோடு கேட்டார்.

ஊரிலுள்ள பெரும் ஸ்தபதிகளை விசாரித்தார்கள். மறை
யோர்களை கலந்து பேசினார்கள். சோழிபோட்டு பிரசன்னம்
பார்த்தார்கள். இரவுநேரம் யாரோ வந்து நோண்டுகிறார்கள்
என்று பிரசன்னத்தில் சொல்லப்பட்டது. அதற்கு வாய்ப்புகள்
இருக்கின்றன என்று முதலாளி சொன்னார். பிறகு
விசாரித்தபோது சில ஊழியர்கள் கனத்த திரைக்குப் பின்னே
போய் இரவு நேரம் குடிப்பதற்கு உட்காருவதாகவும்,
குடித்துவிட்டு படுப்பதாகவும் கேள்விப்பட்டார். அந்த
இடத்தை தகரம் அடித்து பூட்டு போட்டார். நல்லவேளையாக
குளிரூட்டுகின்ற ஒரு வேலையும் உடனே செய்ய முடிந்தது.

மூன்று நாள் ஜுரத்தில் கனகசபாபதி வாடிப்போயிருந்தான்.

"கண்ணு நான் ஹோட்டல்லேயே தங்கிக்கறேன். படுக்கை
கூட வேணாம். வெறுமன தரையில படுக்கறேன். உன்னைப்
பார்க்கறதுகூட ஒரு பரவசம்தான். அந்தப் பரவசம்கூட
இல்லாமல் இன்னும் நிச்சிந்தையா உட்காரணும்."

வேண்டுகோளாய் மனைவியிடம் கேட்க, மனைவி நல்லா
செய்யுங்க என்று அனுமதி கொடுக்க வேலை தொடர்ந்தது.

மண்டபத்தின் மேல் பகுதியில் அலங்காரமாய் மெல்லிய
தாய் பட்டைபட்டையாய் கண்ணாடிகள் பொருத்தப்பட்டன.
சிம்மாசனத்தில் பம்பாயிலிருந்து வந்த இமிட்டேஷன் கற்கள்
பதிக்கப்பட்டன. ராமரிடம் வருவதற்கு பதினோரு மாதங்கள்
ஆயிற்று.

"இதுக்கு மேல லீவு இல்லை. லீவு ஆன் லாஸ்பேயில
இருக்கீர். வந்து ஒரு மாசம் வேலை செய்துட்டு அப்புறம் லீவு
எடுத்துக்கோ. அதுதான் விதி. அதுதான் சட்டம்." என்று
அலுவலகத்தில் சொல்ல, அவன் மறுபடியும் ரயில்வே
வேலைக்குப் போனான். அவன் ஹோட்டலிலேயே தங்கினான்.

"வாய்யா. ஒரு ஒருமணிநேரம் ரெண்டு மணிநேரம்
உட்காரு. அப்புறம் கிளம்பிப் போயிடு." என்று அதிகாரி சலுகை
கொடுக்க, காலை முழுவதும் அலுவலகத்தில் அமர்ந்துவிட்டு,
மாலை ஹோட்டலுக்குப் போனான். நடு இரவு வரை வேலை
செய்தான்.

ராமருக்கு அணிகலனாக நல்ல வைரங்கள் தரப்பட்டன.
சிகப்பும், ஜாதிப்பச்சையும், முத்தும், பவழமும் தனித்தனியாகக்
கிடைத்தன. ராமரின் நெஞ்சுக்கேற்றவாறு ஒரு பதக்கம்
செய்யச் சொல்ல, தங்கத்திலேயே ஒரு பதக்கம் செய்து
முதலாளி கொண்டு வந்தார்.

காலில் தங்கக் கொலுசும், பாதுகையும், புடைப்புச்
சிற்பங்களாய் இருபத்து நாலு கேரட் தங்கமாய் இருந்தது.
இன்னும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது.

முகங்கள் வரையும் வேலை துவங்கியது. சீதையின் முகம்
மிக அழகாய் வந்தது. கண்களுக்கு சாம்பல் கலந்த கருமை

பூசியிருந்தான். நல்ல கரும்புள்ளி வைக்க நாள் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். ராமர் முகமும் வரையப்பட்டது. ராமர் மெல்லிய முறுவலோடு, கருணை மிகுந்த கண்களோடு, அகலமான ஒளியோடு, நீண்டு படர்ந்த இமைகளோடு, வளைந்த புருவங்களோடு உற்றுப் பார்த்து, 'என்ன பேசு' என்பதுபோல் தோற்றங் கொடுத்தான். மண்டபத்திற்குப் பின்னால், மரத்திற்கு அப்பால் காலை ஏழு மணி வெளிச்சம் நீண்ட நிழலோடு இருக்கும்படி படம் வரைந்தான். பிறகு முகம் எழுதத் துவங்கினான்.

பரதன், சத்ருக்கனன், லட்சுமணன் என்று சொல்லி சீதை முகத்திற்கு வந்தான். குமிழ் சிரிப்பும், கொவ்வைச் செவ்வாயும், வில்லொத்த புருவங்களும், எடுப்பான நாசியும், அழகான செவியும், சங்குக்கழுத்தும், பரந்த கண்களும் வரைந்து... இமைகள் எழுதி கீழே மையிட்டு வெறுமே பென்சிலால் மட்டுமே கண்விழிகள் வரைந்து ராமருக்குப் போனான். ராமர் அழுத்தமான சிரிப்பு. நீளமான கண்கள். உறுதியான முகவாய். விடைத்த மூக்கு. பரந்த நெற்றி. அழகான திருமண். கூர்மையான பார்வைக்கு ஏற்றபடி சரியான அளவுகளில் பெரிய விழிகளாய் வரைய, பென்சிலிலேயே ராமர் பார்வை துளைத்தெடுத்தது.

முதலாளிக்கு கடைக்குப்போகவோ, வீட்டிற்குப் போகவோ மனமே இல்லை. நல்ல சேர் ஒன்று கேட்டு வாங்கிப் போட்டு கால்நீட்டிக் கொண்டு, அவன் வரைவதையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். அவ்வப்போது வேட்டியையும் மடித்துக்கட்டி அருகே வந்து பார்ப்பார். பெயிண்ட் எடுத்துக் கொடுப்பார். பிரஷ்களை சுத்தம் செய்வார். எல்லோரும் ராமரைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்.

நல்லநாள் பார்த்து கண் வரைதல் தீர்மானமாயிற்று.

ஸ்ரீ ராமருக்கும், சகோதரர்களான மூவருக்கும், சீதைக்குமாய் காலையிலிருந்து நல்ல நேரத்தில் வண்ணங்கள் குழைத்து விழிகள் எழுதி, சுக்கிர ஓரையில் ராமருடைய கண்களை

வரையத் துவங்கினான். விழிகளை மேடாக்கினான். தொலைவிலிருந்து உற்றுப் பார்த்து திருத்தங்கள் செய்தான்.

"நீங்க முடிச்சிட்டீங்கன்னு சொல்லீட்டீங்கன்னா, உள்ள சுத்தம் பண்ணி ஃபைபர் க்ளாஸ்ல ப்ரேம் போட்டு உடனே மாட்டிடுவேன்." என்று முதலாளி சொல்ல, "உங்க வீட்ல இருக்கறவங்களை கூட்டிகிட்டு வாங்க. ராமரை தொட்டு நமஸ்காரம் பண்ணி, அவர் கால்ல பூ போட்டு, கற்பூர ஆரத்தி காண்பிச்சுட்டு அதுக்கப்புறம் ப்ரேம் மாட்டலாம்."

முதலாளியின் குடும்பமும், கனகசபாபதியின் குடும்பமும் அவ்விதமே மலர்கள் காலில் சொரிந்து கற்பூர ஆரத்தி காட்டி ராமரின் பாதத்தைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டது. சீதையின் பாதங்களுக்கு முத்தம் கொடுத்தது. பிறகு அங்கு விழுந்த மலர்களை எடுத்து அந்த இடத்தை சுத்தம் செய்து ஈரத்துணியால் துடைத்து பிறகு ஃபைபர் கிளாஸை அழகாக மாட்டினார்கள். ஃபைபர் க்ளாஸை மாட்டிய பிறகு பொது ஜனங்களை பார்க்க விட்டார்கள். ஜனங்கள் குவியலாய், கும்பலாய் வந்து பார்த்தார்கள்.

"ஸார். அந்த அட்டிகை எப்படி... அது நிஜ அட்டிகை தானே."

"முதலாளி ராமருக்குன்னு பண்ணி கொண்டு வந்த அட்டிகை. அதேபோல சீதை ஒட்டியாணம். வெறும் புடைப்புச் சிற்பமில்லை, அதுவும் அசல் தங்கம். ராமருடைய பாதுகை, கொலுசு, சீதையினுடைய கொலுசு, மெட்டி எல்லாமும் அசல் தங்கம். இருவத்தி நாலு கேரட். ஹனுமாருடைய உள்ளங்கை மேல இருக்கிற ரெண்டு பாதுகையும் ஆறாறு சவரன். கனமா கால்குமிழியோட ஐயாதான் பண்ணி கொண்டு வந்தாரு. நான் வெறுமனே பட்டிபோட்டு பொருத்தி வச்சேன்."

உள்ளுக்குள் இருக்கிற காற்றை இழுத்து, அந்த இடத்தை வெற்றிடமாக்கி சீல் வைக்க, உள்ளே எந்த ரசாயனமாற்றமும் ஏற்படுத்தாமல் பளபளவென்று படம் பொலிவாகக் காட்சியளித்தது.

அந்தப் படம்பற்றி பல தினசரி பத்திரிகைகளும், வாரப்பத்திரிகைகளும் எழுதின. அதைப் பார்த்துவிட்டு திருப்பதி தேவஸ்தானத்திலிருந்து வெங்கடாஜலபதி எழுத அவனுக்கு அழைப்பு விடுத்தார்கள். பெரிய மனிதர்கள் தங்கும் தனித்த விடுதியில், வரவேற்பறையில் வெங்கடாஜலபதி அலமேலு மங்கைத்தாயார் படம் வரைய சொன்னார்கள். மடமடவென்று மூன்றே மாதத்தில் அந்தப் படத்தை முடித்துவிட்டு தினம் வெங்கடாஜலபதியை நமஸ்கரித்து விட்டு கணவனும், மனைவியும் திரும்பினார்கள்.

"குளுகுளுன்னு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மூணு மாசமும் மலை ரொம்ப நல்லாயிருந்திருக்குமில்ல ஊட்டி மாதிரி."

பார்வதியம்மாள் கேட்டாள்.

"ஆமாம்மா அப்படித்தான் இருந்தது. ஆனாலும், நாங்க படம் வரையற நினைப்புலயே இருந்தோமே தவிர, அங்கயும் எந்த விவகாரமும் வச்சுக்கலை."

"ஏண்டி, வேணாமனு விட்டுட்டீங்களா."

"இல்லைம்மா. தோணவே இல்லை. எப்பேர்பட்ட படம் வரையறாரு. உடம்பெல்லாம் கண்ணா, மூச்சு அத்தனையும் ஓவியமா இருக்கறாரு. அவரைப் போய் என்ன தொந்தரவு பண்றது. அதைப் பார்த்துக்கிட்டே இருக்கும் போது எனக்கு மனசு எங்கயோ சொருகிக் கிடக்கே தவிர, வேற ஒண்ணும் தோணலை. ரெண்டு பேரும் மலையைச் சுத்தி இருக்கற பாதையில நடப்போம். திரும்பி ரூமுக்கு வந்து குளிப்போம். ஆறுமணிக்குப் போய் சுவாமி தரிசனம் பண்ணுவோம். வரும்போது நேரா தேவஸ்தானம் கேண்டீன்லயே டிபன் சாப்பிடுவோம்.

ரூமுக்கு வந்து கொஞ்சம் படுத்துட்டு வேலை ஆரம்பிப்போம். ஆறு மாசத்துல செய்ய வேண்டிய வேலையை மூணு மாசத்துல அழகா முடிச்சு கொடுத்துட்டாரு. தங்கச்சுருளை தேவஸ்தானமே கொடுத்தது. பல நகைகள் ஒரிஜினல். பல வி.ஐ.பி.கள் வரதுனால துப்பாக்கி வச்சுருக்கிற போலீஸ்காரர் உண்டு. முன் கேட், பின் கேட் செக் பண்ணேன்.

வெங்கடாஜலபதி படத்தையும் செக் பண்ணேன்னு கையெழுத்துப் போடணும். அப்படியாரு பாதுகாப்பு ஏற்பாடு பண்ணியிருக்காங்க அம்மா. இவரு இனிமேல் ராமர் படம்தான் வரைவேன். வேற படம் வேணாம்னு தோணுதுன்னு சொல்லிட்டாரு. ஒண்ணுக்கு ரெண்டரை ராமர் படமோ, இருவதடிக்கு இருவதடி ராமர் படமோ, ராமர் பட்டாபிஷேகம்தான் வரைவேனே தவிர, மத்த படங்கள் வரையறதுல எனக்கு மனசு லயிக்கலைன்னு சொல்லிட்டாரு."

அவள் இதை அம்மாவிடம் தெரிவிக்க, அம்மா வேறொரு உறவுக்காரரிடம் சொல்ல, அந்த உறவுக்காரர் ஒரு பத்திரிகைக் காரரிடம் சொல்ல, அந்தப் பத்திரிகை இவரிடம் வந்து கேள்வி கேட்டது. பேட்டி எடுத்தது. மனைவியைப் பற்றி விசாரித்தது. மாமியாரையும் தந்தையையும், தாயையும் பற்றிக் கேள்வி கேட்டது. மாமனாரைப் பற்றி புரிந்து கொண்டு அவரைப் பற்றியும் ஒரு பேரா எழுதியது.

இனி ஆயுசு முழுக்க ராமர் பட்டாபிஷேகம்தான். வேறுபடம் வரைய எனக்குத் தோன்றவில்லை என்பதை பெரிதாக எழுதி, அதற்கான காரணத்தை அவர் சொல்ல, அதையும் வெளியிட்டிருந்தது. அவர் வரைந்த ஹோட்டல் படத்தை விமர்சித்திருந்தது.

தஞ்சாவூர் சித்திரத்தில் இது ஒரு உயர்ந்த பாணி. ஐரோப்பிய சித்திரத்தினுடைய ஆழமும், அழுத்தமான வண்ணமும், அதேசமயம் தஞ்சாவூர் ஓவியத்தின் தட்டைப்பரப்பும் கலந்து உருவாக்கின விஷயம்.

அவருடைய முழு விலாசமும் அந்தப் பத்திரிகை கொடுக்க நிறைய ஆர்டர்கள் வந்தன. பொதுமக்கள் காசோலை அனுப்பியிருந்தார்கள். அடுத்த மூன்று வருடத்திற்கு, வருடத்திற்கு நூறு படமாய் முன்னூறு படங்களுக்கு அவர் ஒப்புக் கொண்டார். அடிப்படை விஷயங்களைச் செய்ய மாணவர்களை அமர்த்திக் கொண்டார். அவர் முகம் மட்டும் எழுதினார். நகைகள் பொருத்தினார். ஆயிரத்தோராவது படம் வரைந்த பிறகு போதும் என்று நிறுத்தினார்.

ப்ளஸ்டூவில் தொண்ணூறு சதவீதம் எடுத்திருந்தான் பையன். அடுத்தபடியாக என்ன செய்யப் போகிறாய் என்று அவர் விசாரித்தபோது, "உங்களைப்போல ஓவியம் வரையப் போகிறேன்." என்று நெஞ்சு நிமிர்த்திச் சொன்னான். அவன் வரைந்த ஓவியங்களைக் காட்டினான்.

"புடைப்புச் சிற்பங்கள் பண்ண வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது" என்று சொல்லி அதற்கான ஓவியக் கல்லூரியில் சேர்ந்தான். ஸ்தபதிகளோடு போய் பழகினான்.

அவன் முதல் சிற்பம் பிள்ளையார்பட்டி கற்பக விநாயகரும், இரண்டாவதாக நடராஜரும் மூன்று லட்ச ரூபாய்க்கு விற்கப்பட்டபோது, அவர் சந்தோஷமானார். அவனுக்கு பெண் பார்த்தார். மனைவியைப் போல ஒரேயொரு பெண் இருக்கின்ற குடும்பத்திலிருந்து பெண் எடுத்து அவனுக்கு திருமணம் செய்தார்.

"வரைஞ்சது போதும். நாங்க ராமர் பிறந்த இடங்களுக் கெல்லாம் போய் பார்க்கப் போறோம். வடக்கு சுத்தப்போறோம். எதுக்குப் பிறந்தேனோ அந்த வேலையை முடிச்சிட்டேன். சும்மா வேலை செய்துகிட்டிருந்தா மனம் அலுத்துப்போகுது. ராமர் சந்தோஷமாக இருந்த சித்திரக்கூடம் பகுதிக்கு போகணும்னு ஆசை. அவர் தாண்டின கங்கை எங்க இருக்குன்னு தேடி அங்கு போய் உட்காரணும்னு ஆசை. அவர் எந்த வழியில வந்திருப்பாருன்னு யோசனை பண்ணி, யோசனை பண்ணி மெல்ல மெல்ல அப்படியே மேற்குப் பக்கமா நகரணும்னு ஆசை. அப்படியே சபரிமலைக்குப்போய் கேரளாவுல புகுந்து ராமேஸ்வரத்துக்கு வந்து ராமர் நினைப் பாவே இருக்கணும்னு ஆசை."

தாய் தந்தையரிடம் விடைபெற்றுக் கொண்டு மனைவி யோடு வெளியே கிளம்பினார்.

"என்னடா தடுக்குனு கிளம்பிட்டானேன்னு பார்க்கறியா." முதல் வகுப்பில் கூம்பே பெட்டியில் மனைவியின் மடியில் படுத்துக் கொண்டு வினவினார்.

"இல்லை. இப்படி போறதுதான் ரொம்ப சரி. நீங்க சொன்ன மாதிரி உங்க வேலையை முடிச்சிட்டீங்க. இன்னும் சொச்ச காலம் ரொம்ப அமைதியா இருந்து மரணத்தை நோக்கிப் போகணும். வெறுமன உட்கார்ந்திருக்கணும்.எந்தக் கவலையும் இல்லாம, எந்தப் பேச்சும் இல்லாம சும்மா எங்கேயாவது வெறிக்க பார்த்துகிட்டு உட்கார்ந்துகிட்டிருக்கணும். வெளிய பார்க்கற மாதிரி உள்ளயும் பார்க்கணும். அதுக்கு இந்தப் பயணம் ரொம்ப உதவி செய்யும். இதுதான் நிஜமான ஹனிமூன்னு தோணுது. ஒருத்தரையொருத்தர் பார்க்கறது கூட இல்லை. நாம ஒருத்தரை ஒருத்தர் தாண்டி நம்மையும் பார்த்துக்கப்போறோம். இந்த ஹனிமூன் கல்யாணமான எல்லாத் தம்பதிகளும் போகணும். கல்யாணம் ஆயிட்டு உடம்பு புரிஞ்சுக்கிறது, மனசைப் புரிஞ்சுக்கிறதவிட இப்போ உயிரோட இருக்கறதுக்கு என்ன அர்த்தம் அப்படின்னு புரிஞ்சுக்கிற ஹனிமூன் இருக்கே இது ரொம்ப உசத்தி, நான் வண்டி ஏறும்போதே இந்த மாதிரி பல பொண்களுக்கு வாய்ப்பு கிடைக்கணும்னு வேண்டு தலோடுதான் ஏறினேன். ஒவ்வொரு இடத்துலயும் நானும் என் புருஷனும் சந்தோஷமா இருக்கறது போல, உலகத்துல பல புருஷன், பொம்மனாட்டிகள் சந்தோஷமா இருக்கணும்னு வேண்டிக்கப்போறேன். அதைத்தவிர வேற எதுவும் செய்யத் தோணலை."

அவர் எழுந்திருந்து மனைவியை ஆரத்தழுவிக் கொண் டார். கன்னத்தில் முத்தமிட்டார். இரண்டு பேரும் கை கோர்த்து உட்கார்ந்து கொண்டிருக்க வண்டி காற்றைக் கிழித்துக் கொண்டு மிகுந்த வேகத்தில் வடக்கு நோக்கி போய்க் கொண்டி ருந்தது.

சுபம்